ஆசிரியர் நண்பன்

(Teacher's Friend)

3795

ஆசிரியர் :

V. C. காளியப்பன்.

தேவி நூற்பதிப்பக

திருவூடல் தெரு, திருவண்

முதல் பதிப்பு: ஜூன் 1955.

விலை ரூ. 1—8—0

All rights reserved by the author.

ரஸ், திருவூடல் தெரு, திருவண்ணாமலை.

சமர்ப்பணம்.

திண்டிவனம் ரோமன் கத்தோலிக்
போதனுமுறை பாடசாலை மானேஜரும்,
எனது குருநாதருமான
ரெவரண்ட். பாதர் தாமஸ் கவான் டவ்வி
சுவாமி அவர்களுக்கு.

FOREWORD.

The celebrated author, Chaucer once remarked that a teacher gladly learns and teaches if he comprehends well the science of teaching. As realised by our educationists, at the lower stages, the activity of the boys and girls will take many forms, leading gradually upto a basic craft or craft suited to local condition, the whole of the curriculum should be harmonised with the general conception. There are some books by eminent professors of education and they have exerted hardly enough care in explaining the fundamental principles of teaching. But the learned author of this book, Sri. V. C. Kaliyappa Chettiar succeeds in explaining clearly and systematically the primary methods of teaching.

The subject discussed in this book is very significant and though general speculation with regard to it has been rife, no systematic presentation has been made till now as this. By the study of this book, it will be possible, for a teacher to gain some idea of the breadth, range and variety of the art of teaching. In fact, the teacher can escape from a certain amount of tedium in the class room, if he is quite and rich of the methods and systems of teaching. The book is prepared in the light of a long day teaching experience of the author, a school master, which will indeed help other teachers to enliven what is unhappy so often the dullest period in the curriculum.

The patient work of the author of this book which I had an opportunity to hear through the editor of 'Kalki' Sri. R. Krishnamoorthy in the Ely. School Teachers' Conference at Villupuram, that he has devoted to this task a good number of years and his mastery of the service both as scholar and as teacher are a sufficient guarantee that his illustration of the principles of teaching is harmonious and sufficiently correct. Sri. V. C. Kaliyappa Chettiar has by this opus magnum gained for himself the distinction of being the pioneer in the field into which many will doubtless follow him.

I commend this book to all school masters which will prove a very valuable aid to teaching and will help them to be conversant with the fundamentals of teaching.

TIRUVANNAMALAI (Camp)
25—6—'55.

Vai. Shanmugasundaram,
M. A., B. L.,
(Sir. R. K. S. Research Prize Winner,
Research Scholar, University of Madras.)

கருத்துரைகள்.

திருவாளர். வி. சி. காளியப்பன் அவர்களை அறியாத ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் இந்த சென்னை ராஜ்ஜியத்திலே இருக்க மாட்டார்கள் என்பது மிகையாகாது. விளம்பரம் வேண்டாத அவர், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தொண்டு உள்ளம் படைத்தவர். ஆசிரியர் தொழிலில் தனக்கேற்பட்ட ஆழ்ந்த அநுபவத்தை நூல் வடிவில் வடித்துள்ளார். புதிதாக ஆசிரியர் தொழிலை மேற்கொள்பவர்களுக்கும் அத்தொழிலில் வெற்றிகாண விரும்புபவர்களுக்கும் இந்த நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையும். ஆசிரியர் மேலும் இதைப்போன்ற நூல்களைத்தொடர்ந்து வெளியிடுவார் என எண்ணுகிறேன்.

திருவண்ணுமலை,
15—6—55.

ப. தாண்டவராயன்,
B.A., B.L,

உயர்திருவாளர் ஆசிரியர் வி. சி. காளியப்பன் அவர்கள் எழுதிய "ஆசிரியர் நண்பன்" என்னும் நூலை வாசிக்கப் பாக்கியம் கிடைத்தது. அதற்கு அணிந்துரை நான் கொடுப்பது ராமாயணத்தில் ராமர் இலங்கைக்குப் போகுந் தருவாயில் அணைகட்டுவதற்கு எல்லோரும் பாடுபட்டார்கள். அதில் அணில் அதனுடைய உதவி தந்த மாதிரி நான் இந்த நூலுக்கு அணிந்துரை கொடுத்திருக்கிறேன். இந்நூலிலுள்ள சாரம் சிறு கண்ணுடியில் பெரும் மலையைக் காண்பதுபோல் பள்ளி மாணவர், ஆசிரியர், பெரியோர்களும் படிக்குங்காலையில் பெரும் மலைதோன்றுவது அன்னியில் பசு மரத்தில் ஆணி இரங்குவதுபோல் மனதில் பதியும் என்பது என்னுடைய எண்ணம்.

சர்க்கார் அரும்பாடுபட்டு அன்புடன் எல்லோரும் வாழ ஐந்தாண்டுத்திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இந்த ஐந்தாண்டுத்திட்டம் முடிவடைவதற்கு இந்நூல்போல பலநூல்களும் மக்களுடைய ஒற்றுமையும் ஒருங்கே ஒற்றமைத்தால் கண்கண்ட தெய்வம் அஹிம்சா மூர்த்தி காந்திமகான் சொன்ன அருள்மொழி பச்சைப் பசேலென்றிருக்கும் இந்தியா என்னும் அருள்மொழி நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திருவண்ணுமலை,
15—6—55.

T. V. தேவராஜ முதலியார்,
M. L. C.

மதிப்புரைகள்.

பாடசாலை "ஒரு சேவா நிலையம்" என்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆசிரியர், மாணவர், பெற்றோர் இவர்களுக்கிடையேயுள்ள உறவு முதலியவற்றை விவரித்திருக்கிறார். ஆசிரியர்களுக்கு மிகவும் உபயோகமானது.

சிவகாசி,
20—2—55.

R. கூரத்தாழ்வார், எம். ஏ.
முனிபல் கமிஷனர்.

பிதாவுக்கும் மகனுக்கும் ஏற்படும் அன்புபோல், குருவுக்கும் மாணாக்கனுக்கும் ஏற்படவேண்டும் என்ற கருத்துடன் எழுதியிருக்கிறார். சிறுவர்களுக்குக் கொடுக்கும் கல்விப்பயிற்சியும், தேகப் பயிற்சியும் அவர்கள் நடத்தைகளைச் சீர்ப்படுத்துவதற்கும் அவர்களை தேசாபிமான முள்ளவர்களாய்ச் செய்வதற்கும், நல்ல பிரஜைகளாகச் செய்ய யோக்கியமுள்ளவர்களா யிருக்கவேண்டு மென்ற கருத்துடன் இந்நூலை இயற்றியுள்ளார். ஆசிரியர்களுக்கு உற்ற துணைவனா யிருந்து சேவா மனப்பான்மையை வளரச்செய்யும் என்று நம்புகின்றேன்.

"பாலை வனம் போன்ற இப்பூவுலக வாழ்க்கையைப் புஷ்பங்கள் ஆனந்தமாக மலரும் ஓர் நந்தவனமாக்கும் ஒரு சக்தி வடிவமாய் இந்நூலாசிரியர் விளங்கட்டும்" என்று நான் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. கிருஷ்ணமூர்த்தி,
கிராமகல அதிகாரி,
மதுரை ஜில்லா.

திருமங்கலம்,
20—2—55.

ஆசிரியர்கள் அறிவை விருத்திசெய்துக் கொள்ளவும், "அன்பு" என்ற குணத்தை ஆசிரியர்களிடம் பிரகாசிக்கச் செய்யவும், தனது இளைய சகோதரர்களான மாணவர்களைச் சகல விதத்

திலும் நல்ல பிரஜைகளாகச் செய்வதற்கு வேண்டியவைகளை இந் நூலில் ஆசிரியர் விவரித்திருக்கிறார்.

K. புருஷோத்தமன்,
சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்,
திருவண்ணாமலை.

திருவண்ணாமலை
12—1—55.

"Teacher's Friend" is a handy book, written on the rock-bed of experience. It is an honest effert to make every chance pedagogue a born-teacher.

A. Gopalakrishnan,
Junior Dy. Inspector of Schools
T'malai Range

Tiruvannamalai,
22—2—55

Rev. Fr. தாமஸ் சுவான் டவ்வி சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்பு.

பிறப்பு :— ஐரோப்பா தென்கிழக்கு பிரான்ஸ், நீஸ் நகரில் **23—12—1888-**ல் பிறந்தார்.

பெற்றோர் :— அயர்லாண்டைச் சேர்ந்தவர்கள். அடிமையாயிருந்த அயர் நாட்டைச் சுதந்தர இயக்கம் வலுவடையச் செய்து இராஜ துவேஷக்குற்றஞ் சாட்டப்பட்டு, மரணதண்டனை இடப்பட்டு, பின்பு பார்லிமெண்டால் தப்பித்து நாடு கடத்தப்பட்டவர்கள். ஆஸ்திரேலியாவில் குடியேறி சுயாட்சிக்கு அடிகோலி பிரதமர் ஆன சர் சார்லஸ் கவான் டவ்வி என்பவருக்கும் ஆல்மரியா லூயிஸ் அம்மையாருக்கும் கடைசிப் புதல்வனுக அவதரித்தார் சுவாமி தோமாஸ் கவான் டவ்வி.

படிப்பு:— பிரான்ஸிலுள்ள நீஸ் நகர் பெத்தி செமினேர் பள்ளியிலும், இங்கிலாந்தில் ஸ்டோனிஹர்ஸ்ட் கலாசாலையிலும், அயர் நாட்டில் தர்ல் பட்டணத்தில் பத்திரீசியார் கல்லூரியிலும் படித்து பி. ஏ. பட்டமும் பெற்றார்.

தொண்டு :— 24—9—1911-ல் குருவுமாகி தொண்டு செய்ய ஆரம்பித்தார். சீனாவுக்குப்போக விருப்ப மிருந்தாலும் **1911** டிசம்பரில் புதுவை வந்து, சேத்துப்பட்டு, வேலந்தாங்கல் முதலிய இடங்களில் சேவைசெய்து, கடைசியாக திண்டிவனம் தங்கி போதனா முறை பாடசாலையையும், அதற்கான கட்டிடங்களையும் நிர்மாணித்தார். "சிறுவர்களின் தோழன்" என்ற பத்திரிகையையும் நடத்தினார். **1931**-ல் மானேஜர் பொறுப்பை ஏற்று கல்வி சீர்திருத்தம் செய்தார்.

1. சுறுசுறுப்பும், கவனமும் பிள்ளைகளிடம் பயிற்சி செய்யப் பட்ட முக்கிய குணங்கள்.
2. "பள்ளிக்கூட ஒழுங்கு" ஏற்படுத்தினார்.
   a) குற்றச்சீட்டு முறை
   b) மாணவர் மன்ற முறை ஏற்படுத்தினார்
3. போதனை, மாணவரின் கவனமும், பாட வெற்றியும் உள்ளதாக இருக்கும்படி மூன்றுபடிகள் கொண்ட முறையை வகுத்தார்
   1. ஆசிரியரின் முன்கூட்டிய தயாரிப்பும் தெளிவான போதனையும்
   2. மாணவரின் கவனத்தையும் அறிவையும் சோதித்தல்.
   3. பாடத்தின்மீது பயிற்சி.
4. **1934**-ல் "டால்டன் பிளான்" ஆரம்பித்தார், பிள்ளைகள் தாங்களாகவே எதையும் செய்யும் சக்தியும்,உற்சாகமு மற்றவர்களாய் இருந்தனர். ஷெ பிளானுக்குரிய புத்தக சாலையும் ஏற்படுத்தாததினால் ஆறு மாதத்திற்குப்பிறகு கை விடப்பட்டது.

இவரது கொள்கை.

கல்வி :— கல்வியானது உடல், புத்தி, உணர்ச்சி, சித்தம் ஆகியயாவும் சரியாய் பயிற்றப்படவேண்டும். ஒழுக்கத்தோடு கூடிய கல்வி அமையவேண்டும் என்பது கொள்கை.

1941-ல் பூதவுடல் நீத்து புகழுடம்பெய்தினார். பத்திரிகையில் எழுதியும், நேரில் அயல் நாடுகளுக்குச் சென்று பொருள்திரட்டியும் **1918** முதல் **1936** வரை **15** லட்சம்தனது பேனா திறமையாலும் அயரா உழைப்பாலும் சம்பாதித்து ஷெ வேலைகளைச் சாதித்தார்.



திருவாளர். B. சீனிவாசன்
அவர்களின்

மதிப்புரை.

இந்நூலாசிரியர் ஆசிரியரின் இயல்பையும், பயிற்றுவிக்கும் ஆற்றலையும், பொதுஜனங்களிடையே பெறும் அநுபவங்களையும் இந்நூலினிடையே நன்கு தெளிவுற எடுத்துரைத்திருக்கிறார்.

ஆசிரியர் பண்பு வளர, ஊக்கமடைய, பொது ஜன முன்னேற்றத்திற்கு, கல்வி அபிவிருத்திக்கு இந் நூல் மிக அத்தியாவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுத் தொண்டின் ஆர்வமே இந்நூல் எழுதத்தூண்டி யிருப்பதுந் தவிர, அநேக இன்னல்களுக் கிடையேயும் வெளிவந்துள்ளது போற்றத்தக்கது.

இந்நூல் ஆசிரியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பெரிதும் பயன்பெறும். இந்நூலாசிரியர் இம்மாதிரி உபயோககரமான புத்தகங்களை மேலும் மேலும் வெளி யிட கடவுள் அநுக்கிரகம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

B. சீனிவாசன்,
தலைவர், தி. தா. ப. தலைவர்கள் யூனியன்.
மல்லவாடி,

நூன்முகம்.

என்னுடைய ஆசிரியர் தொழில் அனுபவம், பள்ளி அனுபவம், வெளியனுபவம் இவைகளைக் கொண்டும், அவ்வப்போது நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கொண்டும் ஒரு நூல் உருவமாக்கியுள்ளேன். "ஆசிரியர் தொழிலின் மேன்மையை யுணர்ந்து, நாட்டின் நல்ல பிரஜைகளைத் தயாரிக்கும்" ஆசிரியர்களுக்கு உற்ற துணைவனாக இருந்து உதவவும், அவ்வப்போது ஆசிரியர்களிடையே ஏற்படும் தோல்வி மனப்பான்மையை மாற்றி, சேவை மனப்பான்மை மனதிலேயே ஊன்றவும், வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும், கடமை யுணர்ச்சியுடன் உழைக்கவும், சகிப்புத்தன்மையை நிலை நாட்டி, அன்பு என்னும் குணத்தால் தொழிலின் மேன்மையைப் பிரகாசிக்கச் செய்யவும், பொது அறிவை அவ்வப்போது விருத்தி செய்து கொள்ளவும், நாட்டின் நலனுக்கு உழைக்கும் மார்க்கங்களையும், காரணங்களையும் அறிந்து கொள்ளவும் வேண்டியவைகளைச் சேர்த்திருக்கிறேன். நண்பர்கள் இந்நூலை உற்ற துணைவனாக ஆக்கிக்கொண்டு சேவை செய்வார்களென்று நம்புகிறேன்.

சுமார் 450 பக்கங்கள் கொண்ட எனது புத்தகத்தைச்சுருக்கி எழுதியிருக்கிறேன். அன்பர்கள் மேலும் விரும்பினால் இரண்டாவது பதிப்பில் இன்னும் விவரித்து வெளியிடுகிறேன். நூலில் ஏதாவது தவறுதல், சந்தேகங்கள் ஏற்பட்டால் அன்புடன் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கங் காட்டியவர்களுள் தலைமையானவர் மல்லவாடி பஞ்சாயத்து தலைவர் **பா. சீனிவாசன்** அவர்களாவர். அவருக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். இன்னும் இந்நூலுக்கு அணிந்துரைகள் நல்கிய அன்பர்களுக்கு என் வணக்கம்.

பிழைகள் களைந்து வெளியிட முயன்றும் இந்நூலில் சில அச்சுப்பிழைகள் தவறி இடம் பெற்றுள்ளன. இதனைக் குறித்த காலத்தில் செவ்வனே அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த **சுதந்திரதேவி அச்சகத்தார்க்குப்** பெரிதும் நன்றி செலுத்துகிறேன்.

இங்ஙனம்,

திருவண்ணாமலை,
15—6—55.

வி. சி. காளியப்பன்.

பொருளடக்கம்.

			பக்கம்.
1	ஆசிரியர்	...	1
2	பள்ளிக்கூடம்	...	14
3	கல்வி	...	20
4	மாணவர்	...	33
5	போதனை	...	38
6	பெற்றோர்	...	57
7	பரீட்சை	...	—
8	விளையாட்டு	...	60
9	நிதி	...	61
10	சேவை	...	62
11	நம்நாடு	...	63
12	புத்தகம்	...	69
13	உபகரணங்கள்	...	71
14	சில விவரணங்கள்	...	75
15	கிராமக் கைத்தொழில்கள்	...	78
16	உழைப்பால் உயர்ந்தவர்கள்	...	79
17	சர்க்காரின் நோக்கம்	...	82
18	காந்திஜி கருத்து	...	83
19	செஞ்சட்டை இயக்கம்	...	—
20	மதுபானம்	...	84
21	மாதர்நலம் அல்லது சமூகசேவை	...	85
22	ஹரிஜன முன்னேற்றம்	...	—
23	தேசீய சுகாதாரம்	...	86
24	உலக அறிவு	...	87
25	பொது விஷயங்கள்	...	92

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	15	மனப்பாண்மை	மனப்பான்மை
2	20	is	has
4	16	பேதே	போதே
4	26	காணேம்	காணோம்
10	29	அந்தஸ்த்தை	அந்தஸ்தை
10	30	தணிமையை	தன்மையை
11	12	கடுமொழி	கடும்மொழி
11	21	விலை யாடு	விளையாடு
14	22	வெண்டும்	வேண்டும்
16	6	பொருள்களை	பொருள்கள்
17	23	நேரந்தவராமை	நேரந்தவறாமை
18	4	காலந்தவராது	காலந்தவறாது
20	23	அவ்வாரே	அவ்வாறே
22	27	ஆசிரியரிகள்	ஆசிரியர்கள்
24	21	என் துணையும்	எள் துணையும்
28	12	ஸ்ரீமெவரஸ்	ஸ்ரீ மெவரல்
51	11	உறுப்பார்த்தல்	உற்றுப்பார்த்தல்
53	25	சபைரீட்	பரீட்சை
58	1	அக்க்றை	அக்கரை
61	24	எறு துணையாக	உறு துணையாக
62	18	ஸம்பந்தகுந்தபடி	ஸம்பத்தகுந்தபடி
85	7	பதுப்புட்டி	மதுப்புட்டி
123	4	கொழைத்தனம்	கோழைத்தனம்
123	15	படித்து	படித்தது



Rev. Fr. THOMAS GAVAN DUFFY
(1888 — 1911 — 1941)

R. C. TRAINING SCHOOL, TINDIVANAM. (S. A. Dist.)



(இந்நூலாசிரியர் பயிற்சிபெற்ற போதனாமுறை பயிற்சிக்கல்லூரி.)

COME LET US LIVE FOR AND WITH OUR CHILDREN.

I. ஆசிரியர்.

1. ஆசிரியர் பொது இலட்சணங்கள்:—

கல்லை யுருவாக்குகின்ற சிற்பியைப்போல் உலகில்
கருத்தை உருவாக்கியதன் கருவூலமாகிச்
சொல்லையுருவாக்கி அந்தச் சொல்லிதழ் சேர்மலராய்த்
துய்க்கின்ற நூல்கள்பலதுறைகள் தோறும் ஆக்கி,

வில்லையுயர் நாணேற்றிக் குறிபார்க்கும் நோக்கில்,
மேதினியில் சமூகமதை விளக்க முறப்பண்ணி
இல்லையறி யாமையென இகலிருளை நீக்கி
இன்ப ஒளிபாய்ச்சுபவன் ஆசிரியன் அன்றோ !

ஆசிரியர் நல்லதோற்றமும், திடகாத்திரமும் உடையவரா யிருத்தல் வேண்டும். கோபம் கூடாது. பாடத்தினிடையே கண்டிப்பும், மற்ற காலங்களில் முகமலர்ச்சியுடனும், அன்புடனிருத்தல் வேண்டும். பொது நலனுக்காகப் பாடுபடுபவராயும் பரோபகாரி யாயும் பிள்ளைகளின் முன் குற்றம் செய்யாதவராயும், போதனையா லன்றி நடத்தையிலும் நற்பாடம் கற்பிப்பவராயும், போதனைக்கு மாறாக நடவாதவராயும், சளையா மனப்பாண்மை உடையவராயும், பொறுமை, சுறுசுறுப்பு, அலுவலில் உற்சாகமுடைய குணங்களோடு இருப்பவராயுமிருக்கவேண்டும்.

ஆசிரியரின் குணகுணங்களே பிள்ளைகளுக்குப் படியு மாகையால் பிள்ளைகள் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு நல்லாசானாக யிருத்தல் வேண்டும். மனவேறுபாடு, ஜாதி வேற்றுமை இவைக ளின்றி "எல்லாம் ஒரே குலம்" என்ற முறையில் புஷ்பங்கள்போல் உள்ள குழந்தைகளை வாட விடாமல் நாட்டின் நற்குழந்தைகளாக ஆக்கி, உற்சாக முறையிலேயே மாணக்கர்களின் குணங்களை

வளர்ச்சியடையச் செய்யும் முறையில் மனதில் வேறுபாடு உண்டாக் காமல், சீர்திருத்தம் செய்யும் குணம் பெற்றிருத்தல் வேண்டும்.

தெய்வ வழிபாடு, ஜீவகாருண்யம், பட்சபாதமின்மை, திடசித்தம், சேர்ந்து வாழ்தல், தேசபக்தி, முன்னேறும் அவா, நேர்மை இவற்றில் சிரத்தை கொண்டுள்ளவராயிருத்தல்வேண்டும்.

உலகில் மனிதனுடைய முயற்சியில் சிறந்தது அவனது சுயேச்சையின் எழூப்புதலினுல் உண்டாகும் செயல்கள் ஆகும். ஆசிரியர் இத்தத்துவத்தை நன்கறிந்தால் அவருடைய சிறந்த கல்வித் திறமையினுல் அல்லது சாமர்த்தியமான போதனை முறையினுல் மட்டுமின்றி, பிள்ளைகளின் இயற்கைச் செயல்களை எழூப்புவதில் எவ்வளவு தூரம் சித்திபெறுகிருரோ அதுவே சிறந்ததெனக் கண்டறிந்துகொள்ளத் தவறமாட்டார்.

குழந்தை மனதில் அறிவு இருப்பதாக நினைத்துக் கொண்டு குழந்தையைத் துன்புறுத்தி அந்த அறிவை வெளிப் படுத்த முயலவேண்டாம். குழந்தையின் இயற்கைச் செயல்களுக்கு ஒட்டி அதன் மனதின் நுட்பத்தை அறிந்து அதற்கு ஏற்றவாறு அவனுடைய செயல்களின் நற்போக்குக்கு ஆவன செய்தல் வேண்டும்.

> *" A teacher is born, not made.*
> *A teacher is contact with the forty families not forty students."*

ஆசிரியர் ஒரு தட்டானுக்கு சமமானவர். தட்டான் செய்யும் நகைகளை அவன் அனுபவிப்பதில்லை. அதேமாதிரி பிள்ளைகளை நல்ல பிரஜைகளாக உற்பத்தி செய்துவிடுகிருர். ஆசிரியர் ஒரு திராசுபோலிருக்கவேண்டும். உணர்ச்சிகளைக் கட்டுபடுத்தி பண்புள்ள மனிதர்களாகவேண்டும்.

வன்னமலரீட்டமெலாம் வாய்மடுத்துச் சுவைத்தே
மதுஈட்டித்தருகின்ற வண்டினம்போல் இயற்கை
என்னுமலரீட்டத்தில் வையக வாழ்வென்னும்
கன்னல் பிழிசாறெடுத்துக் கலையுருவை யெழுப்பிக்

கவினெழுக உலகினுக்கே கரம்நீட்டி அளித்து
இன்னல்தரும் அறியாமை இகலிருளை நீக்கி
இன்ப ஒளிபாய்ச்சுபவன் ஆசிரியன் அன்றோ !

2. ஆசிரியர் தொழிலின்மேன்மை:—

உபாத்திமைத் தொழில் புனிதமானது. ஜனங்களுக்கு அத்தியாவசியமானது. ஜனங்களால் கௌரவமான ஸ்தானமாய் மதிக்கப்பட்டது. ஜனசமூகத்தில் ஒரு கௌரவமான அந்தஸ்து ஆகும்.

உபாத்தியாயர் குழந்தைகளின் ஆற்றல்களை மலரச்செய்பவர். கற்பது என்றால் வாழ்வது என்று கூறலாம். கற்பிப்பவர் என்றால் வாழ்விப்பவர் என்றே பொருந்தும். ஆகையால் ஒவ்வொரு ஊரையும் வாழ்விப்பவர் உபாத்தியாயரேயாவர். "நவபாரத சிருஷ்டி" என்னும் மகத்தானவேலையில் ஈடுபட்டவர்கள். ஐங்குரவரில் ஒருவராகிறார். பிள்ளைகளுக்குத் திறமும், அறிவும் ஆற்றலும் உண்டாக்குபவர் ஆசிரியர். உடலையும் உள்ளத்தையும் பண்படுத்துபவர் ஆசிரியர். எதிர்காலத்தில் முன்னேறிச் செல்லும் இளைஞர்களையும், யுவதிகளையும் தயாரிப்பவர்கள் ஆசிரியர்கள். துன்பத்தை இன்பமாக மாற்றிச் சிரித்திடும் இயல்புடையவர்கள் ஆசிரியர்கள். குறைந்தது 1000 பிள்ளைகளையாவது திருத்துபவர்கள்.

3. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்:—

பெரிய கோபுரத்திற்குக் கடைகால் என்ற அடிப்படையே கோபுரத்தைத் தாங்கி நிற்கிறது. நம் பாரதப்பண்பாட்டுக் கோபுரம் என்ற 45 கோடி மக்களையும் தாங்கி நிற்பவர்கள் அடிப்படையான ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள். அடிப்படை, ஆரம்ப, ஆதாரக்கல்வி ஆசிரியர்களிடம் கல்வி கற்றவர்கள் வருங்காலக் காந்திகளாக ஆக வேண்டும். இயற்கையையும், பழைய வரலாற்றையும் வாழ்க்கையோடு ஒட்டியே போதிப்பவர்கள். வாய்வழிக் கல்வியைவிடக் கண் வழிக்கல்வி அல்லது செயல்முறைக்கல்வியைப் போதிப்பவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள். தங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப உலகினையும், வாழ்வினையும் நேர்முகமாகத் தங்கள் மாணவர்களுக்குக்

காட்டிக் கற்பித்து விடுவார்கள். இதனுல்தான் முன்ஞேர்கள் ஆரம்ப ஆசிரியர்களை ரிஷிகள் எனப்பாராட்டிஞர்கள்.

ஆசிரியர் ஏன் ?

ஆசிரியர் எனத்தனியே ஒரு கூட்டம் இல்லாத காலமும் இருந்தது. விலங்கு முதலியனவற்றிற்கு ஆசிரியர் உண்டா? காட்டு மிராண்டிகளாய் வாழ்வாரிடையே பள்ளிக்கூடம் ஏது? இன்னும் நம்மிடையே எத்தனைபேர் தற்குறிகளாய் இருக்கிருர்கள்? ஆசிரியர்வாடை இவர்கள்மேல் வீசியதே இல்லை. இவர்களில் பலர் செல்வத்திலும், வீரத்திலும், அறிவிலும், அன்பிலும் சிறந்திருக்க நாம் காணவில்லையா? எழுதக் கற்றுக்கொள்ளாமலே எத்தனை யோ தாய்மார் பண்பாட்டின் முடிமணிகளாக விளங்குகின்ருர்கள்.

ஆனுல் இங்கு எல்லாம் ஆசிரியர் இல்லை என முடியுமா? ஆசிரியர் என்ற பெயர் வழங்காமல் போகலாம். பேசக் கற்றுக் கொள்ள வில்லையா? தாய்தான் சிறந்த ஆசிரியர். தொழிலையும் கற்றுக்கொள்கிருர்கள். பழையகாலத்தில் தந்தையரின் தொழிலையே பிள்ளைகள் செய்து வந்தமையால் வீட்டிலிருக்கும்பேதே கண்பார்க்க, கைசெய்ய, அந்தந்தத் தொழிலில் திறமை பெற்று அனைவரும் வாழ்ந்து வந்தார்கள். ஆனுல் பலதொழில் கற்க வீட்டிலேயே முடியாது. பிறரோடு கூடிவாழ்வதே உயர்வாழ்க்கையாகிவிட்டது. ஆகாயவிமானமும் பிறவும் உலகத்தையே ஒன்ருக்கி விட்டதால் நம் வீடு உலகமாக விரிந்துகிடக்கிறது. நம்மை மக்களாக வாழப் பயிற்றுவிப்பவரே ஆசிரியராவார். ஆசிரியக்கலை இன்று கடவுட் கலையாக விளங்குகிறது. வானெலிப்பேச்சைக் கேட்டே படிக்கலாம் என்பவர் சிலர். ஆனுல் வேடிக்கைப் பொருள்கள் என வாயைத் திறக்கின்ருர்களே அன்றி, அவர்கள் மனத்தினைத் திறந்தபாட் டினைக்காணேம். கேட்பதும் காண்பதும் ஒரு பெரியகலை. சிறுவர் களைக் காணவைத்தலும் கேட்கவைத்தலும் ஒரு கலை. அதுதான் ஆசிரியக்கலையாகும். நம் கண்ணும் காதும் காணும் அனைத்தினை யும் காண்பதில்லை. கேட்கும் அனைத்தினையும் கேட்பதில்லை. அந்தந்தப்போதில் எந்தெந்த நிலையில் மனமிருக்கிறதோ அத தற்கேற்பனவற்றைக் காணும், கேட்கும், (ஆகவே சிறுவர் மனத் தினை) எதிர்பார்ப்பதற்கேற்ப காணும்; கேட்கும். ஆகவே சிறுவர் மனத்தினை நாம் காட்ட விரும்புதற்கு, கேட்பிக்க விரும்புதற்கும்

ஏற்ப, பண் படுத்தவேண்டும்! காணவும், கேட்கவும் கூடியபடி மனத்தினைத் திருப்பியதும் அறிவுத் தினவெடுக்குமாறு தக்கதொரு சூழலில் சிறுவரை விடுவது, ஐயங்களை அகற்றுவது, உண்மைகளை இரத்தத்தில் பாயுமாறு செய்வது ஆசிரியர். இந்தக்கடமையை நிறைவேற்றுபவர்தான் ஆசிரியர். இதற்குத் தக்கபடி ஆசிரியர் தன்னைப்பழக்கிகொள்ளுதல் வேண்டும்; இல்லையானால் வானொலி இருக்க இவன் ஏன்? என்ற கேள்வி பிறக்கும்.

நாம் செய்யவேண்டியவைகள்:—

நம்மிடையே இன்று நிலைபெற்றுள்ள "அறிவில்லாமை" என்ற நிலையை விரட்டி அடிக்கவேண்டும். இரு போர் முனைகளில் போராட்டந் தொடங்கவேண்டும்.

முதலாவது போர் முனை: வருங்கால பிரஜைகளான இளைஞர்களை ஒருவர் பாக்கியில்லாமல் இப்பொழுதே கல்வியுள்ளவர்களாகச் செய்வது.

இரண்டாவது போர் முனை: நமது முதியவர்களுடையதாகும். நம் சமூகத்திலுள்ள முதியவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாமலிருக்கின்றனர். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும்.

நம் நாட்டில் கல்விச் செலவு குறைவு. ஒரு பையனின் வருடக் கல்விச் செலவு 0—8—9. இங்கிலாந்தில் ஒரு பையன் வருட சராசரிச் செலவு ரூபாய் 33—0—0. தற்காலத்தில் நாட்டில் தோன்றிய அறிவாளிகள் வெளிநாட்டுக் கல்வி பயின்றவர்கள்தான். ஆனால் நம்தேசம் குடிசைகளில் வசிக்கிறதை நினைவில் வைக்க வேண்டும். இனி மக்கள் முயற்சியின்றி சோம்பியிருப்பது தகாது. நம் நாட்டில் ஜாதிக் குப்பைகள் பெருகிவிட்டன. அவை மறையப் பாடுபடவேண்டும். கண்மூடிப் பழக்க வழக்கங்களை அன்பு வழியாகவே நாம் தொலைக்க முயற்சிக்கவேண்டும்.

இங்கிலாந்து ஒற்றுமை செறிந்த நாடு. இந்தியா வேற்றுமை நிறைந்த நாடாக இருக்கிறது. அதனால் சிறிய இங்கிலாந்துக்கு இந்தியா இரையாகி இருந்ததைக் கவனிக்கவேண்டும். பிரிட்டீஷார் இந்தியாவில் வாணிபஞ் செய்யுங்காலத்தில் ஔரங்கசீப்பும், சிவாஜியும் ஒற்றுமையாயிருந்திருந்தால் பிரிட்டீஷார் நிலைத்

திருக்கமாட்டார்கள். ஆசிரியர்களாகிய நாம் கிராமசேவையை மனதில் கொண்டு சுயராஜ்யம் நிலைபெறச் செய்யவேண்டும்.

இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுவதில் கவனிக்கவேண்டியவை:—

நமது இளைஞர்களைப் பொறுத்துத்தான் நம் நாட்டின் வாழ்வும் தாழ்வும் உள்ளது. 1950-வது வருடக் கணக்குப்படி பாதிப் பிள்ளைகள் படிக்கவில்லை. கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்கினால் எளிய முறையில் அமுலாக்கப்படவேண்டும். நாட்டில் ஏழைகள் அதிகம். அவர்களுக்கும் பிள்ளைகள் உதவி செய்ய வேண்டும். அதிகப் பிள்ளைகளும் வருவார்கள். இடவசதி மற்றவை களையும் சமாளிக்கலாம். பெற்றோருடன்கூடத் தொழில் செய்யும் மாணவன் தொழிலைக் கற்பதோடு நில்லாமல் தொழிலுள்ள மதிப்பை யும் அறிகிறான். தன்னம்பிக்கை வளரும். குடும்பக் கலை, அன்புக் கலை, சமூகமாக நடந்து கொள்ளும் கலை, பொறுமைக் கலை, மதுர மொழி பேசுங் கலை, கோபப்படாதிருக்கச் செய்யுங் கலை, ஆகிய வற்றை நாம் கல்வி போதிப்பதில் கவனிக்கவேண்டும். பள்ளியில் முழுப்பற்றுதல் வைக்காவிட்டால் இவ்வேலைக்கு லாயக்கல்ல.

ஆசிரியர் மாணவ்ரிடையே உறவு:—

எந்தக் கல்வி முறைக்கும் உபாத்தியாயர்களே முக்கிய மானவர்கள். ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற மூன்று விஷயங்கள் முக்கியமானவைகளாக இருக்கின்றன.

1 மாணவர்களின் மனப்பான்மையை அறிய ஆசிரியர் நன்கு பயிற்சிபெற வேண்டும்.

2 மாணவர்கள் பால் தங்களுக்குள்ள பொறுப்பை ஆசிரியர் உணர வேண்டும்.

3 குறைந்தபட்ச வாழ்க்கை வசதிக்காவது உபாத்தியர்களுக்கு ஊதியம் கிடைக்க வேண்டும். பொதுஜனங்கள் ஆசிரியர் பால் அக்கறை காட்டவேண்டும். ஆசிரியருக்குக் கர்வம் கூடாது. இது மனிதனைப் பிரிக்கும்.

குருகுல முறை அமுலுக்கு வந்தால் உண்மையான பலனளிக்கும். மன ஒருமை ஏற்பட்டால் அறிவுக்களஞ்சியம்

திறக்கும். உறுதி குலையாத நம்பிக்கை, துணிவு, உள்ளவர்களை உற்பத்தி செய்யவேண்டும்.

மனித உள்ளம் சிறைப்படுத்தப்பட்டால் அதன் மறு புறத்தே இருக்கும் ஆன்மா சிறைப்படும். சமுதாயமும், உலகமும் பின்னடையும், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர மனதை வளரவிடாமல் கட்டுப்படுத்துதல் கடமையாகாது. சத்தியத்துடன் ஜனநாயக சமுதாயம் செயல் படுவதற்கு நற்பண்பும், உறுதியும் உள்ள தலைவர்களைப் படைக்கவேண்டும். நல்ல உறவு ஏற்படும். உபாத்தியாயரிடம் பூரண நம்பிக்கை ஏற்பட்டால் மதிப்பு தானாக உண்டாகும்.

ஆசிரியர் உடை:—

ஒற்றுமை உணர்ச்சியை உண்டுபண்ண பொது உடுப்பு ஒரு முக்கிய சாதனமாகும். ஆசிரியர்கள் எல்லோரும் இந்த நாட்டின் பண்பாட்டிற்கேற்ப மீண்டும் மரியாதையைக் குறிப்பதும், பகட்டில்லாததுமான ஒரே பொது உடுப்பை அணிவது நல்லது. மற்ற சர்கார் உத்தியோகஸ்தர்களை விட ஆசிரியர்கள் பெருமை வாய்ந்தவர்கள். மிகுந்த பிரயாசை, கவலை, பொறுப்புடைய தொழிலாகும். பெற்றோரிடம் பெறாத அறிவை ஆசிரியர்களிடம் பிள்ளைகள் பெறுவார்கள். மாணவன் யார்? ஆசிரியர் யார்? என்று கண்டுகொள்வதே சிரமமாய் உள்ளவாறு ஆசிரியர் உடுப்பை அணிவது கூடாது. ஆடம்பரம், பகட்டு அவசியமில்லைதான். ஆனால் கௌரவமும் கண்ணியமான தோற்றமும் உபாத்தியாயர்களுக்கு அவசியம். கற்பிக்கும் திறமை மட்டுமிருந்தால் போதாது. ஒழுக்கமும், உயர் குணமும், சமரச மனப்பான்மை, ஜீவகாருண்யம் தேவை. உடை விஷயத்தில் ஆசிரியர் ஏளனமாயிருக்கக்கூடாது.

ஆசிரியர் குறைகள்: —

உணவுக்கு அடுத்தபடி கல்வியாகும். கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்கள் ஊதியக் குறைவினால் கஷ்டப்படக்கூடாது. கல்வியில் வெற்றி காணமுடியாது. நம் நாட்டில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் சாதாரண சேவகன் சம்பளத்தை விடக் குறைவாயுள்ளது. பாடசாலைகளில் பாடத்தை நடத்த ஊக்கம்,

உற்சாகம் உள்ளத்தில் மகிழ்ச்சியுண்டாக வேண்டும். ஆகையால் யூனியன்கள் மூலம் குறைகளைச் சர்க்காருக்குத் தெரிவித்து நிவர்த்தி செய்து நாட்டின் தேவையைக் கவனிக்கவேண்டும். தனி முயற்சிகள் பயன் படாது என்பதை ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும். பிரைவேட் சொல்லிக்கொடுக்கும் வேலையில் அமராமலிருக்கும்படி சர்க்கார் கவனித்து ஊதியத்தை உயர்த்தவேண்டும். அப்பொழுது தொழிலின் கௌரவத்தை உணர்வார்கள்.

ஆசிரியர் யூனியன்:—

ஆசிரியர் சிறந்த அறிவாளிகள். தேசத்திற்குப் புத்தி புகட்டுபவர்கள். வழிகாட்டுபவர்கள். எறும்புகளைப்போல் வேலை செய்தால் வெற்றி கிட்டும். குறுகிய கோணல் மனோபாவத்தை விட்டு ஒத்துழைக்கவேண்டும். ஆகையால் ஆசிரியர்கள் கூட்டுக் கழகங்களை (Teacher's Unions) அமைத்துக் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தியடையவேண்டும்.

ஆசிரியர் முன்னணி:—

பிள்ளைகளின் மனதில் சிறந்த லட்சியங்களைப் பதிப்பதற்கு ஆசிரியரது வாய்ப்பேச்சுப் பெரிதும் பயன்படுவதல்ல; அவரது நடத்தையே பயன்படுவதாகும். நற்பண்புகள் பெற்று, வீர மக்கள் நாட்டில் பெருகவேண்டுமானால் நல்லாசிரியர்கள் அமையவேண்டும். ஆசிரியத்தொண்டிற்கு வேண்டிய குணம்சங்கள் பொருந்தியவரைத் தேர்ந்தெடுத்தல் மட்டும் போதாது. அவை விருத்தி பெறுவதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்கள் ஆக்கிக்கொடுக்கவும் வேண்டும். மனிதனாய்ப் பிறந்த எவனும் எப்போதாவது பரிபூரண நிலையை அடையக்கூடியவனல்ல. அந்நிலையை அவாவி எப்போதும் முயல வேண்டியவனாயும் முயலும் ஆற்றல் படைத்தவனாயும் இருக்கக் கூடும். மேலும் என்னதான் செய்தபோதிலும் எல்லா ஆசிரியரையும் ஒரே தரத்தவராய் அமைக்கமுடியாது. அறிவு, பண்பாடு, ஒழுக்கம், உண்மை கடைபிடித்தல் முதலிய துறைகளிலே சிலர் மற்றவரிலும் சிறந்திருப்பர். வேறு சிலர் தங்கள் குறிக்கோளை செயல் முறையில் அநுகூலத்துடன் நிறைவேற்றுவதில் சிறந்திருப்பர் இதனால் பல துறைகளிலும் தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும்

ஏற்ப மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாய்த் தொண்டாற்றுங் கடமை பலருக்கு ஏற்படும். இங்ஙனம் ஆசிரிய உலகிற்கு வெவ்வேறு துறைகளில் வேண்டிய பணிகளைப் பயன் கருதாது செய்து கிடப்போரே ஆசிரியர் முன்னணியெனப் பேர் பெறுவதற்கருகர்.

உழைப்பின் மேன்மை:—

உடலுழைப்பு உயர்வைத்தரும். உள்ளத்தில் சுயமுயற்சியும், தன்னம்பிக்கையும் ஏற்படவேண்டும். தேசிய சொத்தில் தனக்கும் ஒரு பங்கு உண்டு என்பதை ஆசிரியர்களாகிய நாம் உணர்ந்து வேலை செய்யாவிடில் தேசவுடைமை மூலம் பொருளாதார முன்னேற்றம் என்றும் வெறும் கனவாகவே முடியும். சிலர் உழைப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயல்வது சகஜமாகி விட்டது. கடமை என்ற உணர்ச்சியுடன் முன்னாளில் குருகுல முறை ஆசிரியர்கள் உழைத்து வந்திருக்கின்றனர். படிப்பையும் அந்தஸ்தையும் அப்பால் தள்ளிவிட்டு அசங்கியமான வேலையானாலும் கூசாமல் செய்ய முன்வரவேண்டும். உடலுழைப்பில் அழுக்கும் அசங்கியமும் பார்த்துக் கொண்டிருந்தால் நடக்காது. எவ்வளவு கீழ்த்தரமான வேலையையும் செய்யச் சித்தமாக உள்ள மக்கள் நிரம்பிய நாட்டிற்கே நல்வாழ்வு உண்டு. உடலுழைப்பை அகௌரவம் என்று எண்ணுகிற மக்கள் வாழும் நாடு உருப்படாது. அங்கு வறுமைதான் கோரத்தாண்டவமாடும்.

உழைப்பின்மூலம் நாட்டின் செல்வம் பெருகும். மக்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்தால் நாட்டின் நற்பெயரேகெடும். உழைப்பில் உற்சாக முண்டாகும்.

பிள்ளைகள் உழைப்பின் மேன்மையை உணர்ந்து படிக்கச் செய்யவேண்டும். படிப்பு உழைப்புக்கு ஊறுகாய்போன்றது. படிப்புக்கெல்லாம் உழைப்பு சாதம்போன்றதாகும்

நமக்கு உரிய வேலை :—

நமக்கு ஊதியம் மிகக்குறைந்ததா யிருப்பினும் நமக்கு ஜனசமூகத்தில் கண்யம் பொருந்திய ஸ்தானம் கொடுக்கப்படவில்லையென்னும் ஆதரவற்ற எண்ணம் நம்மிடையே உலவி வருகிறது.

நமது பொருப்புகளை உணர்ந்து தேச முன்னேற்றமே குறிக்கோளாகக் கொள்வதுந்தவிர தியாக புத்தியுடன் உழைத்துவந்தால் ஜனசமூகத்தில் அந்தஸ்து, கௌரவம் பெருகும். கல்வியபிவிருத்தி துறையில் சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு. உணர்ந்திருந்தாலும் கல்வியமைச்சருக்குக் கல்விவரையில் செலவிடப் போதிய பணம் எட்டுவதில்லை. நாமும் பொறுப்பை யுணராதுவிட்டால் **தேசத் துரோகிகள்** ஆவோம். நமது வேலை பள்ளியின் நான்கு சுவர்களுக்குள் அடங்கியுள்ளது எனக் கருதலாகாது. பெற்றோர்களை அறியவேண்டியது அவசியமாகும். தேகப் பயிற்சி, விவசாயம், பெண் கல்வி முதலியவைகளில் தக்க நிபுணர்களின் கொள்கைகளைப் பின்பற்றவேண்டும். ஆசார சீர்திருத்தங்கள், மசோதாக்களைப்பற்றி நம்முள் தனிப்பட்ட நபர் அல்லது சங்கங்களோ அபிப்பிராயம் கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டும். அறிவை வளர்த்து அதைச் சுதந்திரமாய்ப் பயன்படுத்தினால் நாடும், உலகமும் முன்னேறும்.

ஆசிரியர் கடமை:—

1. சமுதாயத்தில் தங்களுக்குள்ள பங்கை உணர வேண்டும்.

2. குழந்தைகள் நல்ல பிரஜைகளாகச் செய்யும் தொழிற்சாலைகளாகும் பள்ளிக்கூடங்கள்.

3. பாட புத்தகங்களினால் மட்டும் பாடம் வந்துவிடாது. பலதரப்பட்ட மக்களிடம் தொடர்பு கொள்வதின் மூலம் கல்வி ஏற்படும்.

4. புதிய சமுதாயத்தை உண்டாக்க ஆசிரியர்கள் மாணவர்கள் உறவும், கடமையும் வேண்டும்.

5. மாணவர்களின் அறிவை விசாலப்படுத்துவது.

ஆசிரியர்களுக்குப் பொது குறிப்பு:—

ஆசிரியர்கள் அந்தஸ்த்தை பெற்றோர் உணரவேண்டும். பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்கக்கூடாது. பிரம்பால் அடிக்கக்கூடாது. ஆண்மைத் தனிமையைக் கெடுத்துவிடும். விரும்பாத

விஷயங்களைக் கற்கச் சொல்லக்கூடாது. இளைய சகோதரர் களாகவே பாவிக்கவேண்டும். அன்புள்ளவர்களாக யிருக்கவேண் டும். சாந்த குணம் பிள்ளைகளின் குணங்களைப் பிரகாசிக்கச் செய்யும். தனது இளமைப் பருவத்தை ஆசிரியர் மனதில் வைக்க வேண்டும். மாணவனை ஆதரித்து ஒத்தாசை செய்ய அன்பு வளரும். பிள்ளைகளிடம் வீண் வம்புபேசக்கூடாது. பிள்ளைகளை கெட்ட பெயரிட்டும், பட்டப்பெயரிட்டும் கூப்பிடக்கூடாது. எந்தப்பையனை யும் பள்ளியில் கெடுதலாகப் பேசக்கூடாது. குற்றங்களைச் சொன் ளுலே இன்னும் அக்குற்றங்கள் பலமடையும். சில குறிப்பிட்ட பிள்ளைகளைத்திருத்த உடனிருக்கும் ஆசிரியர்களுடன் யோசிக்க வேண்டும். அன்பினுல் தன்வேலையைச் சுலபமாக்கிக் கொள்ள வேண்டும். கடுமொழிகள்கூறிப் பிள்ளைகளை வருந்தச் செய்யக் கூடாது. கடவுள் வணக்கத்துடன் பள்ளி ஆரம்பிக்கவேண்டும். அதனுல் ஐக்யமுண்டாகும், தெய்வபக்தி பெருகும். கற்பிக்க ஆசை யிருந்தால்தான் சாமர்த்தியமுண்டாகும்.

கீழ்க்கண்ட வாக்கியங்கள் பள்ளியில் யாவரும் பார்க்கக் கூடிய இடங்களில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

1. யாரையும் தூஷணை வார்த்தை பேசாதே
2. யாராவது பேசினுலும் கேளாதே

அன்பைப்பற்றிச் சமயம் நேரும்போதெல்லாம் உபதேசிக்கவேண்டும் விளையாடுமிடங்களில்தான் ஆசிரியரின் அதிகவேலைகளிருக்கின்றன.

அன்பு மூன்றுவிதம்.

1. புருஷன் மனைவி அன்பு
2. பெற்றோர் குழந்தைகள் அன்பு
3. சுற்றத்தார் சிநேகிதர் அன்பு

தாயைப்போல் சாந்தமாகவும், பாதுகாப்புச் செய்யும் தகப்பனைப் போல் பலத்தைக்கொடுக்கவும், சகோதர சகோதரியைப்போல் சேர்ந்து வாழ்க்கை செய்யவும், பந்துக்கள் சிநேகிதர்போல் சேர்ந்து வாழவும் ஆகும் பள்ளிநாள் சந்தோஷமானதாகும். ஆசிரியர் இதை லட்சியமாகக் கொள்ளவேண்டும். கிராமமுன்னேற்றத்திற் கான மார்க்கங்களை யோசிக்கவேண்டும். விவசாயிகள், கிராம மக்க

ளிடையே ஓய்வு நேர வேலையைப் பயன்படுத்தச் செய்யவேண்டும். டாம்பீகச் செலவுகளை நிறுத்தச்செய்யவேண்டும்.

(a) வாழ்வில் பணம் சம்பாதித்து அன்பை இழந்தவர்கள் ஒன்றும் சம்பாதிக்கவில்லை.

(b) அறிவை வளர்த்து எல்லோருடைய அன்பையும் பெறாதவர்கள் ஒன்றையுமே அடையவில்லை.

(c) அதிகாரத்தைக் கைப்பற்றியும் எல்லோர் அன்பையும் பெறாதவர்கள் ஒன்றையும் கைப்பற்றவில்லை.

ஆகையால் நாம் எல்லோரையும் நேசித்து, எல்லோர் அன்பையும் பெறவேண்டும் நமது குறுகிய நாட்களில்.

கல்யாணப் பெண்ணிற்கு எல்லா ஆடையாபரணங்களும் இருந்தாலும் அவைகளை அணிவித்து அலங்காரம் செய்யச் சிலர் இருக்கிறார்கள். அதுபோலக் கிராமங்களில் எல்லா வளங்களும் இருக்கின்றன. அவை நல்ல முறையில் மக்களுக்குப் பயன்பட ஆசிரியர்கள் உழைக்கவேண்டும். முயற்சி முழுதும் கிராமங்களுக்கே பயன்படவேண்டும். அப்பொழுதுதான் காந்திஜீ கனவு கண்ட லட்சிய கிராமத்தை உருவாக்க முடியும்.

ஆசிரியர் தொழில்:—

இத்தொழிலுக்குப் பிரியமுள்ளவர்கள்தான் வரவேண்டும். பாலியப்பருவத்தையே மனதில் வைத்து உற்சாகத்துடன் போதிக்கும் தொழிலாகும். மேல்நாடுகளில் பார்லிமெண்டு அங்கத்தினரை விட ஆசிரியருக்கு அதிக மதிப்பு உண்டு.

பயிற்சி காலம்:—

பயிற்சிகாலம் குறைந்திருப்பதால் மற்ற தொழிலுக்குப் போவதில்லை. மற்ற தொழில்களைப்போல் அவ்வளவு முக்கியத்துவமும் காட்டப்பட வில்லை. பயிற்சியை விஸ்தரிக்கும் கிளர்ச்சியில் ஆசிரியர், பயிற்சியாளர் ஒன்று சேரவேண்டும்.

ஆசிரியர் சேவை:—

ஐரோப்பாவில் சின்னஞ்சிறு நாடுகளிடையே ஓயாது ஆதிக்கப்போர் நடந்ததற்கு நேர்மாருக அண்டை நாடுகளான இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையே 6000 ஆண்டுகளில் ஒரு யுத்தம்கூட நிகழாதது நம்மிடையேயுள்ள பண்பாட்டின் பக்குவத்தைப் பறைசாற்றுகிறது. நம் நாட்டுப்பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு, சீனர்களால் அழைக்கப்பட்டு 24—10—54 முதல் சைனுவில் பெருமைபடுத்தப் படுகிருரென்பதும், அவருடைய யோசனைகளைச் சீனமக்கள் ஆவலுடன் கேட்கின்றனர் என்பதும் நேயர்கள் அறிவீர்கள். அறியாமையையும், வறுமையையும் விரட்டியடிக்க ஒவ்வொருவரும் கங்கணங் கட்டிக்கொள்ளவேண்டும். தேச நலனுக்கு தகுந்த வரையில் அவரவர்வாழும் பகுதியில் களிப்பு நிலவ ஏதாவது பணியாற்றவேண்டும். இதில் ஆசிரியர் பணி முக்கியமானது. சும்மா குறைகூறும் பழக்கத்தைக் கைவிட்டு எதையும் ஆக்கரீதியில் விமர்சனம் செய்யவேண்டும். கடமைகளை மனிதனுக்கல்லாமல் கடவுளுக்காகவே செய்யவேண்டும்.

May we teachers live for youth ;
May we teachers grow for youth ;
May we teachers educate ourselves for youth ;
May we teachers toil for youth ;
May we teachers if need be ready to immolate ourselves for you so that we may be born in the life eternal.

எனது அனுபவம்:—

பிள்ளைகளுக்கு ஒவ்வொரு தொழிலையும் நேரில் காண்பித்துப் பயிற்சியளித்தால் அவர்களுக்குகந்ததைப் பொறுக்கியெடுத்துக் கொள்கின்றனர். ஆகையால் கைத்தொழில் கற்க அவை நடைபெறுமிடங்களுக்குச் செல்லவேண்டும்.

பொது ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் ஆசிரியர்களை தலைவர்கள் பிரமுகர்கள் உபயோகிக்கக்கூடாது. அதனுல் ஆசிரியருடையவும், பிள்ளைகளுடையவும் வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது.

ஆசிரியர்களும், மாணவர்களும்:—

ஆசிரியர், மாணவர் ஸ்டிரைக், சத்தியாக்கிரகம் இவைகள் நடத்தக்கூடாது. அப்படி ஏற்பட்டால் படிப்பவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கு மிடையே பூசல் ஏற்பட்டு கல்விக்கு முற்றுப் புள்ளி ஏற்பட நேரிடும். பெற்ருேர், ஆசிரியர், பெரியோர்களை மாணவர்கள் வணங்கவேண்டும். இந்த வழக்கம் இல்லாமல் போவது சமுதாயத்திற்கே கேடு பயக்கும். கல்வி வளர்ச்சி வியாபாரம் போல் உள்ள நிலைமாறி குரு, சிஷ்யபாவம் மீண்டும் ஏற்படவேண்டும். அரசியல் விஷயங்களில் ஆசிரியர்கள் சாதாரண பிரஜைகளைப் போல் அபிப்பிராயம் தெரிவிக்க உரிமையுண்டு. ஆனுல் வகுப்பறையில் தங்கள் அரசியல் கருத்துக்களை மாணவர்கள் மீது திணிப்பது கூடாது. வேற்றுமை சக்திகள் அகலும்படியாகப் போதிக்க வேண்டும்.

II பள்ளிக்கூடம் (பாடசாலை)

1. பள்ளியும் வீடும்:—

பிள்ளைகள் பள்ளியில் வீட்டில் நடைபெறும் பல விஷயங்களைப்பற்றிப் பிற குழந்தைகளுடன் பேசிக் கலந்துகொள்வான். அப்பொழுது இயற்கையாயுள்ள குணங்கள் சற்று மாறுபட்டு புதிய எண்ணங்கள், புதிய சொற்கள், புதிய நடவடிக்கைகள் புகுந்து கொள்ளும். இச்சமயம் நல்லவையோ, தீயவையோ கற்கக்கூடும். அதுபோது பெற்ருேம் ஆசிரியரும் கலந்து சர்ச்சை செய்துகொள்ள வெண்டும். பள்ளியில் புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. பள்ளிக்கூடம் என்ருல் பெற்ருேருக்கு உண்டாகும் அச்சம் மாறவேண்டும். பெற்ருேரிடம் எப்படிச் சமமாய்ப் பேசுவது என்ற ஆசிரியர் குணமும் மாறவேண்டும். பெற்ருேருக்கு அநுபவம் அதிகம். ஆகையால் பள்ளிப் பாடங்களில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகள் பள்ளியில் சேர்ந்தவுடன் பெற்ருேரை அவமதிக்கின்றனர். பரீட்சையில் தேறவேண்டுமேயென்று பெற்ருேர்கள் பொருத்திருக்கின்றனர். ஆசிரியர், அதிகமான புத்தகங்கள், கருவிகள் வாங்கச்

சொல்லக்கூடாது. புத்தகம் இயற்றுபவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் லாபமே தவிர, பெற்றோருக்கு பெருந்தொல்லையாகிறது. பிள்ளைகளின் கல்வித் திறமையைப் பெற்றோருக்கு அறிவிக்க முயன்று, ஒத்துழைப்பைப் பெற்றால் கல்வியில் வெற்றி உண்டாகும்.

2. ஆரம்பப் பாடசாலை அமைப்பு:—

வெட்கப்படாமல் முயற்சிக்கும் கூடமாகும். கலைக் கோயிலாகும். சிறுவர், சிறுமியர்களின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடம். சுகாதார முறைப்படி கட்டவேண்டும். குளம், குட்டை, பாழ்கிணறு, குப்பை மேடுகள், யந்திர சாலைகள், ரோடுகள், சுடுகாடு முதலிய இடங்களுக்குச் சமீபத்தில் கட்டக் கூடாது. தரையமைப்பு உள்படக் கூரையாயிருந்தாலும் சுத்தமாக யிருக்கவேண்டும். வித்தியாசாலை விநோதசாலையாக இருக்க வேண்டும். தெற்குப் பார்த்த கட்டிடமாயிருப்பது மிகமிக நல்லது. இளஞ் சிறுவர்களை வசீகரிக்கும் முறையில் கல்வி ஸ்தாபனங்கள் அவசியம். ஏழைக் குடும்பங்களிலிருந்தும், சேரிகளிலிருந்தும் பள்ளிக்கு வரும் சிறுவர்கள் ஒரே நேரமாவது தங்களுடைய ஏழ்மையை மறந்து நேர்த்தியானதோர் சூழ்நிலையில் மனச்சாந்தியுடனும், பெருமையுடனும் வாழ வகை செய்யவேண்டும். இன்பம், சுறுசுறுப்பு ஏற்படவேண்டும்.

தன்னம்பிக்கையுள்ள காரியசிரத்தை காட்டும் திறமையான மாணவர்களை உற்பத்தி செய்வதென்பது கல்விக் கூடங்களின் லட்சியமாகும். அத்தகையவர் பெருகினால் நாட்டுக்கு நல்ல எதிர்காலம் நிச்சயம் உண்டாகும். உத்தமமானதும், சந்தோஷத்தைத் தரக்கூடியதும், சக்திகள் நிறைந்த இடமாயுமிருக்க வேண்டும். காலையில் எப்பொழுது பள்ளிக்குப் போகப்போகிறோம் என்ற ஆவலுண்டாகும்படி பள்ளி ரமணீயகரமாயிருக்கவேண்டும்.

பள்ளி நிர்வாகம்: —

பள்ளி, கிராமத்தில் சமூக சேவா நிலயமாகும். சென்ஸஸ் மிகமிக முக்கியமாகும். உடனே எடுக்கவேண்டும். பாடசாலையின் பெயர்ப் பலகை, தகவல் பலகை தொங்கவிட வேண்டும். நாட்டுக்

கொடியை அநாவசியமாக உபயோகிக்கக் கூடாது. சகல சாதி யாரும் வரக்கூடிய இடமாயிருக்கவேண்டும்.

கரும்பலகைகள் அதிகமிருக்கவேண்டும். அவை நன்கு எழுதும்படியாக இருக்கவேண்டும். போதனு உபகரணங்கள், ஆல்பம், நூல்நிலையம், பொருட்காட்சி, கைத்தொழில் சாதனங்கள், அபூர்வப் பொருள்களை, தோட்டவேலை சாமான்கள், விளையாட்டிடம் முதலிய வசதிகளிருக்கவேண்டும்.

பாடக்குறிப்பு தவறுமல் எழுதிவர வேண்டும். பாடப் புத்தகங்களைச் சரிவர உபயோகித்து காலை, மாலை சரிவர பாடம் நடைபெறவேண்டும். வேலையைச் சுலபமாக்கிக் கொள்ள சட்டாம் பிள்ளைகள் நியமித்துக்கொள்ளலாம். பரீட்சைகள் வாய்மொழியாக வும், எழுத்து மூலமாகவும் வைக்கலாம். தேக்கங்களின் காரணங்களை யறியவேண்டும். பாடசாலை ஒழுங்குமுறை, சீர்திருத்தம், தண்டனை யில் பலவிதம், வெகுமதி யளித்தல், குழு உணர்ச்சி, வீட்டுமுறை குடும்பமுறை, மாணவர் தலைமை, திறமையுள்ளவர்களைத் தேர்ந் தெடுத்தல், பஞ்சாயத்து சபை (Pupils Court) மாணவர் மன்றம் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படாத வேலைகளையும் கவனிக்க வேண்டும். தலைமை, உதவியாசிரியர்கள் ஒற்றுமையை அநுசரிக்க வேண்டும். சகலவித ரிக்கார்டுகளும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். பாடசாலைகள் ஒத்துழைப்பு, ஆசிரியர்கள் வீடுகளில் சென்று பார்வையிடுதல், கொண்டாட்டங்கள் நடத்துதல், ஐம்புலப் பயிற்சி முதலியவைகளை அநுசரிக்கவேண்டும்.

குருகுலங்கள்:—

மாணவர், ஆசிரியர், பெற்றோர் இவர்களின் கடமைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

விடுமுறை:—

ஆரம்பப்பள்ளிக்கு விடுமுறை அதிகம் கூடாது. மேல் நாடுகள்போல் ஒருவேளை படித்து ஒரு வேளை தொழில் செய்யலாம்.

வாழ்க்கைக்குப் பள்ளிக்கூடம்:—

பொருள்களை நேரில் பார்ப்பதிலிருந்து கல்வி ஆரம்பமாகிறது. இந்தத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டதுதான் கல்வி. கல்வியைத் துண்டாடக்கூடாது. சிந்தனை யென்பது காய்ந்து உலர்ந்து சருகுகளாயிருக்கக்கூடாது. ஒரு தோட்டம் போல் பசுமையாய் இருக்கவேண்டும். உயர்ந்த லட்சியங்களைப் போதிக்கப் பள்ளியில் பிரார்த்தனை மண்டபம் தனியாயிருக்க வேண்டும்.

வகுப்பறை:—

1. தீமை ஏதும் செய்யாதே
2. தீமை ஒன்றும் கேளாதே
3. தீமை ஏதும் பேசாதே

இவை மூன்றும் வகுப்பறையில் நன்கு பார்க்குமிடத்தில் எழுதப் பட்டிருக்கவேண்டும்.

பாடசாலைக் கட்டுப்பாடு:—

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உள்ள எல்லா சம்பந்தங்களும் அடங்கியதாகும். தனிப்பட்ட உணர்ச்சிகளைவிட்டு பொது நன்மைகளைக் கவனித்து நடக்கும் வாடிக்கைகளை அப்பியாசப்படுத்துவதே கட்டுப்பாட்டின் நோக்கமாகும். வகுப்பு அறையிலும், விளையாட்டு மைதானத்திலும் மாணவர்கள் மிக்க எளிய விதிகளால் கட்டுப்பாட்டுணர்ச்சியில் பயிற்சி பெறவேண்டும். ஆசிரியரின் உதாரணமே மிகவும் முக்கியம்.

மாணவர்களும் ஆசிரியர்களும் நேரந்தவராமை:—

மாணவர்கள் நேரந்தாழ்ந்து வருவதை சகஜமாகக்கருதி முகம்கொடுக்காமல் பாடசாலை துவக்கப்படும் குறித்த நேரத்தைக் கண்டிப்பாக வற்புறுத்தவேண்டும். ஆசிரியர் அரைமணி நேரம் முன்னதாக வந்திருந்தால் இவ்விதம் செய்யக்கூடும். அன்று வேண்டிய வேலைக்கு ஆரம்ப ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிடலாம்.

லாம். பெற்றோர்களுக்கு நேரத்தைப்பற்றிய கண்டிப்பும் பரவ வேண்டும். முதல் பீரியடை ஆயத்தங்களுக்காக உபயோகிக்கக் கூடாது. ஸ்தல நிலைமையை யொட்டிப் பள்ளி நேரமிருக்கலாம். காலத்தோடு தொடங்கல், காலந்தவறாது ஆஜராகுதல் இங்கிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வருடப் பிரமோஷன்:—

ஒவ்வொரு வகுப்புக்கும் வாய்மொழியாலும், எழுத்தாலும், அனுபவ சித்தத்தாலும் பரீட்சைகள் செய்து பிரமோஷன் செய்யவேண்டும்.

தேக்கம்:—

ஒரு வருடத்திற்குமேல் தங்கினால் வருடாவருடம் உற்பத்தி செய்யும் மாணவர்களின் தொகையைக் குறைக்கிறது.

தேக்கமும் போதனா விஷயங்களும்:—

ஒரு பிரிவில் 17 சதவீதம் பேர் சராசரிக்குமேல் புத்தி யுடையவர்கள். 66 சதவீதம் பேர்கள் சராசரி புத்தி படைத்தவர்கள். 80 சதவீதம் பேர்கள் போதிய மார்க்குகள் வாங்கலாம். ஆகவே ஒருவகுப்பில் 17 சதவீதத்திற்குமேல் தேராமலிருந்தால் குழந்தைகளின் பிற்போக்கான நிலைமை காரணமல்ல. ஸ்தாபனத்திலும், போதனையிலுமுள்ள குறைகளே காரணமாகும்.

தேக்கத்தை மதிப்பிடுதல்:—

தேக்க ஜாபிதா அவசியம். பையன் ஒருவகுப்பில் கழித்த வருடங்களைக் கணக்கிடலாம். மாணவர்கள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டவர்கள் வகுப்பிலிருந்தால் பாடசாலை அபிவிருத்தித் தடைபட்டிருக்கிறதென்றறிந்து பரிகாரங்களை தேடவேண்டும்.

இருதேக்கங்களுக்கு முக்கிய காரணம்.

1. பாடசாலை வருடத்துவக்கத்தில் சேர்க்காமல் வேறு சமயம் சேர்த்தல்.
2. வயது ஆகாத பிள்ளைகளைக் சேர்த்தல்.

மேலும் மிகச்சாதாரண காரணம்:— பாடசாலைக்குச் சிலர் சரிவர ஆஜராகாமையாகும். இவைகளைக்கூடியவரை கவனிக்கவேண்டும்.

தரம் பிரிக்காமை முன்னேற்ற மின்மைக்கு ஒரு காரணம்:—

1. பெரிய வகுப்புகளில் மாணவர்களைத் தரம்பிரிக்க வேண்டும்.
2. பிற்போக்கான மாணவர்களுக்குப் போதனை செய்ய விசேஷ ஏற்பாடு செய்யாதிருத்தல்.

தேக்கமும் போதனைக் குறைகளும்:—

ஸ்தாபனக் குறைகள், போதனைக் குறைகள், ஆசிரியர் சிரத்தையின்மை, ஆயத்தக் குறைவு இவைகளால் தேக்கமேற்படும். மார்க் ரிஜிஸ்தர், பிரமோஷன் ஜாபிதா, ஸ்டாக்னேஷன் அட்டவணைகளைச் சரிவர வைத்து அடிக்கடி பயன்படுத்திக் கொள்ளுதல் நலம்.

வாபஸ்:—

படிப்பு முடிந்தும், அல்லது வேறு பாடசாலைக்குப் போகவோ ரிகார்ட் ஷீட் அல்லது ரிலீவிங் சர்டிபிகேட் கொடுத்தனுப்புதலாகும்.

வீணகுதல் (வேஸ்டேஜ்)

ஐந்தாம் வகுப்பை முடிக்காமல் உண்மையில் எழுதப் படிக்கத் தெரியுமுன்பு மாணவர்கள் விலகிவிடுவதாகும். இதனல் அவர்களுக்குச் செலவிட்ட பணமும், பிரயாசையும் வீணகும். நஷ்டமுமானது.

வீணதலைத் தடுக்க யோசனைகள்

1. பிரசாரம் செய்வது.
2. பாடசாலை நேரங்களை மாற்றுவது.
3. சரியான வயதில் சேர்ப்பது.
4. விடுமுறைகள், நீண்ட விடுமுறைகளைக் கிராமத்திற்குத் தக்கபடி மாற்றிக்கொள்ளுதல்.

III கல்வி.

கல்வியின் நோக்கம்: —

சிறுவர், சிறுமிகளின் நடத்தையை வளர்ப்பதே கல்வியின் நோக்கமாகும். கெட்ட எண்ணங்கள், ஆபாசப் பேச்சு, துராசாரம், அநாகரீகம், சுயலாபம், நாடிச் செய்யும் மோசம், சுரண்டல் இவற்றை உறுதியுடன் எதிர்த்துப் போராட வேண்டும். **நாட்டின் நல்ல பெயர்** தான் நம் குழந்தைகளுக்கு நாம் வைத்துப் போகும் அற்ப சொத்தாகும்.

கற்றல் என்றால் எல்லையற்ற அறிவுக் களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே கற்றலாகும்.

சரியான முறையில் கல்வி பயிலாவிடில் சிறியோர், பெரியோர், மெலியோர், வலியோர், உத்தியோகிகள், உழைப்பாளிகள், ஆள்வோர், ஆளப்படுவோர் இவர்களுக்கிடையில் உட்கலகமுண்டாகி உலகம் தரும முறையில் தடுமாற நேரிடும்.

சுதேசக் கல்வி நிலைத்தால் தேசம் தேசமாகி, மனுஷத்தரம் அதிகரித்து, ஒற்றுமை கைகூடி உபகார சிந்தை மேலிட்டு, உண்பதும் உடுப்பதும் ஒழுங்காகி, நிற்றலும் நடப்பதும் நேராகி, வீணர்களும் வீரர்களாகி, தீனர்களும் தீரர்களாகி அரசுரிமைக்கு அன்பும் ஆதரவும் ஏற்பட்டு, குடியர் மறைந்து, கள்வர் ஒழிந்து, மடியர் ஒழிந்து, மாள்வோர் குறைந்து, ஆட்கள் பெருகி அறவோர் சிறந்து, அரசு ஓங்கி, அருளே தழைக்கும்.

நமக்கு உணவில் உண்டாகும் வேட்கை நமது உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத உணர்ச்சியாகும். அவ்வாறே நம் அறிவின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத துணையாகக் கல்விப் பயிற்சியைக் கைக்கொள்கிறோம்.

கல்வியென்பது இளமையோடு மட்டும் தொடர்புடையது அன்று; முதுமை வரையிலும் தொடர்புடையதாகும்.

ஆரம்பக்கல்வி:—

ஜனநாயகம் வெற்றிபெற ஆரம்பக் கல்வியை யாவரும் மதிக்கவேண்டும். ஒரு பெரிய கோபுரத்தை எடுத்துக்கொண்டால் எத்தனை பிரிவுகள்? இந்தப் பெரிய கோபுரத்தைத் தாங்குவது எது? கோபுரந்தாங்கி பொம்மைகளா? இல்லை. கோபுரத்தைவிட அகலமாக ஆழத்தே கண்ணுக்குத் தோன்ருது பூமிக்குள் மறைந்து கிடக்கும் கடைக்கால் என்ற அடிப்படையே இந்தக் கோபுரத்தைத் தாங்கிநிற்கிறது. அந்தமாதிரி கல்விக்கு அடிப்படை ஆரம்பக் கல்வியாகும். நம் எதிரில் கல் இருக்கிறது. தலையிலும் இடிக்கிறது தெரிகிறது. ஆனால் எங்கும் வியாபித்திருக்கும் காற்று தெரிவதில்லை காற்றைப்போல் எங்கும் வியாபித்திருக்கவேண்டியது ஆரம்பக் கல்வி. காற்றுக்குண்டான சக்தி ஆரம்பக்கல்விக்குண்டு. காற்று நமக்கு எப்படி ஜீவாதாரமாக எங்கும் பரவியிருக்கிறதோ அம்மாதிரி ஆரம்பக்கல்வியுமிருக்கவேண்டும். குழந்தைப்பருவம் எவ்வகைக்கும் ஏற்றது.

கல்வி கற்பித்தல் ஒரு கைங்கரியம்:—

(Education as Service) ஒரு ஏழை தேசத்தைத் தூக்கிவிடவேண்டும். சேவையில் இன்பமுண்டு. தயையற்றவன் திரேகம் பிரயோஜனமில்லை. கற்பிக்கும் தொழிலே எல்லா இன்பங்களுக்கும் மேலானதென யார் கருதுகின்றனரோ அவர்களே உபாத்தியாயர்களாக இருக்கத் தகுந்தவர்கள். ஆசிரியர், அன்பு, விவேகம், நிராசை, நல்லொழுக்கம் முதலிய குணங்கள் படைத்தவராயிருக்கவேண்டும்.

1. விவேகம்:— எவ்விஷயங்களைப் போதிப்பது என்ற ஆராய்ச்சி செய்பவரா யிருக்கவேண்டும்.
2. நிராசை:—சந்தோஷமும் திருப்தியும் நிரம்பிய கவலையற்ற மனமே கல்வி கற்பிப்பதற்கு மிகவும் ஏற்றது
3. நல்லொழுக்கம்:— மனவடக்கம், செயலடக்கம், பொறுமை, சந்தோஷம், தன்னம்பிக்கை, ஏகாக்கிரம்.

ஆதாரக் கல்வி அம்சங்கள்:—

1. மூளைக்கும் உடலுக்கும் சேர்ந்து வேலையளித்தலே லட்சியம்.

2. உடலுழைப்புக்கு ஒரு சிறந்த கௌரவம் அளிப்பது தான் ஆதாரக் கல்வியின் சிறந்த அம்சம்.

3. பொருள் உற்பத்தியே சிறந்தது. ஒவ்வொரு மாணவனும் உற்பத்தியாளனாக மாறுவதால் பொறுப் புணர்ச்சி, தன்னம்பிக்கை என்ற குணங்கள் உண்டாகிறது.

ஆரம்பக் கல்விபற்றி அறிஞர் கருத்து:—

(ஈ. டி. ஆர்னால்ட்.)

ஆரம்பக்கல்வியே எவ்வகைக் கல்விக்கும் அஸ்திவாரமானது. அது பலமற்றதாயின் யாவும் பலமற்றதாகும்.

முதியோர் கல்வி:—

வளர்ச்சியடைந்தவர், இளம்வயதில் படிக்க வசதியற்றவர், வசதிகளை இழந்தவர்கள், இவர்களுக்கு இரவு பாடசாலை அவசியம். எழுத்தறிவு பெறுவது மட்டுமல்ல; உலக அறிவும் பெறவேண்டும். சுதந்திர இந்தியாவில் வோட்டர்கள் படித்தவர்களாக வேண்டும்.

1. எழுத்தறிவு சமூகக் கல்வியின் உயிர்போன்றது கிராமங்களுக்கு எழுத்தறிவூட்டக் கல்லூரி மாணவர்கள் செல்லவேண்டும்.

2. கிராம மக்களின் வாழ்க்கை வளமும் இனிமையும் பெறுவதற்கு, பலதரப்பட்ட சமூகக் கல்வியைப் போதிக்கவேண்டும்.

3. கிராம மக்கள் உயரவேண்டுமானால் தனி மனிதனின் சுகாதாரம் சமூக சுகாதாரம் கூட்டுறவு முதலியவற்றில் அறிவூட்ட வேண்டும்.

4. கிராம மக்களிடம் நெருங்கிப்பழகித் தங்கள் செயல்களாலும் நல்வாழ்வின் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் ஆசிரியர்கள்.

பெண் கல்வி: –

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகவாழ்வ

மிந்த நாட்டிலே" என்ற பாரதி வாக்கிற்கிணங்க பெண்கள் படிக்க வேண்டும்.

1. கணவனோடு ஒற்றுமை.
2. சம்சார காரியத்தைச் சிறப்பாக நடத்துதல்.
3. நன்னடத்தை.
4, ஜீவகாருண்யம்
5. மாமியாரோடு பழகுதல்
6, பிள்ளைகளை வளர்த்தல்
7. பண்டங்களைச் செட்டாய்ப் பார்த்தல்
8. பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தல்
9. தேசத்திற்காக பாடுபட்ட ஸ்திரீகள், புராணங்களில் வரும் புலமைகளின் வரலாறுகள் படித்தறிந்து நடத்தைகளைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும் கல்வி தேவையாகும்.

ஆடவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியை விடப் பெண்களுக்கு அளிப்பது இருமடங்கு லாபகரமானது. ஆண்கள் கடமைகளை மறக்கலாம். பெண்கள் மறக்க மாட்டார்கள். இந்த நாட்டின் விமோசனம் ஸ்திரீ கல்வியைப் பொறுத்திருக்கிறது. ஆண் வர்க்கத்தைவிட பெண் வர்க்கத்திற்கு மூளையதிகம். ஆண்களை வெளிக் கிளர்ச்சிகள் இருக்கின்றன. பெண்களுக்கு இவைகிடையாது. குழந்தைகளை வளர்ப்பது கல்லூரியை நடத்துவது மாதிரி. பெண் எல்லாம் ஆசிரியர் அல்லது டாக்டர் வேலைக்குப் போய்விட்டால் நாட்டின் ஜனத்தொகை குறைந்துவிடும். படித்த பெண்கள் குடும்ப வேலைகள் செய்து மற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கவேண்டும். பெண்கள் படித்தால் வேலைக்குப் போகவேண்டும் யென்று எண்ணக் கூடாது. போனால் மேலதிகாரிகளுக்கும் பணிய வேண்டுமல்லவா ? இதைவிடக் கணவன்மாருக்குப் பணிவது உசிதமல்லவா ? ஒருவரையொருவர் நம்பியிருப்பது சுதந்திரத்தை விட அவசியமானது. ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருக்கவேண்டுமென நினைத்தால் குழப்பம்தான் ஏற்படும். ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் கல்வி யறிவு பெற்றிருப்பின் அவர்கள் வழிவழி வரும் குடும்பக் குழந்தைகளும் கல்வியின் அவசியத்தைத் தெரிவர். தாய்மார்கள் குழந்தைகளுக்குக் கல்வி ஊட்டும் வாய்ப்பும் நேருகிறது.

ஆதாரக்கல்வி தினசரி அலுவல்களில் சில:—

1. உடற்பயிற்சி
2. தோட்ட வேலை
3. குடும்ப வேலை
4. படிக்கும் நேரம்
5. மௌன நூற்பு
6. அடிப்படைத் தொழில்
7. கலைப்பயிற்சி
8. பிரார்த்தனை

கல்வி:— கல்வி மூன்று வகைப்படும்.

1. அறிவுக்கல்வி
2. நல்லொழுக்கக் கல்வி
3. தேகப்பயிற்சிக் கல்வி

கல்விமுறை சீர்திருத்தத்தின் அவசியம்:—

தற்காலக் கல்வியைக் கொண்டு அவன் சுயமாக எந்தத் தொழிலும் செய்ய முடியாது. குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யும் கல்வியாகும். வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறது. இதையே பாரதியார் சொல்லியுள்ளார்.

" செலவு தந்தைக்கு ஓராயிரம் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலம் ஒரு எள்துணையும் கண்டிலேன் "

என்று நெஞ்சம் குமுறுவது தவிர வேறு வழியில்லை ஆகையால் நாட்டுக்கேற்ற கல்வி பரவவேண்டும்.

தற்காலக் கல்வி முறையின் குறைகள்:—

கல்வியின் நிலைமை இன்று அடியோடு உருத்தெரியாமல் மாறிவிட்டது. கல்லூரிப்படிப்பு இரண்டு மடங்காக யிருக்கிறது. செகண்டரி கல்வி 60 லிருந்து 70 சத விகிதம் அதிகரித்திருக்கிறது ஆனல் எலிமெண்டரிக் கல்வி முன்பிருந்த நிலையிலேயே யுள்ளது. குருகுலவாசக் கல்வியில் எளிய வாழ்க்கை உயரிய சிந்தனை அடங்கி

யிருந்தன. தற்சமயம் அடக்கம், குடும்ப வாழ்க்கை கட்டுப்பாடு அவசியம். அநேகமாக மறந்து விட்டோம். லட்சியங்களில் அவ நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களின் உரிமை சலுகைகளை உத்தரவாதம் செய்யும் ஒரு சாசனம் வேண்டும். உன்னதமான தொழிலுக்கு உயரிய அந்தஸ்துடன் சமூகத்தில் வாழ்வதற்குள்ள வசதி செய்யவேண்டும்.

கல்வி விஷயத்தில் சர்க்கார் தலையிடக்கூடாது. கல்வி நிபுணர்களிடம் விடவேண்டும். மனதை விசாலப்படுத்தி, திருஷ்டியை விஸ்தரிக்கும் கல்வியமையவேண்டும். தற்காலப்படிப்பு பழைய மோஸ்தரிலேயே யிருக்கிறது. மேலும் இப்படிப்பினுல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்பில்லை.

ஆதாரக்கல்வியில் சுயதேவை பூர்த்தி: —

ஒரு பள்ளியில் 30 பிள்ளைகளிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் காட்டிலிருந்து பருத்தி கொண்டுவருவதிலிருந்து நூல்நூற்பது, துணி நெய்வது வரையில் உள்ள வேலைகளையெல்லாம் தம் கையால் செய்வார்கள். வேலையின் ஒவ்வொருபகுதிக்கும் ஆசிரியர் அவர்களுக்கு அறிவு புகட்டுவார். அதனுல் நாளுக்குநாள் அவர்களுடைய புத்தி அதிக ஒளிபெறும். இதன் பயனுகக் கதர் வேலையின் அம்சம் அறிவார்கள். பெற்றேரே அதை விலைகொடுத்து வாங்குவார்கள். புதியகல்வியில் சுயதேவை பூர்த்தி செய்யவில்லையென்றுல் ஆசிரியர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லையென்பதுதான் புதிய கல்வியின் லட்சணங்களின் சுயதேவைப் பூர்த்தியென்பது பெரிய அம்சமாகும்.

ஏழை, பணக்காரர், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, இளைஞர், முதியோர், ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாச மில்லாத கல்வி. குயவனிடம் சென்றும் கற்பிக்கலாம். புஷ்பத்தைக் காட்டியும் கற்பிக்கலாம். விஞ்ஞானக் கூடங்களுக்கு அழைத்துச் சென்றும் போதிக்கலாம். உடலுழைப்பு நசித்து விடக்கூடாது. ஆரம்பம் முதல் ஹைஸ்கூல்வரை உடலுழைப்பு, சமூகத்தொண்டு அவசியம்.

வாழ்க்கைக் கல்வி:—

வாழ்க்கையென்ற பயங்கரமான பாதையிலே செல்வதற்கு அறிவு வளரவேண்டும். அறிவு வளரக் கல்விவேண்டும். ஏட்டுக் கல்வியேயென நினைக்கவேண்டாம். வள்ளல் வழங்கிய வாழ்க்கைக் கல்வியே. மனிதருக்குத்தேவை மூன்று. (1) அணிய ஆடை. (2) இருக்க இடம். (3) உண்ண உணவு. இதற்கு வாழ்க்கைக் கல்வி படித்தால் வாழத்தெரியும். ஆதாரக்கல்வியில் கூட்டுறவு அதிகம். வருங்காலத் தலைவர்களை எப்படித்தெரிந்தெடுப்பது என்பதை அறிகிறார்கள். மேல் நாட்டில் தொழிலை இழிவெனக் கருதவில்லை. தொழில் செய்யத்தான் அவர்களுக்கு ஆசை. ஆதாரக் கல்வி படித்தவன் வேலைக்குச் சுற்றவேண்டியதில்லை. அவன் கற்ற தொழிலை வைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விடுவான். மாணவர் தொகை பள்ளிகளில் பெருகினாலும் குணம், தரத்தில் கவனம்வேண்டும்.

புதிய கல்வி அல்லது மனநூல்:—

அநுபவத்தாலும் பயிற்சியாலும் நடத்தையை அநுபவித்துக்கொள்வது கல்வியாகும். அறிவு ஆற்றல் அன்று. அறிவின் நடைமுறைப்பயனே ஆற்றலாகும். Knowledge is not power (It is the application of knowledge that is power.)

சமூகக்கலை:—

முதியோர் கல்வியில் விஞ்ஞானம், கிராமபொருளாதாரம், கூட்டுறவு இவைகளில் பயிற்சிபெறவேண்டும்.

உண்மைக் கலை எது ?

கடவுளைக்காண வேண்டுமென்ற ஆர்வத்தை உண்டாக்குகிறது.

கல்விமுறை மாற:—

யாவருடைய ஒத்துழைப்பும் தேவை. முன்னர்:—

1. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் படித்தனர்.
2. அகமும் புறமும் வளரவேண்டும்.

3. வள்ளுவர் கூறிய நாகரீகம் வளரவேண்டும்.
4. சமய உணர்ச்சித் தமிழ் நாட்டின் தவநெறியாகும்
5. தமிழ் இலக்கியங்களில் கடவுள் நெறி, வழி பாட்டுணர்ச்சி காணப்படுகிறது.

படிப்பின் தரக்குறைவு:—

ஆசிரியர்களின் குறைந்த சம்பளம் காரணமாகிறது. விஞ்ஞானக் கல்லூரிகளும், குடும்பவழிக் கல்லூரிகளும் தேவையாகும்.

ஆண் பெண் கூட்டுப்படிப்பு:—

நம் நாட்டுச் சீதோஷ்ணம், பண்பு, உணவுப்பழக்கம் முரணானது.

தமிழகத்தில் ஆதாரக்கல்வி இடங்கள்:—

போதனை 1945-46-ல் தான் தொடங்கியது.

1. திருச்செங்கோடு ... காந்தி ஆசிரமம்
2. பெரியநாய்க்கன்பாளையம் ... ராமகிருஷ்ண வித்தியாலயம்
3. கீழமூங்கிலடி ... காந்தி ஆசிரமம்
4. மதுரை ... காந்தி கிராமம்
5. வேதாரண்யம் ... கஸ்தூரிபாய் இல்லம்
6. தாம்பரம் ... வள்ளுவர் குருகுலம்
7. அடையாறு ... ஔவை விடுதி
8. வாலாஜாபாத் ... ஹிந்துமத பாடசாலை

ஆதாரக்கல்வியும், புதுமுறைக் கல்வியும்:—

எல்லாவற்றையும் ஆதாரப்பள்ளிகளாக மாற்றமுடியாதிருப்பதினால் 41 லட்சம் பிள்ளைகள் படிக்க புதுமுறை அமுலாக்க வேண்டியிருக்கிறது. மாணவர்கள் புதுமுறைப்படி 3 மணி நேரம் தங்கவும், மீதி நேரம் வெளியில் பெற்றோருடன் தொழிலைக் கற்கவும் தான்.

புதிய கல்வி: —

பாதிநாள் வேலை செய்வதினால் சரீர உழைப்பின் பெருமையை உணருகிறார்கள்.

1 வறுமை காரணமாக படியாமலிருப்பவர்கள் படிக்க முன்வருவார்கள்.

2 ஆசிரியர் குறைந்த பிள்ளைகளுக்கு நிறைந்த படிப்பைப் போதிக்க வசதி.

ஸ்லாயிட்டுக் கல்வி முறையாகும்:—

குறைந்த செலவில் அதிக அளவுள்ள பிள்ளைகள் படிக்கவும் வசதி.

இங்கிலாந்தில் 20-பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் வேலை செய்கிறார். ரஷ்யாவில் 10-லட்சம் ஆசிரியர்களை ஒரு வருடத்தில் தயாரித்தார்கள். இந்தியா சராசரி வருமானம் 0—3—5 எல்லா பிள்ளைகளும் 10 வருடத்திற்குள் படிக்க புதுமுறை உதவும்.

ஸ்ரீ மெவரஸ் ஸ்டாதம் *(Ex Director of Public Instruction)* காலத்திலேயே 3, 4, 5 வகுப்புகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட ஜாதிப் பிள்ளைகளை 3-மணி நேரம் மட்டும் படிக்கச் சட்டம் செய்தார்.

கடமையுணர்த்தும் கல்வித் திட்டம்: –

குழந்தையின் மனதிலுள்ள ஆற்றல் முழுதும் தூண்டுவித்து வெளிப்படுத்தி, குழந்தையானது தன்னோடும், தன் சூழ்நிலையோடும் இசைந்து வாழ்வதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடியதாயிருக்கவேண்டும்.

எண்ணும் எழுத்தும் கற்பனு சக்தியை ஏற்படுத்திவிட முடியாது. உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு மனப்பங்கும் ஏற்படும் கலையேதான் மற்றவைகளையும் சாதிக்கும். கடமையில்லாமல் உரிமையில்லை என்பதை உணரவேண்டும். லார்டு மெகாலேயின் குமாஸ்தா கல்வி முறை மாறவேண்டும். உடலும் மனமும் ஒன்றாய் வளரும் கல்விதான் கடமையை உணர்த்தும்.

ஆதாரக்கல்வி ஒரு தொழிலை மட்டும் மையமாகக் கொண்டது. புதுக்கல்வி பலதொழிலை மையமாகக் கொண்டதாகும். இயற்கையோடு இயைந்து மாணவர்களிருப்பதால் உற்சாக

மாக யிருக்கிறார்கள். (Learning by doing) செயல் மூலம் கல்வி யாகும்.

புதுக்கல்வியில் பிள்ளைகள்

மனமகிழ்ந்து பள்ளிக்கூடம்
    போய் வருவோமே!
மதியம் காலை தொழில் பெறவே
    வீடு சேர்வோமே!
நாட்டுக் கேற்ற கல்வி முறை
    வந்தது பாரு!
நாம் படித்து மேன்மையுற
    நடப்பது நேரு!
உடலும் மனமும் ஒன்றாய் வேலை
    செய்யுது பாரு!
உகந்த கல்வி நாம் பெறவே
    உடையது சீரு!
குமாஸ்தா படிப்பு முறை
    நமக்கினி வேண்டாம்
குணம் குறைக்கும் கல்வீப் பெருமை
    சொல்லவே வேண்டாம்.
மெக்காலே துரை கொண்டுவந்த
    மேட்டிமைப் படிப்பை
மெதுவாகத் தள்ளி விடுவோம்
    ஆங்கில உடுப்பை
ராஜாஜி ஆட்சியிலே
    வந்தது கல்வி—நம்
ராஜ்யத்தின் மூலமாகப்
    பெருகுது கல்வி

மாண்டிசாரி கிண்டர் கார்டன் முறை:—

பாடசாலை வயதுக்கு முற்பட்டவர்கள் படிப்பது. இந்த ஆசிரியருக்குக் கடவுள் அருளில்லாமல் ஆசிரியராயிருக்க முடியாது. குழந்தைகளின் தோட்டம் ஆசிரியராவார். விளையாட்டில் ஐம்புலன்களும் உபயோகிக்கவேண்டும். பெண்கள் சிறந்த ஆசிரியர்களாகிறார்கள்.

மலையும் கடலும் போதிக்கும்பாடம். கல்வியில் சிந்தை வேறு, செயல்வேறு என்றில்லாமல் கண்ணும் காதும், மனமும் ஒன்றுபடச் செய்வதுதான் மாண்டிசாரிமுறை. $2\frac{1}{2}$ வயது முதல் பட்டம் பெறும்வரை உணர்வு சிதறக்கூடாது.

கல்விமுறை மாறவேண்டும்:—

மாணவனுக்கு வீடு, சமூகம் முதலியவைகளுடன் எந்தச் சம்பந்தமுமேயில்லை யென்ற தோரணையில் இந்தியாவில் கல்விமுறையிருக்கிறது.

வீட்டிலுள்ளவர்களுடன் தொடர்பில்லாமலிருந்தால் அவன் படித்துப் பிரயோசனம் என்ன? அவன் வளர்ச்சிக்குக் குடும்பம் என்ன செய்கிறது? என்று அவன் பள்ளியில் உணரவேண்டும். இப்படிப்புதான் தேவை.

கல்லூரிப் படிப்பு:—

சட்டத்தை மதித்து நடந்து பிறர்க்கு மாணவர்கள் வழிகாட்டவேண்டும். விவசாயம், கவிதை, சிற்பம், கலை, பலவகை சாஸ்திரங்களில் நம் முன்னோர் சிறந்திருந்தனர். பிளவு மனப்பான்மையால் முன்னோர்போல் அடிமைப்படாமல் கிராமப் புனருத்தாரணம் செய்யப் பழகவேண்டும். கிராமங்களைப் புறக்கணிக்கப்பழகக் கூடாது.

சரித்திரம்:—

இப்புத்தகங்கள் வகுப்பு ஒன்றுமையை வளர்ப்பவைகளாகயிருக்கவேண்டும்.

1. விஷய உண்மை
2. நேர்மை

3. பரவலானத் தன்மை
4. பொதுநோக்கு
5: சர்வதேசக் கூட்டுறவு
6. தேசீய உணர்ச்சி
7. உலக சரித்திரம்
8, பெருந்தலைவர்கள் சரித்திரம்
9. உலகச் சம்பவங்கள்

விஷயங்கள் யாவும் கவர்ச்சிகரமாயிருக்க வேண்டும். நேர்மையைப் போதிப்பதாக யிருக்கவேண்டும்.

கதை – கருத்து:—

பிள்ளைகளை மகிழ்விப்பதற்காகக் கெட்ட விஷயங்களைச் சொல்லக்கூடாது. ஒழுக்கம் கெடக்கூடாது. பிள்ளைகளின் கருத்துக்களுக்கு மாறுக தவருன காரியங்களுக்கு இழுத்துச் செல்லக் கூடாது. ஆங்கில எழுத்தாளரான கார்லஸ் டிக்கன்ஸ், ஷேக்ஸ்பியர், நம் நாட்டின் காளிதாசர் போன்றவர்களின் கருத்துக்கள் படிப்பதற்கு ருசியாக இருப்பதுடன் உன்னத சிந்தனைகளை ஏற்படுத்துகின்றன.

தேசீயக் கீதம்: –

தேசீயக் கீதங்களைப் பாடியுள்ள பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், சுத்தானந்தர், தேசிக விநாயகம் பிள்ளை போன்றவர்களின் பாடல்களை தேசாபிமானம், மதப்பற்று, உழைப்பின் உயர்வு, தமிழின் பெருமை இவைகளை விளக்கும். நன்கு போதிக்கவேண்டும்.

ஹைஸ்கூல், காலேஜ், யுனிவர்சிட்டி:—

1 ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய படிப்புச் சுதந்திரமான இடமாகும்.

2 சர்க்காரோ அரசியல் சக்திகளோ வெளியிலிருந்து கலாசாலைக்குத் தலையிடக்கூடாது.

3 அரசியல் குழப்பங்களுக்கும் கட்சிப் பூசல்களுக்கும் இடம் தரக்கூடாது.

4 படிப்புக்குச் சம்பந்தமில்லா விஷயங்களில் தலையிடவும், கலக்கவும் கூடாது.

5 பக்குவ மனமில்லாத, கட்டுப்பாடில்லாத பிரஜைகள் இன்று நாட்டுக்கு அவசியமில்லை.

6 ரேடியோ, சினிமா, மேடைப்பிரசங்கங்களில் காணும் ஆபாசம் இதர குறைகளையும் வெறுக்கக் கூடிய ஓர் புதிய மனோபாவத்தை வளர்க்க வேண்டும்.

7 அதிலிருந்து நல்லதைக் கிரகிக்கவும், சரியா, தப்பா, என்று பகுத்துப் பார்க்கவும், மாணவர்களுக்கு அவகாசமில்லை. ஆகையால் ஜாக்கிரதையுடன் நடக்க வேண்டும்.

8 பெரிய இலக்கியங்களைப் படிப்பதுடன் நல்லவர்களுடன் பழகினால் எவரும் முழு ஆள் ஆகலாம்.

9 மொட்டாகவுள்ள தங்கள் அறிவு மலர்ச்சிபெறச் செய்வதே கல்வியின் அடிப்படைக் கருத்தாகும். இளைஞர்கள் மொட்டுப் பருவத்திலேயே கருகி, உதிர்ந்து போகக்கூடாது. இவ்வித நிலை தற்சமயம் அதிகமாவதை ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும்.

10 கலாசாலைகள் கலைக் கோயில்களாகும். பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் யந்திரங்களாக மாறக்கூடாது.

11 தொழில் நுட்பப் பயிற்சி தேவை. எஞ்சினீர்கள், ஓவர்ஸீயர், டாக்டர்கள், நர்ஸுகள் ஆகப் பிரியப்படலாம்.

காந்திஜி வகுத்த கல்வி:—

1 வாழ்விற்காகக் கல்வி
2 வாழ்வின் மூலம் கல்வி
3 வாழ்வு முழுதும் கல்வி

1) அறிவுத் திறன், தொழில் திறமையுடன் பரந்த புது மனோபாவம் கொண்டு வாழ்க்கை நடத்தக்கூடியவர்களாகவும் மாணவர்களைத் தயார் செய்வதே கல்வியின் நோக்கமென்றார்.

2) இயற்கையின் விளையாட்டால் பிறந்த மாணவர்களை உலகில் பொறுப்புள்ளவர்களாகச் செய்யவேண்டு மென்றார்.

3) சூழ்நிலையோடு ஒத்து வாழவும், பிற்பாடு பெரியவ ராகும்போது எழ்மையை எதிர்த்துப் போராடவும் மாணவர்களைப் பயிற்றுவிப்பதே சிறந்த கல்வி யென்றார்.

உண்மைக் கல்வி எது:—

மாணவர்களின் வாழ்க்கை என்னும் சர்வகலாசாலையில் தேர்ச்சி பெற உதவுவதே உண்மைக் கல்வியாகும்.

4. மாணவர்.

இனிமை எது:—

"குழலினிது யாழினிது என்ப, தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று கூறிப் போந்தார் வள்ளுவர் பெருந் தகை. செவிக்கு அமுதாக இனிக்கும் சங்கீத ரசனைகளை விட சிறு குழந்தை வாய் குழறிக்குழறிப் பேசும் அழகும், அதனூடே இழைந்துவரும் இனிமையும் கேட்கக் கேட்கச் செவிக்கும் உள்ளத் திற்கும் பேரானந்தத்தைக் கொடுக்கும்.

மாணவர்களும் எதிர்காலமும்:—

இந்திய நாட்டிலுள்ளவர் தூய்மை, தானம், சாந்தம் முதலிய குணங்கள் படைத்தவர்கள். மற்ற நாடுகளிலுள்ள குடி யானவனைக்கேட்டால் தானிருக்கும் கட்சி, பொருளாதாரம் முதலிய வைகள் சொல்லுவான். நம் நாட்டுக் குடியானவனுக்கு "மதம்" தான் தெரியும். நெற்றியிலேயே பார்க்கலாம்.

பொறுமையில் மூழ்கியிருக்கிறோம். கடவுள் ஆராதனை காலத்தில்கூட முன்னால் நிற்க முற்படுகிறார்கள், இதுதான் இந்தியா வின் பெரும்பாவம். எல்லோரும் அதிகாரம் செய்ய விரும்புகிறார்கள். ஒருவராவது சேவை செய்ய விரும்புவதில்லை. கீழ்ப்படியத் தெரிய வேண்டும். பொறுமையை அகற்றினால் சக்தி உண்டாகும்.

இரும்புபோன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளுடைய தேகம் வேண்டும். தன்னம்பிக்கை வளரவேண்டும். பலமற்றமூளை எதையும் செய்யாது. "உன்கடன் பணிசெய்து கிடப்பதே" சொத்து, சுதந்திரங்கள், தேகத்தையும் மறந்தால் தேசாபிமானிகளாகலாம்.

ஒழுக்கமே பெருமை:— Virtue is greatness

கீர்த்தி பெறவாழ்:— (Yield not to dissension)

மெய்வலி பெருக்கு (Develop physical strength) உயர்ந்த நூல்களைப் படிக்கவேண்டும். " சிற்றினஞ்சேரேல் " "சேர்க்கைபோல வாழ்க்கை."

குருட்டு நம்பிக்கையும் மூடப்பிடிவாதங்களும் பற்றி உன் வாழ்வைப் பாசிபிடிக்கச் செய்யாதே. எப்பொழுதும் மனம் விழித்திருக்கவேண்டும்.

குழந்தைப் பள்ளிக்கூடம்,—

இரண்டு வயதுமுதல் நான்குவயதுவரை உள்ளவர்களுக்கு உள்ள பள்ளிக்கூடமாகும். நகரங்களில் அநேகருக்கு வாழ்க்கை வசதியில்லை. பிள்ளைகள் ஓடியாடி விளையாட வசதியில்லை. இவர்களுக்குத் தனிப்பள்ளிகள் அவசியம். கிராமங்களில் ஓடியாடி விளையாடவும், காற்றும் நல்ல வெளிச்சமும் கிடைக்கிறது. நகரங்களிலில்லை இப்பிள்ளைகளுக்குத் தனிப் பள்ளிகூடங்கள், கோவில்களைச் சுற்றிய இடங்களில் அமைக்கலாம். நாட்டின் பொக்கிஷங்களைக் காப்பாற்றவேண்டும். இவர்களைப் பராமரிக்கப் பெண் ஆசிரியர்களையே நியமிக்கப்படவேண்டும், கல்வியறிவு பெற்ற குடும்பங்களின் பிள்ளைகள்; கல்வியறிவு பெருத குடும்பங்களின் பிள்ளைகள் என இருவகையாகப் பிரித்துப் போதிக்கவேண்டும்.

ஒழுக்கமும் சேவையுணர்ச்சியும்:—

கல்வியில் குற்றங்களிருந்தால் ஒருதலை முறையினர் பாதிக்கப்படுவர். அறிவு வளர்ச்சிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஒழுக்க வளர்ச்சி, சமூக சேவா மனப்பான்மை, ஏற்படுவதிலுந்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சமூகத்தில்

புல்லுருவிகளாக ஆகாமலிருக்கப் பார்க்கவேண்டும். உபாத்தியாயர் நடத்தையைப் பின்பற்றிப் பழகிவிடுவார்கள். ஆசிரியர் முன்மாதிரியாக நடந்து சேவாயுணர்ச்சி, நாட்டுப்பற்று அமையச் செய்ய வேண்டும்.

குழந்தையின் இயற்கைக் குணங்கள்:—

1) கருணை 2) வீரம் 3) அழகுணர்ச்சி 4) தோழமை 5) உண்மை யுரைத்தல் 6) கட்டுப்பாடு 7) சேர்ந்து பாடுவது

நிலத்தைவிதை போடுவதற்குமுன் சீர்ப்படுத்துவது போல் பிள்ளைகள் படிக்குமுன் நற்குணமுள்ளவர்களாக்கவேண்டும். இல்லாவிடில் விதை பாழாவதுபோல் இவர்கள் கல்வியும் பிரயோஜனப்படாது. மாணவர்கள் சேரக்கூடிய இனத்தவர்களைப்போலவே குணங்கள் அமையும். பன்றியோடு சேர்ந்த கன்றும் கெடும். நல்ல பிள்ளை யமையாவிட்டால் பள்ளிகெடும். பையன்கள் விளையாடுமிடம், சேருமிடம், நடத்தை இவைகளைக் கவனித்துத் திருத்த வேண்டும்.

குழந்தைகளின் உணர்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சி: —

7 வயது முதல் 10 வயது வரை வளர பிள்ளைகளின் உணர்ச்சிகளைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

1 புத்தியின் இயல்பு:—

1 முயற்சியும் தாளாண்மையும் (*Industry*)
2 சுவைத்தறிதலும், செய்தலும் (*Interest*)
3 கவனம் (*Attention*)
4 ஞாபக சக்தி (*Memory*)
5 தெளிந்து உணர்தல் (*Comprehension*)

2 உணர்ச்சியின் பண்புகள்: —

1 செயலின் பண்பு
2 பழகும் இயல்பு
3 மனப்பான்மை

4 ஒழுக்கம்

5 சிறப்பியல்புகளை மதிப்பிடுவதால் பெறப்படும் விசேஷம். (*Personality trait*)

மாணவர்களுக்கு நன்மொழிகள்:—

1. வகுப்புணர்ச்சிக்கோ, தீண்டாமை யுணர்ச்சிக்கோ மனத்தில் இடம் அளிக்கக்கூடாது.
2. முதல் உதவி செய்வதே குறியாக இருக்கவேண்டும்,
3. தோட்டி வேலை செய்யவும் தயாராயிருக்கவேண்டும்.
4. ரகசியமாய் எதுவும் செய்யக்கூடாது.
5. உயிர்போனாலும் அஹிம்சா முறையைக் கைவிடக் கூடாது.
6. தியாகம் செய்ய எப்போதும் தயாராயிருக்கவேண்டும்.

பெண்களுக்கு நன்மொழிகள்:—

1. குடும்ப அலுவல்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டு, தேச ஊழியர்களை வளர்ப்பவர்கள் சிறந்த தேச சேவை செய்தவராவார்கள்.
2. ஆடையும், ஆபரணமும் அழகல்ல. சேவைதான் அழகு.
3, பெண்கள் நிலை உயர்ந்தால் ஆண்கள் நிலை உயரும்.

மாணவன் சக்தி:—

மரத்தின் சிறு விதையில் மகத்தான சக்தி அடங்கியிருக்கிறமாதிரி குழந்தைகளின் உள்ளத்தில் இருக்கும் சக்தியை நல்ல சூழ்நிலையில் தக்கபடி மலருவதற்காக உதவி செய்யவேண்டும். 15 வயது முதல் 25 வயதுவரை எதையும் கிரகிக்கும் சக்தியுண்டு. கெட்டவழியில் இச்சமயம் போகாமல் கவனிக்கவேண்டும். வெளிச் சக்திகளில் மாட்டிக் கெடக்கூடாது. நாட்டின் ஒப்பற்ற செல்வங்கள். பிரஜா பொறுப்பை நமக்கு அடுத்தபடியாக ஏற்பவர்கள்.

மாணவர்:—

புதிய உலகை நிர்மாணிப்பவர். ஒழுக்கம் கட்டுப்பாடு இல்லாவிடில் நாடுகெடும். கடவுள் நம்பிக்கையும், நம்பிக்கைப்

பொறுப்புமில்லை. உலகத்திலுள்ள மாணவர் யாவரும் ஒன்றே. ஒரே குடும்பம் என்று நினைக்கவேண்டும். நியாயத்திற்குப் போராடும் உணர்ச்சிவேண்டும். சமூகத்தில் வித்தியாசங்களையும், மேடுபள்ளங் களையும் சமப்படுத்தக் கூடியவர்களாக்கப் படவேண்டும்.

நம் நாடு குடியரசு நாடு. நல்லொழுக்கமில்லாத பிரஜை களை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த முடியாது இன்றைய மாண வர்கள் நாளைய பிரஜைகள். வேலைநிறுத்தம், உண்ணாவிரதம் போன்ற அமைதியைக்குலைக்கும் ஆட்களுடன் கலந்து தங்கள் நேரத்தை வீணாக்கக்கூடாது. தேச குரலுக்கு மாணவர்கள் செவிசாய்க்க வேண்டும்.

ஒழுக்கம் கெட்டால் தேசீய பலம் குன்றும் உற்பத்திச் சக்தியையும் உறிஞ்சிவிடும். வாழ்க்கையில் தோல்வியை தைரியமாக எதிர்த்தால்தான் வெற்றிகிட்டும். பின் தங்கியுள்ள நாடுகளுக்கு மார்ஷல் உதவித்திட்டத்தின்கீழ் அமெரிக்கா உதவுவதுபோல் பக்கத்துப் பிரதேசங்களில் சுபீட்சத்தை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்.

எதிர்காலச் சிற்பிகள்:—

சந்தோஷமும் சுகமும் மிகுந்த நவஇந்தியாவை உருவாக்க நல்ல பிரஜைகள் தேவை. இயற்கை வளம், ஆள்பலத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பூரணமாகப் பயன்படுத்தத் திட்டக்கமிஷன் நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால் அத்திட்டங்கள் நிறைவேற புதிய வழிகளில் மனதைச் செலுத்த வல்ல நல் முறை ஒன்றாலேயே மக்களின் திறமையையும் நடத்தையையும், மேம்பாட்டையும் உண்டாக்க வல்ல கல்விமுறை உருவாகவேண்டும்.

கிராம இளைஞர்களுக்குத் தலைமைதாங்க ஜனதா கல்லூரி நிறுவப்பட்டுள்ளது. ஐ. நா. ஒத்துழைப்புடன் முதியோர், சிறுவர், ஸ்திரீகளுக்கு உபயோகமான நூல் நிலையம் ஏற்படவேண்டும்.

மாணவர் முதல் எதிரி: — அரசியல் தான்.

பீடி, சிகரெட்:—

புகை குடித்தால் அதிகக் கேடு உண்டாகும். 100 சிகரெட்டுகள் குடித்தால் ஒரு சொட்டு விஷம் தேகத்தில் உண்டா

கும். ஒரு ஊசி விஷம் ஒரு தவளையைக் கொல்லுகிறது. இதைக் கவனிக்கவேண்டும்.

பிள்ளையின் குணம்:—

இரண்டு வயது முதற்கொண்டே விளையாட்டுச் சாமான்களை ஒடித்துத்தானே அதை ரிப்பேர் செய்ய ஆசைப்படுகிறது. ஆகையால் இலக்கியப் படிப்பு மட்டும் பிரயோசனமில்லை. சிறுவயதிலிருந்தே எழுதப்படிக்கத் தெரியுமுன்பு கைகளை உபயோகிக்க அவன் கற்றுக்கொள்ளவேண்டும்.

குழந்தைகள் குறைகள்:—

நம் நாட்டில் 100-க்கு 35 பேருக்குக் கீழ்க்கண்ட குறைகள் பிள்ளைகளிடத்திலிருக்கிறது. பெற்றோர் கவனிக்கவேண்டும்.

1 தேக வலிவின்மை
2 பார்வைக் குறைவு
3 கேட்கும் குறை

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் இவைகளைக் கவனிக்க தனி இலாக்கா இருக்கிறது. ஆசிரியர் பிள்ளைகளின் மேற்கண்ட குறைகளைக் கண்டுபிடித்துப் பெற்றோரிடம் சொல்ல வேண்டும்.

சிறுவர் நல போர்டு:—

நாட்டில் சிறுவர் பராமரிப்பு வேலைகளை ஒருமுகப்படுத்தவும், இவை சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதில் நிதி, இதர சகாயங்கள் புரியும் சிறுவர் நல போர்டு ஒன்று சர்க்கார் நிறுவ வேண்டும்.

5 போதனை.

மனிதன் தோன்றி ஒலிகளை உச்சரித்தும், ஒலிகளைக் கூட்டமாக்கியதே பாஷையாயிற்று. ஒலி வரிவடிமாகி, எழுத்துக்கள் தோன்றின. பின்பு, வார்த்தை, வாக்கியம், செய்யுள், வசனங்கள் உண்டாயின.

தமிழ்:—

சீறினமைத் திறம் வாய்ந்தது.

"ஈதலியல்பே இயம்புங்காலை
காலமும் கடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து
விரையான், வெகுளான் விரும்பிமுகமலர்ந்து
கொள்வான், கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்
கோட்டமில்மனதில் நூல் கொடுத்தல்"

என்ப இவ்விதமாகப் போதிக்கவேண்டும்.

பலமொழிகளால் பல வகைக்கும் சிறப்புண்டு.

ஆங்கிலம்	...	வியாபாரத்திற்கு வசதி
லத்தீன்	...	சட்டம் செய்ய உதவி
ஜெர்மனி	...	தத்துவம் ஆராய்ச்சிக்கு உதவி
இத்தாலி	...	காதல் வளர்ச்சிக்கு உதவி
பிரஞ்சு	...	தூதுக்கு உதவி
தமிழ்	...	பக்தி வளர்ச்சிக்கு உதவி

போதனாமுறைப் பொது அம்சங்கள்:—

1 பிள்ளைகளின் மனதை அறிந்து முறைகளைக் கையாடல் வேண்டும்.

2 மாணாக்கரின் கீழ்க்கண்ட குணங்களை அறிந்து போதிக்கவேண்டும்.

1 சுறுசுறுப்பாயிருத்தல்
2 அழகிய பொருள்கள் மீது இச்சை கொள்ளுதல்
3 அச்சங் கொள்ளுதல்
4 வெகுமானங்களின் மீது விருப்புக் கொள்ளுதல்
5 தண்டனைகளின் மீது வெறுப்புக் கொள்ளுதல்

கேள்விகள்:—

உபாத்தியாயரின் கேள்விகளிலேயே பாடம் அடங்கியுள்ளது.

சுருக்கமாயும், தெளிவாயும், ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவையாயும், முன் கேள்வியில் தோன்றியவையாயும், பின் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

விடைகள்:—

தெளிவாகவும், வாக்கிய ரூபமாகவும், இருக்கவேண்டும். மௌனத்தைத் தவிர்க்கவேண்டும். எல்லோரும் சேர்ந்து விடையளிக்கக்கூடாது. கேள்வி பொதுவாயும், விடை ஒருவராயும் அளித்தல் வேண்டும்.

சிறப்பான அம்சங்கள்:—

(1) வாசித்தல் (2) எழுதுதல் (3) இலக்கணம் (4) செய்யுள் (5) பார்த்தெழுதல் (6) சொல்வதெழுதல் (7) காப்பி (8) வியாசம்

முதல்வகுப்புப் பிரச்னே:—

முதல்வகுப்புப் போதனை கஷ்டமானது, (*First Standard is the hardest class to teach*) அவர்களின் மூளை இன்னும் திறக்கப்படவில்லை. (*Their minds are not yet opened*)

1) ஆதியில் எழுத்துக்களை ஒருசேர முதலில் கற்பித்துப் பின் பதங்கள் கற்பித்தார்கள்.

2) தற்காலம் பதங்கள் மூலமாகவே எழுத்துக்கள் கற்பிக்கப்படவேண்டும் என்று ஆயிற்று, "*From known to the unknown*" தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்பிக்கும் முறையாகும்.

3) இராமன்:— ஈனு, ராவன்னு, மானு, ன்னன்னு இதில் முரண் கண்டனர்.

4) பின், இ + ரா = இரா + ம = இராம + ன் = இராமன். இம்முறையிலும் முரண் கண்டனர்.

5) எழுத்துக் கூட்டும் பழக்கம் மேல்வகுப்புகளிலும் உண்டாகுமென்று "இராமன்" என்று வாசித்துவிட ஏற்பாடாயிற்று. பார்வைதான் முக்கியம். சொற்

களைப் பலதடவை வாசித்தால் எழுத்துப் பயிற்சி ஏற்படும்.

6) மேலே கண்ட முறையிலும் முரண்கண்டு, பதத்தைப் பார்த்ததும் அதனை வாசித்து, உச்சரிப்பைத் தெரிவித்து, பின் எழுத்துக் கூட்டுதல் நவீனமுறை எனக் கண்டனர்.

வாசித்தல்:—

a) விரைவு, தாமதம், திக்குதல், ராகம், சிறிய தொனி, பெருங் குரல் இவைகள் கூடாது.

b) வியப்பு, அச்சம், கோபம், வினா, முதலிய சந்தர்ப்பங்களைக் கவனித்தல், நிறுத்துப்புள்ளிகளைக் கவனித்தல்.

இலக்கணம்:—

அனுமானமுறையைக் கையாளவேண்டும். (*Inductive Method*) வினைச் சொல்லைப் போதிக்க இராமன் — வந்தான் என்று போதித்தல்.

புதியமுறை:—

1) பாலர்களறி முறை ... (*Kindergarten Method*)
2) சுயகரும முறை .... (*Project Method*)
3) ஒப்பந்த முறை ... (*Dalton Method*)
4) விளையாட்டு முறை ... (*Playway*)
5) மேஸன் முறை ... (*Mason Method*)

1) விளையாட்டுக்களால் கற்பித்தல், பொருள்களைக் கொண்டும் கற்பித்தல் கிண்டர் கார்டன் முறை.

2) மாணுக்கர்களுக்குத் தேவையானவைகளை அவர்களே அடைதல் பிராஜக்ட் முறை.

3) பல பாடங்களில் தேர்ச்சிக்குத் தக்கபடி பல வகுப்புகளில் போய்ப் பிள்ளைகள் படித்தல் டால்டன் முறை.

4) பாட்டுகளினுலும், விளையாட்டுகளினுலும் கதை, நாடகங்களாலும் படித்தல் விளையாட்டு முறை.

5) வாசித்தவை, கேட்டவைகளைச் சுருக்கமாய் எழுதுதல், சொல்லுதல் மேஸன் முறை.

பாடக்குறிப்பு:—

1. பாடப்புத்தகம் தேர்ந்தெடுத்தல்
2. பாடத்திட்டம் தயாரிப்பு
3. புத்தகசாலை
4. பாடக் குறிப்பு

பாடக்குறிப்பு:—

1) ஆயத்தம் ... (Preparation)
2) அறிவுறுத்தல் ... (Presentation)
3) சம்பந்தப்படுத்துதல் ... (Association)
4) தொகுத்துணர்தல் ... (Genaralisation)
5) பரிசோதித்தல் ... (Application)

பாடக்குறிப்பு வகைகள்:—

1) விஷயம், முறை ... (Full Notes)
2) கரும்பலகைச் சுருக்கம் ... (Sketch Notes)
3) முறை எழுதாமல்
விஷயம் மட்டும் ... (Teaching Notes)

முதல் வகுப்பை மட்டும் கெட்டிக்கார ஆசிரியர்கள்தான் நடத்தவேண்டும். (Skill full teacher)

தமிழ் போதிப்பதில் இதர முறைகள்:—

1. முதலில் சேர்த்தவுடன் அவர்களைச் சித்திரம்வரைய விடவேண்டும். 4 மாதங்கள் அம்மாதிரி செய்யலாம். 4 மாதங்கள்வரை அவர்களுடன் சம்பாஷணை செய்து வரவேண்டும்.
2. நேர்கோடு, படுக்கைக்கோடு, அரைவட்டம் வரும் எழுத்துக்களைக் கற்பிக்கலாம்.
3. ஒற்றெழுத்து இல்லாத வாக்கியங்கள் படத்தின் மூலம் கற்பிக்கலாம்.
4. ஒற்றெழுத்துடன் சேர்த்துப் படங்கள்மூலம் கற்பிக்கலாம்.

பசு = எழுத்துக் கூட்டுதல்.

வேலை = எழுத்துக் கூட்டுதல்.

5. "அ" க்கு நேராக க, ங, ச,
"ஆ" க்கு நேராக கா, ஙா, சா,

முதல் வகுப்பு:—

அம்மா — ஆடு
அக்கா — ஆயா
அம்மன் — ஆப்பம்
அரம் — ஆல்மரம்
அப்பம் — ஆணி

ஒலி:— பாடம் — படம் சாதம் — சதம்
மாடம் — மடம் நகம் — நாகம்

பதம் எழுதிய அட்டைகள், எழுத்து அட்டைகள் சேர்த்தல். பிள்ளைகளை சிறுசிறு கூட்டமாகப் பிரித்துக் கற்பித்தல் (Group system)

உபகரணங்கள்:—

1. எழுத்துக்கள்
2. பதங்கள்
3. படங்கள் (Flash cards)
4. காலியாய் விட்டுச் சிறுவரால் நிரப்பப்படுதல் (cards to be filled in or completed

1, 2, வாரங்களில் கையை அசைத்து எழுதிக்காட்டுதல் (writing in air).

வாய்மொழி வியாசம்:-

1. எளியகேள்வி ... எளியநடை
2. எளியபொருள் ... சிறுவிஷயம்
3. படம் பார்த்துச் சொல்வது
4. கதை தொடர்பு ... சிறுசம்பாஷணை
5. கதை நலம் தோன்ற நடித்தல்
6. சிறுசிறு கதை ... எளிய கேள்வி
7. கதையின் சிறுபகுதி சொல்லுதல்

எழுதும் வியாசம்:— (writing composition)

1. படங்களைக் காட்டி பின் எழுதச்செய்தல்
2. காட்டப்படும் பதங்களைச் சிறுசிறு வாக்கியங்கள் எழுதச்செய்தல்.

சுலப எழுத்துகள் – கடின எழுத்துகள், (வரிசைமுறை)

1. ட, ப, ம, ய, ர
2. அ, உ, எ, ஏ
3. இ, ஓ, ஓ, ஐ
4. ஆ, ஊ, ஈ, ஔ
5. க, ச, த, வ
6. ல, ள, ழ
7, ர, ற, ன, ண,

“ ர, ற ” “ ற ” இரண்டு “ ர ” என்றால் போதும்

“ ந ” ங், ஞ் -- இயற்கையான குரலை உபயோகித்தல்

முதல் வகுப்புக் கணிதம்:—

1. அநுபவசித்தம் போதித்தல் (Practical works)
2. பிள்ளைகள் தாங்களே போடுதல்
3. யோசனைக்கணக்கு ஆரம்பித்தல் (Problems)
4. பாடம் முடிந்தது மருத்தறித்தல்
5. முதலில் பெரிய எண்கள் கூடாது
6. கணக்குகளை முதலில் படித்தல்
7, சுலப வழிகள் போதித்தல்
8. படிப்படியாய்ப் போதித்தல்

குச்சுகள், கொட்டைகள், கோலிகள், கட்டைகள், சோழிகள் முதலியவைகளை எண்ணுதல். அடுக்குதல்

வகுப்புச் சிக்கல்கள்:—

குழந்தைகளிடம் அபூர்வ சக்திகள் நிறைந்துள்ளன. அதுதான் ஒரு மனிதன் ஆகவேண்டுமென்ற ஆசையாயிருக்கிறது. நல்ல பிரஜைகளாகச் செய்ய வேலைக்காரர்கள் நாமிருக்கிறோம்

பாடத்தயாரிப்பு:—

வகுப்பில்வந்து ஆசிரியர் தயாரிக்கக்கூடாது, (A teacher can never teach unless he is learning himse!f)

1, குறிப்பிட்டகாலம் நேரங்களில் பாடத் தயாரிப்பு செய்யவேண்டும். நேரத்தை மாற்றக்கூடாது.

2. வகுப்பு, வயது, இடம், முன்னறிவு அறிந்து தயாரிக்க வேண்டும்.

3. உபகரணங்களினுல் உற்சாகத்தைப் பெருக்கவேண்டும்.

4. போதிக்க, விஷயத்தொகுப்பில் பாகம், பாகமாக அமைக்கவேண்டும்.

பாடத்திற்கு முன்:—

பிள்ளைகள் சுத்தம், தூரப்பார்வை கிட்டப்பார்வை (Short sight, long sight) உள்ள பிள்ளைகளைக் கவனித்துத் தக்கபடி உட்காரவைக்கவேண்டும்.

1 பிள்ளைகள் குணமறிந்து போதிக்கவேண்டும்.

2 இளைய சகோதரர் போல் நினைக்கவேண்டும்.

3 பிள்ளைகளின் நன்மைக்காகவே பள்ளி. ஆசிரியரின் நன்மைக்காக அல்ல.

4 ஆசிரியர் இளமைப் பருவத்தை மனதில் வைக்க வேண்டும்.

5 குறிப்பிட்ட பையன்களைத் திருத்த உதவியாசிரியரிடம் கலக்கும் நேரத்தைதவிர மற்ற நேரங்களில் பேசக்கூடாது.

6 அதிக ஊதியத்தை நினைக்கக்கூடாது.

7 ஆசிரியர்கள் ஒற்றுமையாய் யோசிக்கவேண்டும்.

8 பல உபாத்தியாயர்களுக்குப் பல பாடங்களுண்டு. இவைகளைக் கற்பது ஒரு பையனே.

9 பெயர், கீர்த்திக்குப் பாடுபடக் கூடாது. பையன் க்ஷேமத்திற்காகவே பாடுபட வேண்டும்.

10 கெட்டிக்காரர், மத்தியஸ்தர், மந்தமுள்ளவர்களுக் குத் தக்கபடி நடத்தவேண்டும்.

11 இயற்கையில் சந்தோஷப்படும் பிள்ளைகளுக்குத் தக்கபடி நடத்தவேண்டும்.

12 இந்தியப் பூங்காவை அழகு படுத்தக்கூடியவர்கள் குழந்தைகள். இம்மலர்கள் நன்கு மலரவேண்டும்.

பாட அட்டவணை:—

பாடத்திட்டம் தயாரிக்கையில் புத்தகத்திலுள்ளவை பூராவும் நடைபெற வேண்டுமென்று எண்ணக்கூடாது. போதிப்பதைமட்டும் பொறுக்கியெடுத்துக்கொள்ளலாம்.

கால அட்டவணை:—

கடின பாடத்திற்கு அதிகநேரமும், காலையிலும் வைத்துக்கொள்ளவேண்டும். சாயங்காலம் கடின பாடம் நடத்தக்கூடாது.

(Change of occupation is a rest)

காலையிலும் மாலையிலும் கடைசி பீரியடு சுலபமாய் இருக்கவேண்டும்.

உல்லாசப் பிரயாணங்களும், பாடங்களுக்கிடையில் ஓய்வு நேரங்களும் அமைக்கவேண்டும.

(All work & no play makes Jack a dull boy)

வகுப்புப்பாடம்:—

பிள்ளைகளுக்குள் அமைதியுண்டுபண்ணவும், வீட்டுச் சஞ்சலத்துடன் வந்த சிலரை ரம்மியப்படுத்தவும் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிக்கவேண்டும். வீட்டுப் பாடங்களைக் காலையிலேயே முடித்துவிடவேண்டும். இல்லாவிடில் பிள்ளைகளுக்குத் தளர்ச்சி மனப்பான்மை ஏற்படும்.

பேதனை:—

1. மாணவர்கள் சமுதாய வளர்ச்சிக்கு அனுகூலமாக்கப்பட வேண்டும்.
2. தொழில்வளம், விவசாய உற்பத்திக்கு உழைப்புதான் தேவை.
3. சுத்தமான சூழ்நிலையில் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

4. வேலைக்காரர்கள் வேண்டுமென்ற மனப்பான்மை மாணவர்களிடம் மாறவேண்டும்.
5. தேசியக் கீதத்தை மரியாதையுடன் பாடக்கற்றுக் கொடுக்கவேண்டும்.

(Herbertian Method)

1. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குப் போக வேண்டும்.
2. லேசானதிலிருந்து கடினமானதிற்குப் போக வேண்டும்.
3. குறிப்பில்லாததிலிருந்து குறிப்பானதிற்குப் போக வேண்டும்.
4. பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய வற்றிலிருந்து அறியக்கூடாத வற்றிற்குப்போகவேண்டும்.
5 பஞ்சேந்திரியங்களால் எவற்றை யெல்லாம் அறிவிக்கக்கூடுமோ அவற்றையெல்லாம் அறிவிக்க வேண்டும்.
6. விஷயத்தைப் பெட்டியில் அடைப்பதுபோல் அடைத்து வைக்கக்கூடாது.
7. எவ்வளவு அதிகமாகப் பிள்ளைகளிடம் வாங்க முடியுமோ, அவ்வளவும் கற்றுக்கொள்ள முடியும்.
8. ஆசிரியர் அதிகம் பேசக்கூடாது. அதிகம் பேசச் செய்யவேண்டும்.
9. பேச்சு சுத்தம், திருத்தம், சாதுரியம் இருக்கப் பழக்கவேண்டும்.
10. பின்னிட்டவர்களையும், கவனமின்றி இருப்போரையும் அதிகமாய்க் கேட்கவேண்டும்.
11. வகுப்பைக் கண்களாலும், காதாலும் நடத்தவேண்டும்
12. கேள்வி கேட்டவனுக்கு ஒரு கண்ணும். மற்ருெருவனுக்கு இன்னொரு கண்ணையும் உபயோகிக்க வெண்டும்.
13. கவனமின்றி இருப்போரைக் கேட்கவேண்டும். கெட்டிக்காரர்களையே கேட்கக்கூடாது.

14. முன்னாலிருப்பவர்களையே கேட்கக்கூடாது.
15. கேள்விகள் தெளிவாயும், குறிப்பிட்டதாயும், ஒன்று க்கு மேற்பட்ட விடையில்லாததாயும் இருக்க வேண்டும்.
16. விஷயங்களை விளக்கிக் காட்டக் கரும்பலகையையும், உபகரணங்களையும் உபயோகிக்கவேண்டும்.
17. ஒவ்வொரு பாகமும் போதித்து முடிந்தபின் பரீட்சைக்கேள்விகள் கேட்டு, கரும்பலகையில் எழுதிக் கொண்டுவந்து, முடிவில் கரும்பலகைச் சுருக்கம் ஏற் படும்படி செய்யவேண்டும்.
18. பாடம் பூராவுக்கும் பரீட்சைக் கேள்விகள் கேட்டு விடை வராவிடில் மறுபடியும் அதை அஸ்திவார மாக வைத்து நடத்தவேண்டும்.
19. தண்டனைகூடாது. பயத்தை உண்டாக்குங் காரியங் களால் பையனின் ஆண்மை, கௌரவம் குன்றிக்க படுவான்.
20. பிள்ளைகளைத் தண்டிக்கப்போகும்போது, மார்க்குகள் போடப்போகும்போதும் ஆசிரியர்தான் மாணாக்க ராயிருந்ததை நினைக்கவேண்டும்.
21. எந்த உணர்ச்சியைப் பரப்பவேண்டுமோ அதை விருத்தி செய்யவேண்டும்.
22. பிள்ளைகளோடு ஆசிரியர் சேர்ந்து விளையாடவேண்டும்.
23. கற்பிப்பதில் ஆசிரியருக்கு இச்சையிருந்தால்தான் சாமர்த்தியமும் ஏற்படும்.
24. அரிய விஷயங்களைக் கற்பிக்க வற்புறுத்துவது பிசகு
25, கோபம், படபடப்பு, பாடத்தைக் கடினமாக்கும்.
26. சாந்த குணத்தால் மாணவரிடம் உண்மையைப்பெற லாம்.
27. வீடுகளில் பாடங்கள் சொல்லிக்கொடுக்கக் கூடாது. (Tution) ஒரு திரியில் இரண்டு பக்கமும் ஏற்றுவது போல.

28. துஷ்டப்பையனை நல்வழிப் படுத்தாமல் தள்ளிவிடுவது பிசகு.

29. இளம்பிள்ளைகளிடம் மெதுவாய்ப் பேசினால்தான் மற்ற ஜந்துக்களிடமும் அன்பாய் இருக்கமுடியும்.

30. பிள்ளைகளைக் கெட்ட பெயரிட்டுக் கூப்பிடக்கூடாது.

31. பிள்ளைகளின் கெட்ட செய்கைகளைப் பற்றி வம்பு பேசக்கூடாது.

32. வகுப்புப் பரீட்சைகள் அவ்வளவு உசிதமல்ல. கஷ்டமான பாடங்களைப் படித்து வகுப்புத் தேறுவதைவிட அதே வகுப்பில் இன்னும் ஒரு வருடமிருந்து அப்பாடங்களை நன்ருகப் படிப்பதேமேல்.

33. தனக்கிஷ்டமான பாடங்களைச் சொல்லிக் கீர்த்தி சம்பாதிப்பதைவிடப் பிள்ளைகளின் இஷ்ட பாடமே மேல்.

34. கல்வியில் மனப்பயிற்சி யடைந்தாலும் தேகப்பயிற்சி தேவை. தேக சுகமில்லாவிடில் எல்லாக் கல்வியும் வீண்.

35. அளவுக்கு மிஞ்சிக் கற்று மேல்வகுப்புக்குப் போக வேண்டுமென்ற பெற்ரோர் எண்ணத்தைப் போக்க வேண்டும்.

36. திறமையற்ற பையன், பாடத்தில் பிடித்தமில்லாதவன், இவர்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கச் செய்யவேண்டும்.

37. ஆசிரியரிடம் பிள்ளைகள் கைகட்டி நிற்கவிடக்கூடாது.

38. கட்சிப் பிரதிகட்சி, இராஜ தந்திரங்களைப் போதிக்காமல் நகர வாசிகளாக்கத் தத்துவங்கள் போதிக்க வேண்டும்.

39. பிள்ளைகளுக்குள் ஒற்றுமை ஏற்படச் செய்யவேண்டும்.

40. செய்யுங் காரியங்களில் ஆசிரியருக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும்.

41. சன்மானம் கொடுப்பது, பொருமை, போட்டி, இவைகளால் அதைரியம் ஏற்படும்.

42. வகுப்பில் வயது வித்தியாசம் கூடாது.

43. திருஷ்டாந்தங்கள் முதலில் போதித்தால் விதிகள் தாமே ஏற்படும்.

44. உற்சாகத்தை உண்டாக்கிக் கவனத்தை இழுக்க வேண்டும்.

45. வஸ்துக்களைக் கொண்டு விஷயத்தைக் கற்பித்து விதியை வரவழைக்கவேண்டும்.

46. போதனையானது பிள்ளைகளின் இயற்கைப்போக்கை அநுசரித்து நடக்கவேண்டும். புத்தகம் எழுதினவர் வேறு ஜில்லாவாசியாக இருக்கலாம். நாம் நம் ஜில்லாவுக்குத் தக்கபடி மாற்றிக் கற்றுக் கொடுக்கலாம்.

47 புலன்களைக் கொண்டு போதிக்கவேண்டும்.

48. பிள்ளைகள் உற்றுப்பார்த்து விஷயத்தை அறிந்து அதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

49 சுய முயற்சியை மிக்க மெச்சவேண்டும்.

50 உபாத்தியாயர் சொல்லிப் பிள்ளைகள் கேட்பதிலும் பிள்ளைகளே செய்து பார்ப்பது நல்லது.

51. உபாத்தியாயர் எடுத்துரைப்பது வெகு சொற்பமாயும், சொல்லிச் செய்வது வெகு அதிகமாயுமிருக்க வேண்டும்.

வேறு:—

நிர்ணயம், கவனம், நிதானம், வகுப்பு மாற்றுதலில் தேவை. இல்லாவிடில் பங்கம் ஏற்படும். கெட்டிக்காரப் பிள்ளைகளும் தேர்ச்சியில் குன்றுவார்கள்.

ஆசிரியர் தீர ஆலோசித்துப் பிள்ளைகளுக்குக் கட்டளையிடவேண்டும். திருப்பித் திருப்பிக் கூறக் கூடாது.

குழப்பம், ஒழுங்கின்மை, வீண்கால விரயம், ஏற்படாமல் பார்த்தால் போதனையின் பயன் சிறந்து வெற்றியுண்டாகும். மாணவர்கள் மூன்றுவிதம், தலை, இடை, கடை, மாணாக்கர்கள்.

 3798

"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
ஆடு, எருமை, செய்யரி, இல்லிக்குடம்
அன்னர் தலை, இடை, கடை, மாணக்கர்"

1 ஒழுங்குகளை மீறுதல்
2 அதிகாரிகளுக்கு மீறுதல்
3 பாடசாலைக்கு மீறுதல்
4 பாடசாலை வேலைகளுக்கு மீறுதல்
5 பொருந்தாத ஒழுங்கு: முதலிய குணங்களை மாற்ற ஆசிரியரிடம், அன்பும், நடத்தையும் தேவை, தண்டனையாலல்ல.

1 உற்றுப்பார்த்தல்
2 யோசித்தல்
3 சிந்தித்தல்
4 தெளிதல்

} இச்சக்திகள் பிள்ளைகளிடம் காணப்படவேண்டும்.

விதை பெரிய மரமாக வளர்ந்து பலருக்கு அறிவுத்திறன் நிழலும், ஞான தீபக்கனியும் நல்கவேண்டும். மாணவர் சத்தியத்தில் நிலை பெற்றவர்களாயும், ஆண்டவன் சந்நிதியில் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கச் செய்யவேண்டும். "ஒன்றேகுலம், ஒருவனே தேவனும்" என்ற அடிப்படையில் வந்தவர்கள் நாம்.

1. ஜனநாயக நாடுகளில் நிறவெறியும் காலனி வெறியுமிருக்கின்றன.
2. சோவியத் நாட்டில் மக்கள் வாழ்க்கை நலம் உயர பெரிய சாதனைகள் செய்யப்பட்டிருந்தாலும், சிந்தனைக் கட்டுப்பாடு, ரகசியத்தன்மை இருப்பது குறைபாடாயிருக்கிறது. இந்த இரண்டு குறைகளினால் உலக அமைதியை நிலை நாட்ட முழுச்சக்தி படைத்ததாயில்லை. இக்குறைபாடு நம் நாட்டிலுமில்லாமல் புதிய ஜனநாயகத்தைக்காப்பாற்ற போதனை அமைய வேண்டும்.

இலக்கண போதனை:—

இளம்பிள்ளைகளுக்கு இலக்கணத்திலுள்ள கஷ்டமான பகுதிகளைப்போதிப்பது அவர்களுடைய ஞாபக சக்தியைக் குன்றச்

செய்யும். இலக்கணம், விஞ்ஞானம் போன்ற ஒரு ருசிகரமான பாடம். விஞ்ஞான போதனைக்குக் கையாளப்படும் முறைகள் இலக்கண போதனைக்கும் கையாளப்பட வேண்டும். போதனை ஆரம்ப வகுப்புகளில் பிரசங்கம் செய்வது போலிருக்கக்கூடாது. முற்றாத அறிவுபடைத்தவர்கள். பிறவஸ்துக்களால் நிரம்பக்கூடிய பாத்திரங்களல்ல அவர்கள். பயிற்சிபெற்று வளர்ந்து சிறந்த பொருளாகக் கூடியவர்கள். இயன்றவரை பேசப்பழக்கவேண்டும்.

நமது எண்ணத்தை விசாலப்படுத்தி, நமது குறுகிய சிந்தனைகளிலிருந்து விடுதலைசெய்து, நமக்குப் பரந்தநோக்கத்தைக் கொடுத்து, உலகையும், அதிலுள்ள மக்களையும் சரியாகப் புரிந்து கொள்வதற்காகவே, கலை, கலாச்சாரம், கல்வி ஆகிய மூன்று விஷயங்களைப் போதிக்கவேண்டும்.

தமிழ்:— முத்தமிழ்: —

1. இயற்றமிழ்
2. இசைத்தமிழ்
3. நாடகத்தமிழ்

(தவிர)

1. கவிஞர் (அ) நிலையான புலவர் தமிழ்
2. பண்டிதர்தமிழ் அதாவது அர்த்தம் விளங்கும் தமிழ்
3. ஆசிரியர் தமிழ், அதாவது பிள்ளைகளுக்குத் தக்கப்படி பேசும் தமிழ் அதாவது பள்ளிக்கூடத்தமிழ்.

மௌன வாசிப்பு மிகமுக்கியம்.

தமிழின் மதிப்பு:—

தலைமையாசிரியரில் சிலர், பிற ஆசிரியர்களில் சிலர், மாணுக்கர்களில் சிலர் தமிழுக்கு மதிப்புத் தருவதில்லை. தானுக தமிழ்ப்பாடம் வந்து விடுமென்று நினைக்கிறார்கள்.

கட்டுரை:— எழுதினல் முத்துப்போல் எழுதத் திருத்தவேண்டும்.

1. போதிக்கத் தொடங்கும் பாடம் எல்லோருக்கும்தான் ஒன்று எண்ணவேண்டும்.

2. பாடம் போதிக்கும்போது வெளியே போகக்கூடாது அல்லது வேறு அலுவலைக் கவனிக்கக்கூடாது.
3. கேள்விகளுக்குப் பெரும்பாலும் மந்தமான பிள்ளைகளே பதில்கொடுக்கவேண்டும்.
4. உரக்கவும், ஊக்கத்துடனும் வகுப்புக்குத் தக்கபடி போதிக்க வேண்டும்.
5. போதனை யாவருக்கும் விளங்கவேண்டும்.
6. கரும்பலகை உபயோகத்தைச் சற்றும் குறைக்கக் கூடாது.
7. பிள்ளைகள் உபாத்தியாயரைச் சூழ்ந்து நிற்கக் கூடாது.
8. சுபாவ துர்க்குணங்களைக் கூடிய வரை நிறுத்த வேண்டும்.

வைத்திய சோதனை:—

உயர்தரப் பள்ளிகளைவிட ஆரம்பப்பாடசாலை பிள்ளைகளுக்குத்தான் முதலில் சோதிக்க வேண்டும்.

மதம்:—

எல்லா மதங்களையும் மதிக்கக்கூடிய தாழ்வான எண்ணம் வளரவேண்டும். யூனஸ்கோ ஸ்தாபனம் பின்பற்றுகிறது.

சினிமா:—

சில காதல், காம விஷயங்களை அபிவிருத்தி செய்கிறது. பாலரைப் பாழடிக்கும் படங்களையும், குழந்தைகளைக் குட்டிச் சுவராக்கும் படங்களையும் குழந்தைகள் பார்க்காமல் தடுக்கப் பட வேண்டும்.

சபைரீட்:—

தேர்ச்சி பெறுவதற்காகப் படிக்கக் கூடாது. ஒழுக்கம் விருத்திக்காகத்தான் படிக்கவேண்டும் ஒழிப்பு இயக்கத்தால் நாசம் தான் உண்டாகும். பஸ்மாசூரன் கதையே சாட்சியாகும். எதிர் மறையாக எதையும் செய்யக்கூடாது. ஒரே ஒரு இறுதிப்

பரீட்சையின் முடிவைக்கொண்டு ஒரு பையனின் திறமையை மதிப்பிடக்கூடாது. வகுப்பில் எப்படியிருந்தான்? அவனைப்பற்றி வகுப்பு உபாத்தியாயர் கருத்தென்ன? கவனிக்கப்படவேண்டும்.

பாடம்:—

பாலைவனம்போன்ற இப்பூவுலக வாழ்க்கையைப் புஷ்பங்கள் ஆனந்தமாக மலரும் நந்தவனமாக்குவது போலிருக்கவேண்டும். தன்நாடு, பிறநாடு, என வேற்றுமை கூடாது. சர்வதேசக் கட்டுப்பாடுகளின்படி நடக்கப் போதிக்கவேண்டும்.

தண்டனை:—

தண்டிக்கக் கூடாது. அச்சமயம் பயத்தால் கீழ்ப்படிதல் போல் காட்டி பின்பு அதிகம் செய்வார்கள். குழந்தைகளை அடிக்காமல், திட்டாமல், தன்னம்பிக்கையை ஊட்டித் திருத்தவேண்டும்.

பிரஜா பயிற்சியின் நோக்கம்:—

1. சமூக உணர்ச்சி உண்டாவது.
2. தலைமைப் பதவி ஏற்கும் திறமை.
3. ஒழுங்கு முதலியன ஏற்படும் நோக்கம்.
4. திட்டம் வகுப்பதில் அநுபவம்.
5. மாணவர் ஜனநாயக முறையில் செயலில் ஈடுபடவும்,
6. சரீர, உழைப்புக்குக் கௌரவம் கொடுக்கவும்,
7. சேவா உணர்ச்சி ஏற்படவும்,
8. திறமையான, உபயோகமுள்ள பிரஜைகளாகயிருக்கவும்.

போட்டிமுறையின் ஆபத்துகள்:—

கல்வியில் போட்டிமுறை மூளையைக் கெடுக்கிறது. தற்கொலை, திருட்டு, பொய், பித்தலாட்டம், முதலியன ஏற்படும்.

முதலிரண்டு வகுப்புகளுக்கு உணர்ச்சிப்பயிற்சி:—

1. வாசனையினால் பொருள்களை அறியச்செய்தல்
2. சப்தத்தைக் கொண்டு பொருள்களை உணர்தல்
3. சப்தம் வரும் திசைகளை அறிதல்.
4. சாமான் எடையை அறிதல்.

5. பரிசத்தால் சாமான்களை அறிதல்.
6. மெல்லிய குரலையும் கண்டுபிடித்தல்.
7. ருசியினால் பொருள்களை அறிதல்.
8. வஸ்துக்களின் பெயர்களைச் சொல்லுதல்.
9. நிழலைக்கொண்டு வஸ்துக்களை அறியச்செய்தல்.
10. வேகம், மெதுவு, இவைகளை அறிதல்.

(கண்கட்டிவிடுதல்)

சித்திரம்:—

விளையாடும் ஒரு வகுப்பில் திடீரென்று ஒரு படத்தைக் காட்டினால் ஆவலாய்ப் பார்ப்பார்கள். ஆகையால் சித்திரப் படங்கள் அவசியம். வகுப்பு சிறைபோன்ற அறையல்ல.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து உணர்ச்சிகளைக் கிரகிக்கும் ஐம்புலன்களைப் பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டும் ஐந்து கோட்டைவாயில்களாகும். இவைகள் வழியாகப் புகும் ஞானமே பாடமாகின்றது. புத்தகமென்றால் அச்சடித்த தெல்லாம் புத்தகமல்ல. மனத்தைக்கவரும் அழகிய வர்ணப் படங்களாலும் பிள்ளைகளுக்கு ஏற்ற பாட்டுக்களாலும், கதைகளாலும் நிரம்பப்பட்ட புஸ்தகமும், கண்ணால் பார்த்துக் காதால் கேட்டுக் கையால் எடுத்து ஆளக்கூடிய சாதனங்கள், உபகரணங்கள், விளையாட்டுச் சாமான்கள், இயற்கையான, மரம், செடி, கொடி, புஷ்பம், மிருகம், பறவை பொதுவாக இந்த உலகமே பிள்ளைகளின் புத்தகமாகும் ஆகையால் சித்திரம் அவசியம்.

பிள்ளையின் மனம்: —

பிள்ளைகள் முயற்சி செய்துகொண்டே வருவதைப் பார்க்கிறோம். ஆகையால் உய்த்தறிதல் முறை பிரகாரம் சொல்லிக் கொடுப்பது நல்லது. இப்படிப்போதித்தால் கருத்தும் (Ideas) புத்தியும் (Reasoning) சிந்தனை சக்தியும் (Thinking Power) சுயமாகத் தீர்மானம் செய்யும் திறமை (Power of independent judgement) பொதுமுறைகளைச் சரியானபடி வகுக்கும் திட்டமும் Ability to formulate general laws) ஏற்படுகின்றன.

சமூகக்கல்வி:—

பொருளாதாரம், அரசியல் சாஸ்திரம், சமூக அறிவு சமூகவளர்ச்சி, சமூக மனோதத்துவம், முதலியன சமூகக்கலைகளாகும். இக்கல்வி பெற்றால்தான் செவ்வனே வாழவழியை அறிவார்கள்.

ஆங்கிலம்:—

இன்று சர்வதேசப் பாஷையாக பெருமை பெற்றுப் பொலிகிறது. வெள்ளைக்காரர்கள் வைத்துவிட்டுப்போன சொத்தாகும். அறிவுவளர்ச்சி. விஞ்ஞான ஆராய்ச்சிக்கு, ஆதாரமாக ஆங்கிலம் உதவுகிறது. உலக மொழிகளிலுள்ள அறிவுப் பொக்கிஷங்களெல்லாம் இங்கிலீஷில் ஒழுங்காக மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் நமக்குக்கிடைத்தது நம் அதிர்ஷ்டமே. நம் அடிமைத்தனத்தின் நஷ்டஈடாகக் கிடைத்தது. ஒப்பற்ற இலக்கியவளமும் நவீன அபிவிருத்திக்கூறுகளும். படைத்த ஆங்கிலத்தை வெறுக்காமல், கிழ்த்தரமான உணர்ச்சியின்றி கற்றுப்பயனடையச் செய்ய வேண்டும். மேற்கத்திய அரசியல் சித்தாந்தங்களுடன் நம் கொள்கை வளப்படுத்த உதவியது. குறுகிய மாகாண மனோபாவத்திலிருந்து நாம் மீளுவதற்கு உதவியது. பொது நலம், பொது லட்சியங்கள். பொது உணர்ச்சி இவை நமக்கு ஏற்பட்டது.

1. Dr. A. Ramasamy Mudaliar in his convocation address at Nalanda said, "To day english is the most universal language. English is neither the language of any nation nor of any imperial power. It is the language through which knowledge of modern science, technolegy, medicine and various other subjects is most widely communicated. We are shutting the door against this vast treasurehouse of knowledge, shutting the door against progress itself by banning the study of English"

2. An abridged report of Dr. C P. Ramasamy Aiyer's speech at the third all India writer's conference Annamalainagar. " Utilize English as an internatonal

vehicle for thought, power and aspiration. For scientific knowledge utilize international terminology and keep English in its proper and appropriate place in the educational curriculam unless and until you have a literature which can console, satisfy and instruct you."

குழந்தை இலக்கியம்.

கற்பனையில் உயர்ந்தது குழந்தை இலக்கியம்.

வாழ்க்கை முறையை விளையாட்டுபோல் போதிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு எதை எழுதக்கூடாது என்பதை உணர்ந்தபின்னரே எழுதப் புக வேண்டும்.

தூயமான பொருளை இன்பமாக அள்ளிக் கொடுத்துக் குழந்தையின் உள்ளக்கோயிலில் இடம் பெறவேண்டும்.

6. பெற்றோர்.

1. பெற்றோர்களும் ஆசிரியர்களும்.

பிள்ளைகளின் ஒழுக்கவளர்ச்சியை பெற்றோரும் ஆசிரியரும் கவனிக்கவேண்டும். எல்லா விஷயங்களிலும் கட்சிப் பிரதி கட்சியாய் வேலைசெய்யும் அமெரிக்கா, ரஷ்யா இந்நாடுகள் பிள்ளைகளின் நல உரிமையில் ஒன்றுபட்டுள்ளன. ஏராளமக்கள் நிலை பெயர நேரிட்டதால், பிள்ளைகள் நலத்தில் கவனம் செலுத்த உலகப் பொறுப்பாகிவிட்டது. ஐ. நா. சபை குழந்தைகளின் உரிமை சாசனம் தயாரித்துள்ளது. பிள்ளைகள் பக்குவநிலையை ஒட்டி சாத்தியமான அளவு போதிக்க நம்பிவிடவேண்டும்.

1 படிப்பில் ஆர்வம்
2 விளையாட்டில் உற்சாகம்

3 ஆரோக்கியத்தில் அக்கறை
4 உழைப்பில் நாட்டம்
5 உறுதியில் பற்றுதல்
6 சங்கீதத்தில் ரஸனை
7 புதிது தெரியத்துடிப்பு
8 அனைவரிடமும் தோழமை
9 பிறரிடத்தில் அன்பு
10 எவரிடமும் பகையில்லாத மனப்பண்பு
11 உண்மையில் உவகை
12 ஒழுக்கத்தில் உயர்வு

ஆகியவை வளர, பள்ளி, வீடு, ஹாஸ்டல், சூழ்நிலை இவைகளைக் கவனிக்கவேண்டும். பெற்றோர்களுக்கு ஆசிரியர்கள் இதமாக அறிவுறுத்தவேண்டும். ஆசிரியர், பெற்றோர் மானேஜ்மெண்டு அல்லது சர்க்கார், முக்காலிபோன்றவர்கள். பள்ளிக்கு அனுப்பிவிட்டால் மட்டும் போதுமென்று பெற்றோர் நினைக்கக் கூடாது. பிள்ளைகள் தூயவாழ்வு வாழ அவர்கள் பயிற்சியளிக்க வேண்டும்.

1. மற்ற சொத்துக்களைப்போல் பிள்ளைகளையும் ஒரு சொத்தாக நினைக்கவேண்டும். பிள்ளை தனது நன்மையை உத்தேசித்தேயிருக்கிறானென்று நினைக்கக்கூடாது.

2. சிலர் குழந்தை நோக்கத்தையறியாமல் நல்ல தொழில்களைச்செய்து குடும்பத்திற்குப் பொருளைச் சேர்க்கவும், நல்ல இடங்களில் சம்பந்தங்கள் செய்து குடும்ப செல்வாக்கைப் பெருக்கவும், கீர்த்தியையும் அதிகரிப்பதற்காகப் பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள்.

3. பையனுடைய அபிவிருத்தியின் பொருட்டு, 'ஒத்தாசைக்காகத் தன்னிடம் உதித்திருக்கிறானென நினைக்க வேண்டும். நல்லகாரியங்களைத் தகப்பனிடம் பெறவே வந்திருக்கிறானென நினைக்க வேண்டும்.

4. "தோளுக்கு மிஞ்சினால் தோழன்" என்பதுபோல் புத்தியுள்ள தந்தை தன் மகனைச் சிநேகிதன் போல் பாவித்து அவனுடன் கலந்துயோசித்து அவனுடைய நோக்கங்களைச் சிரமப்பட்டு அறிந்து, அந்தப்படி அவன் நடப்பதற்குத் தன்னுடைய மேலான அறிவு, அநுபவம் இவைகளைக் கொண்டு ஒத்தாசை செய்யவேண்டும்.

5. தன் மகன் உடல் சொற்ப வாழ்வாயிருந்தாலும் அவன் சரீரத்திலிருக்கும் ஆத்மா தனது ஆத்மாவைப் போல் விகாச முறையில் அபிவிருத்தி யடைந்தது என்பதை நினைக்கவேண்டும்.

6. பிரியத்தோடும், மரியாதையோடும் நடத்தவேண்டும்.

7. உபாத்தியாயரைப் போலவே பெற்றோரும் வீட்டில் செலுத்தும் அன்பானது பரோபகாரக் குணத்தை உற்பத்திசெய்யும். தேசத்திற்கே பெருமை யுண்டு பண்ணும்.

படிப்புவராத பிள்ளைக்குத் தொழிற் பயிற்சி கொடுக்கலாம். புத்தகப் படிப்பில் அக்கரையில்லாதவர்கள், மேல் படிப்புக்குப் போகமுடியாதவர்கள், பயனுள்ள தொழில் தேடலாம். இன்று பையனுக்கு வயது 10. நாளை 20 வரும். ஓட்டுப் போடும் உரிமை உண்டு. நாட்டைப் பெருமை படுத்தும் கடமை அவனிடமுள்ளது. உத்தியோகத்திற்காகப் படிக்கவைக்காதே. பக்கத்துவிட்டார் மெச்ச துணி கொடுக்காதே. கீரை சாப்பிட யிருக்கும்போது சாக்லெட் கொடுக்காதே. பையன் பாஸ் ஆவதற்குப் புத்தகம் நோட்ஸ் வாங்காதே. அறிவு வளரும் புத்தகங்கள் தேவையாகும். சாக்லெட் கொடுத்துப் பல் போகவும், பட்டாஸ் கொடுத்து ஆபத்தைத் தேடவும், சினிமாவுக்கு அனுப்பி ஒழுக்கம் கெடவும் வைக்கக்கூடாது. கல்வியை பணம் சம்பாதிக்கும் கருவியாக உபயோகிக்கக் கூடாது. பிள்ளையின் இயற்கை ஊற்றுக் கண்கள் கெடக்கூடாது. ஜாதி, வகுப்பு, மாகாண மொழிப் பிரிவு இவைகள் ஏற்பட்டு மனது கெடாமல் பார்க்கவேண்டும். சிறுவர் க்ஷேமாபிவிருத்தி கிராமங்களில்

பரவவேண்டும். நடுத்தர மாதர்களுக்குப் பயிற்சி கொடுத்துச் சிறுவர்களைக் கவனிக்கவேண்டும். சிறுவர் பூங்கா, விளையாட்டிடம், பாலமந்திரம் தேவை.

7. பரீட்சை.

கல்வித்துறையில் பரீட்சை முறை இடஞ்சலே தருகிறது. மாணவர் ஒருவர் மற்றவரின் அறியாமையையும், குறையையும், வீழ்ச்சியையும் கண்டு மகிழும் மனப்பான்மைக்குப் பரீட்சை முறை இடந்தருகிறது. மற்றவனை வீழ்த்துவது நோக்கமாகக் கற்பிக்கிறது. இவை சமூக அமைப்பிற்கு இடையூராகயிருக்கிறது. கல்வியின் உண்மைத் தன்மையை மறக்கச் செய்கிறது. பரீட்சை மயக்கமே பள்ளிப்படிப்பு, சுத்த ஏட்டுச்சுரைக்காய் என்ற கெட்டபெயரைச் சம்பாதித்திருக்கிறது. பெரும் பட்டதாரிகளுக்கும் பகுத்தறிவு போதவில்லை என்ற பழிச்சொல்லுக்கு இடமளித்திருக்கிறது. வாய் வழிப் பரீட்சை, காது வழிப் பரீட்சை அதிகம் ஏற்பட வேண்டும்.

8. விளையாட்டு.

பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு இரண்டுவகை கவனிக்க வேண்டும். 1) மனப்பயிற்சி, 2) தேகப்பயிற்சி.

தேகப்பயிற்சியின் அவசியம்:—

1) மனோசக்தி ஏற்படுகிறது.
2) மிருதுவான சரீரம் ஒழுங்குடன் பலப்படுகிறது.

The games must have two Principle aims

1. *To discipline the will*
2. *To develop the human organism intelligently and progressively.*

விளையாட்டு:— செயலடக்கத்தை விருத்திபண்ணுகிறது. (*Self control in action*) உடல் வளர்ச்சி வளர்வ

தோடு நேச மனப்பான்மை, கூட்டு இயக்க மனப்பான்மை இவைகள் வளரும்.

இப்பயிற்சி, கர்ப்பத்திலேயே சிசுக்களுக்கு ஏற்படுகிறது. வயிற்றில் கன்று துள்ளுகிறதைப் பார்க்கலாம். குழந்தைகளுக்குச் சிட்டிகை கொடுத்து அழவிடுவதால் உப்புசங்கள் வளருகின்றன. இந்திய மாணவர்களும், ஆசிரியர்களும் தேகப்பயிற்சியைப் புறக் கணிப்பதால் முகமலர்ச்சியும் குதூகலமுமின்றிக் குறைபாடுள்ளவர் களாயிருக்கிறார்கள்.

உடல் வளர்ச்சியின்றி அறிவு வளர்ச்சியில்லை. தேகப்பயிற்சி விருத்தியடைவதற்காக முன்னோர்கள் பக்தி செய்யுங் காலத்தில் ஏற்படுத்தியுள்ளனர். மலைமீது ஆலயத்தைக் கட்டியுள்ளனர். ஆலயத்தை அடைய தேகப்பயிற்சி உண்டாகிறது. மனிதனின் அறிவு, ஆற்றல் எல்லாம் உடம்பில் உள்ளவை. உடல் நலம் உள்ள வரையில்தான் எவ்வளவு சிறந்த அறிவும், ஆற்றலும் இருக்கவாழமுடியும். மிகத்தூய்மையான பசுவின் பாலாக யிருந்தாலும் வைக்கும் பாத்திரம் நன்றாகயிருந்தால்தான் கெடாம லிருக்கும், பாத்திரம் தூய்மையற்றதானால் பால்கெடும். அதுபோல எவ்வளவு உயர்ந்த அறிவு ஆற்றலிருந்தாலும் உடல்கெட்டால் அந்த உடலோடு சேர்ந்து படிப்படியாக அறிவாற்றலும் அழிய வேண்டியதுதான்.

உலகப்பற்றுக்கொள்ளாமல் உணரும் உணர்வு அறிவைத் தெளிவு படுத்துகின்றது. ஐயமெல்லாம் தீர்த்து உண்மையை உணர்த்துகின்றது. உடம்பை ஒழுங்காக யந்திரம்போல் இயக்கி, உடல் நலத்திற்கு ஏறுதுணையாக உதவுகிறது. ஆரோக்கியம் பெருக, ஆஸனமுறை பெருகவேண்டும். பழங்கால ரிஷிகள், 300, 400 வருடங்கள் வாழ்ந்தனர். ஆஸன முறையினால் ஆரோக்கியத் துடனிருந்தனர்.

9. நிதி.

உலகச் சண்டைகளினால் நாடு பாழாகி கோடிக்கணக்கானவர் கள் நாடுவிட்டு வெளியேறினர். நாடு, மாகாணம், ஜில்லா விட்டு

வெளியேறியவர்களின் பிள்ளைகள் படிக்க வசதியில்லை. பொது நிதி தேவையாகிறது. செல்வந்தர்கள் முன்வரவேண்டும். தெய்வ நம்பிக்கையற்றவர்கள்கூட குழந்தைகளை முன்னிட்டு நிதி, பூமி, கொடுத்து உதவலாம்.

10. சேவை.

சாரணர் இயக்கம்:—

ஒழுக்கத்தை வளர்க்கும். சாரணத்தொண்டு தேசியத் தொண்டு. சாரணீயம் என்பது குழந்தைகள் முதலாக விளையாட்டு மூலம் கல்வி புகட்டும் ஓர் சிறந்த சாதனம்.

சாரணர் வாக்குறுதி:

1. நான் என்னுடைய மனமே ஆணையாகவும், தேசத்திற்கு அடங்கி நடப்பதாகவும்,
2. பிறர்க்கு எக்காலத்திலும் என்னாலான உதவிகளைச் செய்வதாகவும்,
3. சாரணர் சட்டங்களுக்கு அடங்குவதாகவும் வாக்குறுதி அளிக்கிறேன்.

சாரணர் சட்டங்கள்.

(a) 1. சாரணன் நம்பத்தகுந்தபடி நடக்கவேண்டும்.
2. சாரணன் உண்மை யுள்ளவன்.
3, சாரணன் பிறர்க்கு உதவி செய்யவேண்டும்.
4. சாரணன் எல்லோர்க்கும் நண்பன்.
5. பிறர் எம் மதத்தவராயினும் அவர்களுக்குச் சகோதரன்.
6. சாரணன் மரியாதையுள்ளவன்.
7. சாரணன் அன்புள்ளவன்.
8. சாரணன் ஒழுங்குமுறை தவறுதவன்.

(b) 1. சாரணன் எவ்விதக் கஷ்டங்களுக்கும் அஞ்சமாட்டான்.

2. சாரணன் தைரியமும் தன்னம்பிக்கையும் உள்ளவன்.
3. சாரணன் மனம், வாக்கு, செய்கை, இம்மூன்றிலும் பரிசுத்தமானவன்.

SCOUT.

All the good in the world for the boys. Indeed every boy sbould be a scout. Because scout drill and scout training will make a man. Besides is a great fun. Of course there is some drill for scouts have to learn to work together in companies like soliders.

However, scouts learn under the following:-- For example how to light a fire with one match; how to cook; how to signal; how to observe and write notes on all the they see and many other useful things. Then they learn first aid that is what to do in accidents and how to treat wounded people before the doctor comes. One is to do a kind deed to some one everybody.

11. நம் நாடு.

நம் நாடு:—

ஒரு காலத்தில் கல்வி கேள்விகளில், கலைவளர்ச்சிகளில், உலகில் சகலவிதமான நாகரீக வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக, நிலைக்களமாக இருந்த நம் பாரதம், இன்று கல்வி விஷயத்தில் மிகவும் அவல நிலையில் உள்ளது. இந்நிலைமையைக் கண்டு வெட்கித் தலைகுனியவேண்டிய நிலையில் உள்ளோம்.

இருபதாவது நூற்றாண்டின் இப்பகுதி மின்னல் வேகத்தில் மாறுதல்கள் நிகழும் ஒரு பகுதியாகும். பலவிதமான புரட்சிகளும், விஞ்ஞான முன்னேற்றங்களும், புது மலர்ச்சிகளும் கல்வியில் பிரமிக்கும் அளவுக்கு மாறுதல்களும் நிகழும் ஒரு காலம். ஆகையால் 15 வருடகாலத்திற்குள் உலக நிலையை அனுசரித்து, தேசநலனையும் மனதில்கொண்டு கல்வியில் ஒரு பெருத்த புரட்சியை

உண்டாக்கவேண்டும். அறியாமையை அடித்து விரட்டிச் சகலரும் அடிப்படைக்கல்வி அறிவைப் பெற்ற ஒரு நிலைக்கு நாட்டைக் கொண்டு வரவேண்டும்.

இன்று உலகம் இணக்கமாகி வருகிறது. எல்லா வகையிலும் சர்வதேச மனப்பான்மை வளர்ந்து வருகிறது. ஆகவே மற்ற நாட்டின் உயர்ந்த தத்துவங்களையும் நாம் தள்ளாது கொள்ள வேண்டும். நம் பாரதப்பண்பாட்டையும் உலகறியச் செய்யவெண்டும் பழமையெல்லாம் குறையுள்ளதல்ல. புதியன எல்லாம் குணமுள்ளதாகாது. இரண்டிலுமுள்ள நல்லவற்றைப் பாங்காகக் கையாள்வதே நலம் பயக்கும். நம் பாரத நாட்டின் உயர்வுக்கு அனைவரும் உழைப்போமாக;

கல்வியும் நாமும், பிறநாடுகளும்:—

படித்தவர் கணக்கு.

இந்தியா	...	15 %
அமெரிக்கா	...	95 %
ஜெர்மனி	...	100 %
ஜப்பான்	...	95 %
ஐக்கிய அரசாங்க நாடுகள்	...	100 %
ஆஸ்திரேலியா	...	100 %
ரஷ்யா	...	92 %

ஸ்வீடன் நாட்டில் படியாதவன் 1000-ல் ஒருவனே. நம் நாட்டில் கல்வி அறிவு மிகக்குறைந்த அளவில் இருப்பதைக்கண்டு பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் அரசியல் திட்டம் முடிந்ததும் கீழ்க்கண்ட இரண்டு குறைகளைக் குறிப்பிட்டார்.

1. "கல்வி அறிவு யாவரும் பெறுமலிருப்பதற்கு முன்பே வோட்டுரிமை அளித்து விட்டோம்.
2. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகருக்குக் குறைந்த பட்சபடிப்பும் யோக்கியதாம்சமும் நிர்ணயம் செய்யாமலிருப்பது."

ஜனநாயகப் பாதையில் நம்நாடு தளிர் நடைபோடுகிறது. ஜனநாயகம் பலப்படவேண்டுமானல் அப்பாதையிலிருந்து துளியும்

பிறழாமல் நல்ல நடையில் ஸ்திரமாகச் செல்லவேண்டுமானல் உண்மை ஜனநாயகம் மிளிரவேண்டுமானல் சீக்கிரம் கல்வி அற்ற தன்மையை விரட்டி அடித்துச் சகலரும் சீக்கிரம் அறிவுபெறும் முறையை நாம் கண்டுபிடித்தாகவேண்டும்.

அறியாமையை விரட்டப் பல நாடுகளிலும் கையாண்ட முறைகள்:-

ஜார் ஆட்சியிலிருந்து ரஷ்யா விடுபட்டவுடன் நம் நாட்டைப்போலவே கல்வி அறிவு அதிகம் பெருமலிருந்தது. **1913**-ல் ரஷ்யாவில் படித்தவர்கள் **28%**. இன்று அங்கு **92%** படித்தவர்கள். **1917**-ல் புதிய அதிகாரம் ரஷ்யாவில் தோன்றியது. கீழ்க்கண்ட திட்டங்களினல் அனைவரும் படித்தனர்.

1. காலைமாலை இருவேளைகளிலும் ஒருவருக்கேவகுப்புகள் இல்லாமல் இருபிரிவினர்களுக்கும் போதிக்கப்பட்டு இரண்டு மடங்கு மாணவர்கள் கல்வியறிவுபெற்றனர்.

2. சர்க்கார் காரியாலயங்களும் பாடசாலைகளாக மாறின.

3. முதியோர் கல்வியும் போதிய கவனம் பெற்றது.

4. தொழிற்சாலைகள் தோறும் கட்டாயக் கல்வி புகுத்தப் பட்டது.

5. சுவர்கள், மக்கள் கூடுமிடங்கள், இவைகளில் படித்த படிப்பை மறக்காமலிருக்கக் கல்வி சம்பந்தமான விஷயங்கள், படித்ததை நினைவுகூறும் விஷயங்கள் ஒட்டப்பட்டன.

கொரியா-சீன:—

கல்வியின் மறுமலர்ச்சி இயக்கம் நடைபெறுகிறது.

அமெரிக்கா:—

1) **16**-வயது வரை கட்டாயக் கல்வி
2) மாணவர் விரும்பும் துறையில் கல்வி
3) வயதுவந்தோர்கள் இறக்கும் வரையில் கல்வியில் ஆர்வம்.

இங்கிலாந்து:—

1) மாணவர் பாடப்புத்தகங்களில் மட்டும் உழலாமல் புத்தகப் புழுவாக இல்லாமல் வாழ்வின் சகல துறைகளிலும் அநுபவம்பெறும் கல்வி புகட்டப்படுகிறது.

2) நூல் நிலையங்கள் அதிகம்.

ஆஸ்திரேலியா:—

1) 14-வயது வரை இலவசக் கல்வி.

2) பெற்றோர்களுக்கு, தங்கள் பிள்ளைகள் வந்து படிப்பதற்காக ஒரு மாணவனுக்கு ரூ. 3—10—0 மான்யமாக அளிக்கிறார்கள்.

3) இலவசப் பகல்வேளை போஜனமும் உண்டு.

இம்மாதிரியான பல புரட்சிகரமான வழிகள் பின்பற்றப்பட்டு அங்கெல்லாம் அறியாமை அடித்து விரட்டப்பட்டது.

கிராமச் சீரமைப்பு:—

1) தேசீயப் புனருத்தாரணம் என்றால் பெரிய நகரமாக்கப் படவேண்டுமென்பது அல்ல. கிராமம் கிராமமாகவே யிருந்து முன்னேற்றம், புனர்வாழ்வு ஏற்படவேண்டும்.

2) கிராமத்தேவைகளை கிராம ஜனங்களே செய்ய வேண்டும். வெளியாரே எல்லாம் நடத்தமுடியாதல்லவா?

3) கிராமச் சீரமைப்பு—உண்மையான கல்விப்பணி வேண்டும்.

4) விவசாயிகள், தொழிலாளருக்கு வருமானம் அதிகம் கிடைக்கவேண்டும்.

5) கிராமவாசிகளிடையே மனம் மாறுதல் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார முன்னேற்றம் காணலாம்.

6) கிராம வசதியானது உற்பத்தியை ஒட்டியே வாழ்க்கைநிலை உயருவதாகயிருக்கவேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்கள்:—

கிராம ராஜ்யம் என்பது பரிபூரணக் குடியரசு என்று அர்த்தம். மக்களுக்கு உணர்ச்சி, உத்வேகமும் ஊட்டி, தன்னம்பிக்கை உள்ளவர்களாக, சுயதொழில் திறன் உள்ளவர்களாக ஆக்குவது.

கிராமமும் கலாச்சாரமும்:—

நம் நாட்டின் புராதனக் கலாச்சாரத்தை நவீனகாலத்துடன் பிணைக்கவேண்டும். விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள் அந்த கிராமங்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் பழமையையும் புதுமையையும் இணைத்தவர்களாவோம். கிராமமக்கள் எளியவர்கள். கிரகிக்கும் சக்தியுள்ளவர்கள். அவர்கள் போக்கில் விட்டு விட்டால் ஒரு பொய்கூடச் சொல்லமாட்டார்கள். நிலச்சொந்தக்காரர்களும், கிராமவாசிகளும், நிலங்களைப் புறக்கணித்ததாலும் கிராமம் சீர்கெட்டுவிட்டன. நிலச்சுவான்தார்கள் நிலங்களிலேயே வசிக்கச் செய்யவேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும்.

நல்ல கிராமம்:—

1. நல்ல கிராமத்திலே - நமது
நாட்டின் உயிர் நிலையாம்
செல்வத் திருமகளின்—பசுந்திரு
செழித்த பூம் பொழிலாம். —நல்ல

2. உழைக்கும் வேர்வையினுல்—பயிர்
ஓங்கிப் பசி நீங்கத்
தழைக்கும் காய்கனிகள்—என்றுந்
தன்னுயிர் தாங்கிடுமே. —நல்ல

3. காடு தோறுங் கழனி—ஏரிக்
கரை தோறும் பசுக்கள்
வீடு தோறுங்கலைகள்—வளர்
வீதி தோறும் விருந்து —நல்ல

4. பாடுபட்டுப் பிழைக்கும்—தொழிலாளர்
பாட்டு நிறை கற்று

ஏடுகற்ற புலவர்—அறிவொளி
இன்ப வுயிருற்று. —நல்ல

5. தூய வுணவுடையால்—போதுத்
தொண்டு செய்நல் லுறவால்
நேய ஒருமையினுல்—அன்பு
நிலவும் இவ்வூரே. —நல்ல

6. கோட்டு முழக்கோலியும்—அழகிய
கோயில் மணி ஒலியும்
பட்டு நிலாவொளியில்—ஐய
பாரதக் கூத் தொலியும். —நல்ல

7. நல்ல கிராமத்திலே நாம்
நல்ல வராய் வாழ்ந்து
நல்ல கிராமத்திலே நமது
நாட்டிசையை வளர்ப் போம். —நல்ல

மேல்நாட்டுப் படிப்பு:—

மேல்நாடுகளில் ஹாலண்டு, கேம்பிரிட்ஜ், இங்கிலாந்து, விஸ்கன்ஸியான், யுனைடட்ஸ்டேட்ஸ் முதலிய பல்வேறு யுனிவர் சிடிகளில் மாணவர்களுக்காகப் பரிவுடனும் ஆதரவுடனும் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. படிப்பவர்களுக்கு ஆதரவாக ஸ்காலர் ஷிப்கள் வாங்கித்தருவதற்கானதை ஆசிரியர்கள் செய்கிறுர்கள். வெளிநாடுகளிலிருந்து படிப்புக்காக வரும் மாணவர்களுக்குப் பிரத்தியேகமாகவும் அதிகமான கவனிப்பும் அளிக்கப்படுகிறது.

அயல் நாட்டில் மணிக்கு ரூ 4/— சம்பாதிக்கத் தொழிலாளர் களுக்கு வசதியிருக்கிறது. ஆனுல் அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழிலாளர்களைக் காணமுடியாது. தொழிலாளிக்கும், முதலாளிக் கும் வித்தியாசமே தெரியாது. அந்தஸ்தும், சமத்துவமுமான ஸ்தானமிருக்கிறது. ஒருவருக்குக் குறைந்தபட்சம் சம்பளம் ரூ 1500/— கிடைக்கிறது. மோட்டார்கார் இல்லாத தொழிலாளி களே இல்லை. பல மைலுக்கப்பால் வேலைசெய்யும் தொழிலாளி சிறியதோர் ஆகாய விமானத்தில் சென்று திரும்பிவந்து தன் வீட்டின் மாடியில் இறக்கிவிட்டு வீட்டிற்குள் போவான்.

உழைப்பில்லாத மனிதர்களை அங்கு காணமுடியாது. நிலத்தை வாங்கிவிட்டால் விவசாயத்தில் நேரடியாக அவர்களே செய்வது வழக்கம். பணத்தைத்தேடி நிலத்தைவாங்கிக் குத்தகைக்கு விட்டு விடாமல் அவர்களே நிலத்திலிறங்கி சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்குவார்கள். வருமானத்தையும் அதிகமாக்கு வார்கள்.

மாணவர்கள் படிப்பு, தொழில் முதலியவைகளைக் கற்றுக் கொண்டே சம்பாதித்துச் சாப்பிட்டும், படிப்புக்கான செலவையும் சமாளித்துக்கொள்வார்கள். பல துறைகளிலும் எந்த வகையிலும் முற்போக்குக்கான முயற்சிகள் வெளிநாடுகளில் முன்னணியில் பிரகாசிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

12 புத்தகம்.

1. மனிதனின் உயிர்போன்ற சிறந்த நண்பன்.
2. அழிவற்ற நிரந்தரமான பொருள்.
3. "காலம்" என்ற பெருங்கடலில் எழுப்பப்பட்டிருக்கும் கலங்கரை விளக்கு.
4. சிலவற்றைச் சுவைத்துப் பார்க்கவேண்டும்.
   மற்றதைக் கபளீகரம் செய்யவேண்டும்.
   சிலதைச் சுவைத்து ஜீரணம் செய்யவேண்டும்.
5. வீரர், ஞானிகள் இவர்கள் இதயத்தை நமது மனத்தில் பிரதிபலித்துக் காட்டுவதே புத்தகங்கள்.
6. புத்தகங்களில்லையென்றால் கடவுளில்லை.
   நீதி சகிக்க முடியாததாயிருக்கும்.
   இயற்கை விஞ்ஞானம் குத்திட்டு அசையாமல் நின்று விடும். தத்துவம் முடமாகிவிடும். எழுத்துக்கள் ஊமை யாகிவிடும்.
7. பாரம்பரியம் ஒரு எரி நட்சத்திரம். ஒரு தடவை கீழே விழுந்தால் மீண்டும் அதற்கு ஒளியூட்டமுடியாது.

ஞாபகசக்தி ஒருதடவை தடையானால் மீண்டும் மனத்திற்குக் கொண்டுவர முடியாது. ஆனால் எழுத்து என்றைக்கும் மாறாமல் ஒளிவிட்டுத்திகழ்வது. அதைச் சுற்றியுள்ள கருமேகங்கள் விலகினவுடன் முன்னைவிடப் பிரகாசமாகவே இருக்கும். அதைப்போன்ற புத்தகங்கள் மிகப்பெரிய பண்டகசாலை. சிலகாலம் அஜாக்கிரதையாலோ, மறதியாலோ நாம் இருந்தாலும் மீண்டும் அதைத்திறந்தவுடன் வழிகாட்டத் தவறாது.

8. ஒரு புத்தகம் எழுதியவனுடைய இதயத்திலிருந்து வந்திருந்தால் நிச்சயம் மற்றவர்கள் இதயத்தைத்தொடும். சிந்தனையைக் கிளறவல்ல புத்தகங்கள் இந்தியாவில் தயாராகவேண்டும். தற்சமயம் நம் நாட்டில் இத்தகைய புத்தகங்கள் குறைவு. ஒரு சில புத்தகங்கள் சிந்தனையைக் கிளறவல்லதாயிருந்தாலும் வாங்கும் சக்தியின்மையைத் தவிர சிரத்தையின்மையும் முக்கிய காரணமாயிருக்கிறது. பண்பு வளர நல்லபுத்தகங்கள் படிக்கவேண்டும்.

கீதை:—

பலனைப்பற்றிய கவலையுடன் பாடுபடுவது; அவ்விதக் கவலையில்லாமல் அமைதியாகத் தன்னலமற்றுப் பாடுபடுவதைவிட மகாமட்டமானது. (கீதை)

குறள்:—

உலகின் எப்பகுதியிலும் எந்தெந்த ஒரு நூலும் சிந்தனைச் செறிவிலும், கருத்தாழத்திலும், சொல் நயத்திலும், சொல் செட்டிலும் குறளை மிஞ்சி விடமுடியாது. தமிழ், இலக்கியத்திற்கு மூலநூல்.

பொது அறிவையும், மனித வாழ்க்கையின் சிறந்த அநுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டதுதான் குறள். சாதி, சமயம், நாட்டு எல்லை இவைகளைக் கடந்த பொது அறநூலாகும்.

எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டினருக்கும் நிலையான உண்மைகளை வாரி வழங்குவதில் வியப்பொன்றில்லை. தெய்வத் தன்மை; இலக்கியச் சிறப்பு வாய்ந்தது.

தமிழ்:—

உலக அற்புதமொழி. பழமை. கோடிக்கணக்கானவர்கள் பேசும் கன்னித்தமிழ். தெய்வசக்தியுண்டு. உள்ளத்தைப் பரவசப் படுத்தும் பாடல்கள் தமிழில் உண்டு.

புத்தகசாலை:—

கற்கால மனிதர்கூடப் பார்த்ததைப் பொறித்தார்கள். **கல்வி அறிவுக்கிடங்கு** என்று பெயர். நல்ல புத்தகங்கள் தேவை. வெளியிடப் பொதுமக்கள் நன்கொடையளிக்க வேண்டும். மற்ற நாடுகளில் இவையதிகம்.

13. உபகரணங்கள்.

1. லேசான மரத்தில் பட்சிகள், மிருகங்கள் வெட்டிக் கொண்டு கலர் கொடுத்தல்.
2. ஓட்டுப் பாலட்பெட்டி அட்டையில் செய்தல்.
3. அட்டையில் கட்டடங்கள் அமைத்தல்.
4. மரத்தால் சட்டசபை அங்கத்தினர், உருவங்களும் அமைத்தல்.
5. பல தேசப்படங்கள்.
6. பலவிதக் கலர்ச் சித்திரங்கள்.
7. வட்டத்தில் வாசித்தல்.
8. வட்டத்தில் எழுத்துக்கள் எழுதி கடியாரமுள்போல் செய்து. தள்ளிக் கொண்டேவந்தால் எழுத்தைச் சொல்லவேண்டும்.
9. வட்டத்தில் எழுத்துக்கள் கடியாரமுள்ளில் ெ இந்த எழுத்துமாதிரி போட்டுத் தள்ளிக்கொண்டே வாசிக் கச்செய்தல்.
10. எழுத்து அடுக்குதல் (letter building) பதம் அடுக்குதல் (word building) வார்த்தைகள் அமைத்தல் (sentence building)

11. அறுசுவைப் பதங்கள் எழுதிக் கவரில் போட்டிருப் பதை எடுக்கச் செய்தல்.

12. வட்டத்தில் தாமரைப்பூ கட்டையில் வெட்டித் தனித்தனியாக எடுத்துப்போட்டு அடுக்கச்செய்தல்.

13. பனை ஓலைக்குருத்தில் உருவங்கள் வெட்டி வில்வெட் துணியில் ஒட்டி பிரேம்போட்டுத் தொங்கவிடுதல்.

14. வட்டத்தில் கடியாரம்போல் வெட்டி எழுத்துக்களை எழுதுதல். | அ ‿ இந்த வளைவுகளை அட்டையில் சேர்த்துத் தள்ளிக்கொண்டே வாசிக்கச்செய்தல்.

15. வட்டத்தில் பதங்கள், உருவங்கள், எழுதி வாசிக்கச் செய்தல்.

16. வட்டத்தில் எண்கள் கூட்டுதல்.

17. கார்டுகளில் உருவங்கள் போட்டு அதன் நேரில் விலைகளை எழுதிவிடுதல். கூட்டும்படி செய்தல்.

வளையல்.........வளையல் என்ன விலை?
பெட்டி ....பெட்டி என்ன விலை?
கோழி ....கோழி என்ன விலை?

18. வார்த்தைகள் அமைக்கும் விளையாட்டுப் பெட்டி, மேலே உயிரெழுத்துக்கள், அறைகளில் பல எழுத்துக்கள்.

19. நீண்ட அட்டையில் உள்ளே எழுத்துக்களும் கி, கீ முதலியவைகளை எழுதிக்; கோர்த்து வாசிக்கச் செய்தல்.

20. கதை, அபிநயப்படங்கள் தயாரித்துக் கொள்ளுதல்,

21. வட்டத்தில் எண்கள் ஒட்டுதல், எண்கள்மேல் ஆணிகளை மேலே தெரியும்படி அடித்தல். வளையல் கள் இரண்டை எடுத்து இரண்டு நம்பர்களின் மேல் போடுதல். அவ்வெண்களைக் கூட்டச் செய்தல்.

22. பல கார்டுகளில் பலவிதப் பெயர்களை, ஒரே அர்த்த முள்ளவைகளைப் போட்டுவைத்தல். ஒரே அர்த்த முள்ளவைகளைப் பொறுக்கியெடுக்கச் செய்து அடுக்குதல்.

23. படங்களுக்கு நேரில் வார்த்தைகள் அமைத்தல். வார்த்தைகளில் எழுத்துக்கள் விட்டும், சேர்த்தும் வாசித்தல்.

24. ஒரு பெட்டியினுள் கதை விளக்கும் படங்களைச் சுற்றி வைத்திருந்து வரிசைக் கிரமமாய்ச் சுற்றி வருதல்.

25. வட்டத்தில் லகர, ளகர, ழகர பேதங்கள் தெரியச் செய்தல்.

26. Daniel Method, Individual reading apparaties. படங்கள், பெயர்கள் எடுத்தல் — வாசித்தல்.

27. Individual Number work — கார்டுகளில் செய்தல்

$$10 - 0 = \quad 10 - 2 =$$
$$10 - 1 = \quad 10 - 3 =$$

இதுமாதிரி கார்டுகளிலுள்ளதற்குப் பதில்வாங்குதல்.

28. தசாம்சப் படவிளக்கங்கள்.

29. ஸ்தானமதிப்பு, இந்தியமுறை, இங்கிலீஷ்முறை.

30. ஒவ்வொரு தேசத்தின் முத்திரைகள் சேர்த்து வைத்தல்.

31. பின்னங்கள் $\frac{3}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{4}$ (படங்களில் தயாரித்தல்)

32. சதுர அங்குலங்கள் (படத்தில் தயாரித்தல்)

33. நிறுத்தலளவை, காகித அளவை, நீட்டலளவை ரூபாயின் பாகங்கள். வட்டத்தில் ரூபாயின் பாகங்கள். சார்ட்டுகள் தயாரித்தல்.

34. பெருக்கல் வாய்ப்பாடு $^{\circ\circ}$ — $2 \times 1 = 2$. $^{\circ\circ}_{\circ\circ}$ = $2 \times 2 = 4$.

35. பத்துபத்தாகக் கூட்டுதல், பத்து ஒன்றுகள் சேர்ந்தால் ஒரு பத்தாகும். பத்துபத்துகள் சேர்ந்தால் ஒருநூறு ஆகும். பத்து நூறுகள் சேர்ந்தால் ஒரு ஆயிரம் ஆகும்.(சார்ட்டுகளில் எழுதித்தயாரித்தல்)

36. கூட்டல், கழித்தல், கெடியாரத்தில் போட்டுக் காட்டுதல்.

37. கூட்டல், கழித்தல், வாய்ப்பாடு கடியாரத்தில் போட்டுக் காட்டுதல்.

38. அட்டையில் கடைசியில் "இலே" என்று எழுதிப் பலவித இலேகளேயும் சிறு அட்டையில் எழுதி வைத்திருந்து அதனதன் நேராக வைத்து வாசிக்கச் செய்தல். ஒவ்வொரு இலேயையும் நெருப்புப் பெட்டியில் அடைத்து இலேகளுக்கு நேரில் ஒட்டி வைத்தல்.

39. வட்டத்தில் வாக்கியங்கள் அமைத்தல்.

40. கண்ணுடியினுள் கலரிலேயே தேசப்படம் வரைதல்.

41. அட்டையில் கெடியாரம் வெட்டிவைத்தல்.

42. வட்டத்தில் ஆண்பால், பெண்பால் காட்டுதல்.

43. வட்டத்தில் Pronoun காட்டுதல்.

44. படங்களின் மீது ஏற்ற பதங்களேப் பொருக்கி வைத்தல்.

45. படங்களுக்கு நேராக ஏற்ற பதங்களே வைத்தல்.

46. கட்டங்கள்மீது அந்தந்த அவயவங்களின் பெயரை வைத்தல்.

47. தலேப்புக்கு ஏற்ற பதங்களே வரிசையாய் வைக்கப் பழகுதல்.

48. அந்தந்த எழுத்துக்கு நேரே அந்தந்த எழுத்துள்ள பதங்களே வைத்தல்.

49. அந்தந்த நிறத்திற்கு நேரே அந்தந்த எழுத்துள்ள பதங்களே வைத்தல்.

50. அந்தந்த இனப் பெயர்களே வரிசையாய் வைத்தல்.

51. பெட்டியிலுள்ள பெயர்களே எடுத்து வைக்கச் செய்தல்.

52. விவசாய ஆயுதங்களே எழுதிப் பழகுதல்.

53. வட்டத்தில் எதிர்ப்பதங்கள் வைக்கச் செய்தல்.

54. அட்டையில் சென்னை, இந்தியா போன்ற நாடுகளை outline மட்டும் வெட்டிவைத்திருந்து படங்களை உள்ளே சொருகிக் காட்டுதல். பிரிவுகள், ஜனத் தொகை, ஆறு, மலை, தங்கம், வெள்ளி, இரும்பு, நிலக்கரி, எண்ணெய், தொழிற்சாலை — இவைகள் இருக்குமிடத்தில் வைக்கச் செய்தல்.

55. மாகாணத் துரைத்தனத்தின் உருவப்படம் கோபுர உருவத்தில் செய்துவைத்தல்.

56. மங்களவாசகம், வாசகக்கோவை (Jayam company, Mrs. Devasahayam Ammal Ft. Salem) சிறுவர் ஜனுபிமானி முதல் புத்தகம், இவைகளி லுள்ள பதங்களைப் பொறுக்கி எடுத்தல்.

57. படங்களைக் கொண்டு பெயர் அமைத்துக் காட்டுதல்.

58. ஆல்பம் சேர்த்துவைத்தல்.

59. சதுரக்கட்டைகள் 6 (அ) 12 உள்ளதாய்ச் சமஅள வாய் வெட்டி, அதன் பக்கங்களில் படங்களை ஒட்டிய பின், அளவாய் வெட்டி எடுத்து விடுதல். ஆறு பக்கங்களிலும் 6 படங்கள் வரும். அடுக்கச்செய்தல்.

60. சரித்திரம், பூகோளம், சுகாதாரம், தேசபரிபாலனம் இவைகள் சம்பந்தமான சார்ட்டுகள் தயார் செய்தல்.

14. சில விவரணங்கள்.

1. ஆரம்பப்பள்ளி வயது — வருடங்கள்.

வகுப்புகள்	I.	...	$5\frac{1}{2}$ — $6\frac{1}{2}$
	II.	...	$6\frac{1}{2}$ — $7\frac{1}{2}$
	III.	...	$7\frac{1}{2}$ — $8\frac{1}{2}$
	IV.	...	$8\frac{1}{2}$ — $9\frac{1}{2}$
	V.	...	$9\frac{1}{2}$ — $10\frac{1}{2}$

கட்டாயக் கல்வி பிரதேசத்தில் யுக்த வயது 6 முதல் 14 வரை இருக்கவேண்டும்.

2. கிராண்டு மதிப்பீடு (Assessed grant) சராசரி ஆஜர் ஆசிரியர் எண்ணிக்கை, 4, 5 வகுப்பில் விகிதாச்சாரம் இவைகளின்பேரில் மதிக்கப்படும்.

3. கொடுபடும் கிராண்டு(Assigned grant)இறுதியாக நிர்ணயித்துத் கொடுக்கப்படும் கிராண்டு ஆகும்.

4. தேக்கம் (Stagnation) படிப்பதற்குக் குறிப்பிட்ட காலத்திற்குமேல் ஒரேவகுப்பில் தங்கியிருத்தல்.

5. **சட்ட ரீதியான வெட்டு:**— (ஸ்டேட் ருட்டரிவெட்டு) 4, 5 வகுப்புகளிலோ அல்லது முதல் வகுப்புடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இரண்டிலுமோ, குறைவு ஏற்படுவதைப் பொறுத்துக் கிராண்டில் விகிதாச்சாரம் குறைக்கப்படுவதுதான்.

6. **ஆசிரியர் ஈவு:** — சராசரி ஆஜர் 20 மாணவர்களுக்கு ஒருவர் வீதமும், மிச்சமுள்ள ஒவ்வொரு 5 மாணாக்கருக்கும் $\frac{1}{4}$ வீதமும் கணக்கிடவேண்டும். 5-க்குக் குறைந்தால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

7. **போதனுமுறை ஆசிரியர் விகிதம்:** — போதனு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், பயிற்சிபெருத மற்றவர்களுக்குமுள்ள விகிதாசாரத்தைக் குறிப்பிடும்.

8. நஷ்டம் (Wastage) 5-வது வகுப்பு முடியுமுன் பாடசாலையிலிருந்து விலகிவிடுதல்.

9. **உபரி மதிப்பீடு:**- ஒவ்வொரு மாணவனையும் மூன்றுக் கணக்கிட்டு, 4, 5 வகுப்புகளிலிருக்கும் ஆஜரின் சராசரிக்குக் கூட்டப்படும் எண்ணிக்கை.

10. **கிராண்டு அஸ்ஸெஸ்மெண்டு,**— சராசரி 20 பிள்ளைகளுக்குக்கீழ் ஆஜர் உள்ள பள்ளிக்கூடத்திற்குக் கிராண்டு கணக்கிடமாட்டார்கள்.

11. சராசரி 20 மாணவர்கள் ஆஜராயிருந்தால் ஒரு உபாத்தியாயருக்குக் கிராண்டு கணக்கிடலாம்.

12. ஒரே வகுப்பில் 2 வருடங்களுக்கு மேலிருக்கும் பிள்ளைகளுக்கும்5 வயதிற்கு கீழ்பட்ட பிள்ளைகளுக்கும் கிராண்டு கணக்கிடமாட்டார்கள்.

13. I. கிராண்டில் பிடித்தங்களுக்குக் காரணங்கள்:—

(a) ஆர்கானிசேஷன், டிஸிப்பிளின், கல்வி இடம், உபகரணம், இவற்றில் குறைகள்.

(b) பள்ளிநாட்கள், மணி, இவைகளைக் குறைத்தல்.

(c) அம்மையிலிருந்து பாதுகாக்கப்படாத பிள்ளைகளை வைத்திருத்தல்.

(d) அரசியல் காரியங்களுக்காகப் பள்ளிக் கட்டிடங்களை விடுதல்.

(e) அங்கீகாரம் ஆகாத புத்தகங்களை உபயோகித்தல்.

(f) பெண் பள்ளிகளில் உத்திரவு அன்னியில் ஆண் ஆசிரியர்களை நியமித்தல்.

(g) உத்தரவு அன்னியில் இரண்டு வருடங்களுக்குள் பாடப் புத்தகங்களை மாற்றுதல்.

(h) ரிஜிஸ்தர்களில் பொய் காணுதல்.

(i) உபாத்தியாயர் நியமனத்தைப் பற்றித் தப்பு இருத்தல்.

(j) பிள்ளைகளின் ஆஜரைப் பற்றித் தப்பு இருத்தல்.

(k) மோசடி, அங்கீகார நிபந்தனையில் குறைவுகள், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் 50 % குறைவை ஜில்லா கல்வியதிகாரி அவர்கள் சிபார்சு செய்யலாம்.

II. கிராண்டில் ஏற்றம் செய்யக் காரணங்கள்:—

(a) சிறந்த தேர்ச்சி.

(b) பிள்ளைகளின் சக்திகளையும், பேசும் திறமைகளையும், ஆராயும் திறமைகளையும் அதிகப்படுத்துவதற்கான முறைகள்.

(c) தேகப்பயிற்சிக்குத் தக்க கவனம் செலுத்தப்படுதல்.

(d) பிள்ளைகளை வாழ்க்கைக்குத் தயாரிக்க முறைகளைக் கையாடல்.

III. தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள்:—

(a) ஒன்று அல்லது இரண்டு உபாத்தியாயர்கள் உள்ள பள்ளிகளில் தேர்ச்சி பெற்றவர்களே இருத்தல் வேண்டும்.

(b) இரண்டுக்கு அதிகமான ஆசிரியர்களிருக்குமிடங்களில் இரண்டுபேருக்கு ஒருவராக இருக்கலாம்.

IV. கிராண்டு கிடைக்கப்படாத காரணங்கள்:—

(a) எந்த ஜாதிக்காவது எட்டமுடியாத இடத்தில் பள்ளியை அமைத்தல்.

(b) ஜாதி உத்தேசித்து எந்தப் பிள்ளையையாவது சேர்த்துக்கொள்ள மறுத்தல்.

(c) சர்வீஸ் ரிஜிஸ்தரில் கண்டபடி ஆசிரியருக்குச் சம்பளம் கொடுபடாமலிருத்தல்.

(d) சரியான காரணங்களின்றி ஆசிரியர்களை நீக்குதல்.

(e) விதிகளுக்கு மாறாகச் சம்பளம் பிடித்தங்கள் செய்தல்.

15. கிராமக் கைத்தொழில்கள்.

நமது கிராமங்களின் கைத்தொழில்களில் ஒரு சில நசிந்துவிட்டாலும் முக்கியமானவை நசிக்கப்படவில்லை. நமது உற்பத்தியைக்கொண்டுதான் வாழ்கிறோம். பெரும்பாலும் விவசாயம், உணவுப்பொருள். எண்ணெய்ப்பொருள் முக்கியம். வீடுகட்டும் கற்கள், ஜன்னல்கள், கதவுகள் இவை வெளிநாட்டிலிருந்து வருபவையல்ல, அவைகளுக்குக் கூலி குறைவாக இருப்பதால் நமக்கு அவ்விதம் தோன்றுகிறது.

எதிர்கால சுபிட்சத்திற்குவழி:—

எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குப் போகலாம். ஆனால் தங்கள் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கும் தொழிலுடன் அவர்களுக்குத் தொடர்பில்லாமல் போகக்கூடாது. பள்ளியில் படிப்புக்கும் தொழிலுடன் தொடர்புக்கும் நேரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய கல்வி முறை ஒன்றுதான் சுபீட்சத்திற்கு வழியாகும்.

16. உழைப்பால் உயர்ந்தவர்கள்.

ஓய்வுநேரமும் கழிக்கவேண்டிய முறைகளும்;—

உல்லாசப் பிரயாணத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும். வீட்டில் எழுதிவரும்படி பாடங்கள் கொடுக்கக்கூடாது. அது அவனுக்குப் பெருங்கடன். கடன் பட்டவன்போல் தவிப்பான். பிரைவேட் ஆசிரியர்களிடமும் மாட்டிக்கொள்கிறான். பிரைவேட் கூடாது.

உழைப்பு:— கடுமையான உழைப்பு, விவேகமான ஒத்துழைப்பு, நம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவைமூலமே சுபிட்சம் ஏற்படமுடியும். சுயநலத்திற்குப்பதில் ஒத்துழைப்பு, சோர்வுக்குப்பதில் குறிக்கோளை அடையும் ஆர்வம், பொறுமைக்குப் பதில் விவேகம் வேண்டும். ஐக்கிய உழைப்பில்லாவிடில் நாசமுண்டாகும்.

புற்றுக்களை அமைத்து அவற்றில் தானியங்களைச் சேர்க்க அரும்பாடுபடும் எறும்புகள் போலவும், கூடுகளை அமைத்து அவற்றில் தேனைச்சேமிக்க அரும்பாடுபடும் தேனீக்கள் போலவும் நாமும் ஊக்கத்தோடு உழைக்கவேண்டும். இன்பவாழ்க்கை வாழ்வது ஒரு கலை. உழைக்க உழைக்கத்தான் உயிரோடிருக்கும் வாழ்க்கை இனிக்கும்.

பள்ளிக்குச் சென்றவுடன் உழைப்பு என்றால் அவமானம், அலட்சியம் ஏற்படுகிறது. 40 கோடிமக்களும் உழைக்கவேண்டும். ஐயோ ! மாடுபோல் இழுக்கிறானே! என்று சிலர் பரிதாபப் படுகிறார்கள். மாட்டை இவர்கள் சிருஷ்டித்தார்களா ? மனிதனுக்கு

இருக்க என்று கடவுள் மாட்டைச் சிருஷ்டித்தாரா? மாடு உழைத்தால் என்ன? நான் இழுத்தால் என்ன? மகனே வா! இழுக்க; என்ற மனப்பான்மை ஏற்பட்டு விட்டால் 5, 10 வருடத் திட்டங்கள் ஒரு வருடத்தில் நிறைவேறிவிடும்.

நல்ல செல்வம்:—

உலகத்தைப் பார்க்கும்போது நமக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. அதேசமயம் சோர்வும் ஏற்படுகிறது. நாட்டில் நன்மை தீமை இரண்டும் கலந்தேதானிருக்கும்.

தெளிந்த பார்வை, சகிப்புத்தன்மை, கருணை, இன்ப துன்பங்களால் மாருத மனநிதானம் இவை பெருமை தருவன. பகைமை, பலாத்காரம், உள் சண்டை இவைகளினுல் முன்னேற்றம் அடைய முடியாது. சமாதானமுறையில் கூட்டுறவுகொண்டு உழைப்பதின் மூலமும் ஒருவரிடம் ஒருவர் சகிப்புத்தன்மையைக் காட்டுவதின்மூலமே முன்னேறலாம். "எத்தொழிலும் சிறந்தவைகளே, சமம்தான்" என்று எண்ணுகிற பிள்ளைகளே நம் செல்வமாகும்.

மனிதனை மதிப்பதெப்படி ?

ஒருவர் செய்யும் வேலையின் தன்மையைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. அவன் செய்யும் முறையினுல் மதிப்பிடவேண்டும். மிகச்சொற்ப நேரத்தில் உறுதியான நல்ல ஒரு ஜதை செருப்புச் செய்யும் தொழிலாளியின் திறமையைக் காணும்போது, ஒவ்வொரு நாளும் புத்தகத்திலிருப்பதை ஒப்பிக்கும் ஒரு பேராசிரியரைவிட அத் தொழிலாளி மேலானவன் என்றே கருதவேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம்:—

கல்வியையும் உடல் உழைப்பையும் இணைப்பதின் மூலமே இப்பிரச்னைக்குப் பரிகாரம் தேடமுடியும். ஒவ்வொருவருடமும் 9 லட்சம்பேர் படித்து வேலை தேடுகிருர்கள், பள்ளிகள் அதிகரிக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும். 14 வருடங்கள் படித்து நிர்க்கதியாகிருர்கள். உடலுழைப்புச்செய்யும் 60 பேருக்கு ஒருவர் வீதமே மூளைவேலை செய்யும் நபர்கள் தேவைப்படுகிருர்கள். படித்த இளைஞர்கள் அரசியல் சர்ச்சையை மறந்து நாட்டின் கல்வி சீர்திருத்தத்தில் ஆராய்ந்து மற்றவர்களுக்கு

விளக்கவேண்டும். விலைவாசிகள் உயர்ந்தது. வாங்கும் சக்தி குறைந்தது. பண்டங்களை வாங்கி உபயோகிப்போரிடையே புரட்சி ஏற்பட்டது. விவசாயம், குடிசைக்கைத்தொழில்கள் பெருகினால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் தீரும்.

உடலுழைப்பின் மேன்மை:—

இந்த மண்ணில் பிறந்தவர்கள் இந்த மண்ணில் வளர்ந்தவர்கள், மண்ணிலே செல்லவேண்டியவர்கள் நாம். மண்ணில் உழைக்க வேண்டும். குமாஸ்தா வேலையில் மோகம் வேண்டாம். பரீட்சைகளும் குறுக்கெழுத்துப்போட்டிகளும் சூதாட்டமாக அமைந்து விட்டது. உழைத்தவர்கள் மேன்மையடைந்திருக்கிறார்கள். நம் கருத்துக்களை உலகத்தினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் கடுமையாக உழைக்க வேண்டும். நம் நாட்டைப் பாதுகாக்க மட்டுமல்ல; மனிதவர்க்கத்திற்குச் சேவை செய்வதற்கேதான்.

உழைப்பால் உயர்ந்தவர்கள்.

நெ.	பெயர்.	பழைய நிலை.	புதிய நிலை.
1	லெனின்	ஏழைஉபாத்தியாயர் மகன்	ரஷியாவின் தந்தை
2	லிங்கன்	ஏழை விறகுவெட்டிமகன்	அமெரிக்கக் குடியரசுத் தலைவர்
3	ஸ்டாலின்	செருப்பு தைக்கும் தொழிலாளி	இன்றைய ரஷ்ய எஃகு மனிதன்
4	சமால்	துறைமுகத் தொழிலாளி மகன்	துருக்கியின் தந்தை
5	முசோலினி	செங்கல் தூக்கும் கூலியாள்	இதாலியின் தந்தை
6	எடிஸன்	பத்திரிகை விற்பவர்	விஞ்ஞானி
7	ஹிட்லர்	சாயம் பூசும் கூலியாள்	ஜெர்மன் சர்வாதிகாரி
8	ட்ரூமன்	போர்ட்டர்	அமெரிக்கத் தலைவர்
9	மேடம் க்யூரி	வேலைக்காரி	ரேடியம் கண்டுபிடித்தவர்
10	லூதர் பர்பாங்	எச்சிலை பொறுக்கியவர்	செடி,கொடிச் சித்தர்

11	முத்துசாமி ஐயர்	தெருவிளக்கு உதவியால் படித்தவர்	ஹைகோர்ட் ஜட்ஜ்
12	அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்	சமையற்காரனின் மகன்	சட்ட நிபுணர்
13	அபிதாலிம் ஜாப்பர்பாய்	0-2-0 சம்பளம் பெற்ற பஞ்சாலைத் தொழிலாளி	இந்திய சர்க்கார் தொழில் உதவிமந்திரி

✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧

17. சர்க்காரின் நோக்கம்.

14 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் ஆதாரக் கல்வியைக் கட்டாயமாக ராஜ்ய மெங்கும் போதிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களைச் சப்ளைசெய்யக் கூடியவகையில் போதிய பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் 10 வருடங்களில் ஏற்பட்டு விடும் என்று சென்னை சர்க்கார் எதிர்பார்க்கிறது. எல்லா ஆரம்பப் பாடசாலைகளையும் ஆதாரப் பாடசாலைகளாக மாற்றுவதுதான் சர்க்காரின் திட்டம். இது படிப்படியாகத்தான் கைகூடும். பணமுடைதான் வேகமான விஸ்தரிப்புக்கு இடையூறு. 1951-ல் 48 ஆதாரக்கல்விக் கூடங்களிருந்தன. அவற்றில் 4240 ஆசிரியர்கள் இருவருடப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கிராமங்களே நமது நரம்புகளென்றும், ஒரு நபருக்கும் மற்றொரு நபருக்குமுள்ள வித்தியாசத்தைக் கல்வி வயதிலேயே தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் பிறர் சொல்லாமல் தானே புரிந்துகொள்ளும் சக்திக்கும், பிறர்சொல்லி புரிந்து கொள்ளக்கூடிய சக்திக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் படிப்பிலேயே தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் தேசிய லட்சியங்களையும், சமூகக் குறிக்கோளையும் அடைய கல்வி உதவ வேண்டுமென்றும் உற்பத்தித் தொழிலைக் கருவியாகக்கொண்டு ஆதாரக்கல்வி புத்தகப் படிப்பையும் சமூக சந்தர்ப்ப சூழ்நிலையையும் ஜீவனத்திற்குகந்த பலவிதக் கைத்தொழில்களையும் ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பாரத நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக் கருதியிருக்கின்றனர்.

18. காந்திஜி கருத்து.

உடல், மனம், உணர்ச்சி மூன்றும் முதன்மையாகச் செயல் படுவதற்குத் துணைபுரிவதுதான் கல்வி எனக்கண்டார். சுதந்திரப் போராட்ட காலத்திலேயே தலைவர்களுடன் யோசித்து வந்தார்.

சின்னவயதில் தொழில் செய்வதில் பெருமை.

சேர்ந்து பழகுவதில் ஆசை.

கூட்டுமுயற்சியில் அக்கரை. இவை குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே ஏற்படவேண்டுமென்றெண்ணினர்.

கிராமங்களில் பொதுநல உணர்ச்சி மீண்டும் தழைத்தோங்க கிராம வாழ்க்கையை ஒட்டிய கல்வி தேவை என்றுதான் ஆதாரக் கல்வித் திட்டத்தைக் காந்திஜி உருவாக்கினர்.

வார்தாத் திட்டம்:—

பையன் வாழ்க்கை பூராவும் கருத்திற்கொண்டு 1938-ல் பீகார் மகாணம், சம்பரான் ஜில்லா, பிருந்தாவனத்தில் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் தலைமையில் காந்திஜி தயாரித்த ஆதாரக் கல்வித்திட்டமாகும்.

1. கர்ப்பிணிகளுக்கும் 2½ வயது வரை சிசுக்களுக்கும் பயன்படும் தாய், சிசுவிடுதிகள் ஏற்படுத்துதல்.
2. 2½ முதல் 7 வயதுள்ள குழந்தைகளுக்கு ஆதாரக் கல்விக்குப் பூர்வாங்கமான படிப்பைச் சொல்லிக் கொடுக்கும் பாடசாலைகள் ஏற்படுத்துதல்.
3. 15 முதல் 16 வயதுவரை ஆதாரக் கல்விக்குப் பிந்திய பயிற்சி பாடசாலை ஏற்படுத்துதல்.
4. ஆதாரக்கல்வி போதனு ஆசிரியர் பயிற்சிச்சாலைகள் ஏற்படுத்துதல்.
5. இந்தியாவெங்கும் ஆதாரக்கல்விப் பயிற்சிப் பாடசாலைகளை நடத்த உபாத்தியாயர்களைத் தோற்றுவிக்கும் காலேஜ் ஏற்படுத்துதல்.

6. முதியோர் கல்விபகுதிகள் ஆரம்பித்தல். மேலும் நாட்டில் சார்ஜண்ட ஸ்கீம், சாம்பியன்ஸ்கீம் என்ற திட்டங்களும் தயாரிக்கப்பட்டு நின்று விட்டன.

~~~~~~~~~~~~

19. செஞ்சட்டை இயக்கம்.

இச்சங்கம் 1864-ல் ஸ்விஸ்தேசத்தவரான ஹென்ரிடனுன்ட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

நோக்கம்:—

யுத்தகாலத்தில் அடிப்பட்டவர்களுக்கு, நோயாளிகளுக்கு உதவி புரிவதாகும்.

1918-ல் ஆர்மிஸ்டிஸ் உடன்படிக்கைப்படி 48 தேசங்கள் ஒன்றுபின. சமஷ்டிக்கூட்டமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

சிறுசெஞ்சிலுவைச் சங்கம், பள்ளிகளில் ஏற்படுத்தி விருத்தி செய்யவேண்டும்.

1. உடல் நலம் விருத்திசெய்தல்.
2. நோயாளி, துன்பமடைந்தவர், குழந்தைகளுக்கு உதவிசெய்தல்.
3. பலதேசச் சங்கங்கள் கடிதம் மூலம் பரிமாறிக் கொள்ளுதல். பள்ளிகளில் இச்சங்கம் அவசியம் ஏற்படுத்தவேண்டும்.

~~~~~~~~~~~~

20. மதுபானம்.

1. குடி, தன்னையே பைத்தியக்காரனுக்கிக் கொள்வது.
2. உலக ராணுவங்கள்கூட அவ்வளவு ஆட்களைக்கொல்ல முடியாது. ஆனல் குடி கொன்றுவிடும்.

3. குடி பழக்க முள்ளவர்கள் செய்யும் குற்றங்கள் அதிகம்.
4. கடலைவிட மது ஆட்களை மூழ்கடிக்கிறது.
5. மதுபானமும், வாலிபமும், நெருப்பிற்கு ஒப்பிட்டது மாதிரி.
6 மதுவுக்குப் பதிலாகத் தண்ணீர் இருக்கிறதே.
7. மதுப்புட்டியை வைத்திருப்பவன் யோசிக்க வேண்டியவை இரண்டு.
   1. மதுப்புட்டியை ஒழிப்பதா ? (அல்லது)
   2. தன்னையே ஒழித்துக்கொள்ளுவதா?

21. மாதர் நலம் அல்லது சமூகசேவை.

1. "தொட்டிலை ஆட்டும் கையே தொல்லுலகை ஆளுங்கை" என்ற நோக்கத்துடன் மாதர் நல இலாக்கா அமைக்கப்பட்டுள்ளது.
2. யுத்த காலத்தில் பெண்கள் சமூகசேவை இலாக்காவாக மாற்றப்பட்டது.

கீழ்வரும் வேலைகள் செய்கிறது.

1. கிராமங்களில் கல்வி கற்பித்தல்.
2. ஒவ்வொரு பெண்ணையும் அறிவாளியாக்கிக் குடும்ப நலனைக் கவனிக்கச் செய்தல்.
3. பெண்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கவும், கற்கவும், கூட்டம் போட்டுக்கொள்ளவும், எண், எழுத்து அறிவுபெறச் சாதனம் அமைத்தல்.
4. எளியோர்களுக்கும் கல்வி கற்பித்தல்.
5, குழந்தை வளர்ப்பு, 3-வயதுவரை குழந்தைகளை நன்னடத்தையில் பழக்குதல், கற்றுக்கொடுத்தல்.

22. ஹரிஜன முன்னேற்றம்.

விவசாய நாட்டில் அதிகம் உழைப்பவர்கள் ஹரிஜனங்கள் தான். இவர்கள் ஒதுக்கப்பட்டிருந்ததை காந்திஜி பார்த்து கடவுள் குழந்தைகள் ஒதுக்கப்பட்டிருப்பானேன்? என்று நினைத்து அவர்களுக்கு "ஹரிஜனங்கள்" என்று பெயரிட்டார். தீண்டாமைப் பேயை விரட்ட ஆசிரியர்கள் பங்கெடுத்துக்கொண்டால் நாடு இன்றே முன்னேறிவிடும். சீனாவிலுள்ள 60 கோடி மக்களில் வகுப்பு வேற்றுமை யில்லை. இந்தியாவில் 36 கோடி மக்களும் வகுப்பு வேற்றுமையை மறந்தால் உலகில் எந்த சக்தியும் இந்தியாவை அசைக்கமுடியாது.

23. தேசிய சுகாதாரம்.

பிரசவமும் அதன் பாதுகாப்பும்:—

தாயும் பிறந்த குழந்தையுமே தேசிய சுகாதாரத்தின் அஸ்திவாரக் கல். குழந்தை கவனிப்பு இவைகள் அவசியம்.

1. கர்ப்பம் ஏற்பட்ட நாள்முதல் தாய் நன்கு கவனிக்கப் படவேண்டும்.
2. ஆரோக்கியமான குழந்தை பிறக்கவேண்டும்.
3. பிரசவத்திற்குப் பின்னும் தாய் ஆரோக்கியமாயிருக்க வேண்டும்.

ஆஸ்பத்திரி (டாக்டர்களிடம் செல்வது)

1. கர்ப்பஸ்திரீயின் மனக்கவலை தீரும்.
2. அசௌகரியங்கள் மாறுகிறது.
3. கர்ப்பகாலக் கோளாறுகள் குறையும்.
4. செத்துப்பிறக்கும் குழந்தைகள் குறையும்.
5. சுகப்பிரசவமுண்டாகும்.
6. ஆப்ரேஷன் செய்தாவது தாயைக்காப்பாற்ற முடியும்

கர்ப்பஸ்திரீகள் கவனிக்கவேண்டியவை:—

1. அளவுக்குமேல் சாப்பிடக்கூடாது

2. அளவு குறைவாகவும் சாப்பிடக்கூடாது.
3. பழக்கமான ஆகாரத்தையே சாப்பிடவேண்டும்
4. எல்லாவிதச் சத்துக்களும் ஆகாரத்திலிருக்கவேண்டும்
5. சுண்ணும்புச் சத்துக்காக பால் அல்லது ஆஸ்பத்திரி மருந்து சாப்பிடவேண்டும்
6. ஆடை கனம் கூடாது. இடுப்பில் இறுகக் கட்டக் கூடாது
7. காய்கறி, பழங்கள் சாப்பிடவேண்டும்
8. ஒரு முறையாவது தினம் வெளிக்குப்போகப் பார்க்க வேண்டும்
9. 8-ம் மாதம் முதல் $\frac{3}{4}$ அவுன்ஸ் விளக்கெண்ணெய் சாப்பிட்டு வரவேண்டும்
10. சிரமமான வேலை செய்யக்கூடாது
11. "கர்ப்பம்" ஒரு வியாதி என்று படுத்துக் கொண்டே இருக்கக்கூடாது
12. நல்ல தூக்கம் தேவை
13. வெது வெதுப்பான தண்ணீரில் குளிக்கவேண்டும்
14. கர்ப்பம் ஆரம்பமான 3 மாதங்களிலும், கடைசி 3 மாதங்களிலும் பிரயாணம் செய்யக்கூடாது
15. முதல் 3 மாதங்களிலும், கடைசி ஒரு மாதமும் இல்லற இன்பம் கூடாது

24. உலக அறிவு.

சூரியனைக் சூழ்ந்துவரும் கிரகங்களாவன:- புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்த்யூன் என்பவை.

பூமி:— இதற்குச் சுய ஒளி இல்லை. சூரியனிடமிருந்தே பிறந்ததென்றும், முதலில் வாயு உருவமாக இருந்ததென்றும் கூறுவர். இது சூரியனை ஒருமுறை சுற்றிவர $365\frac{1}{4}$ நாட்கள் பிடிக்

கிறது. அன்றியும் இது மேற்கிலிருந்து கிழக்குமுகமாகத் தன்னைத் தானே 23 மணி, 56 நிமிடம், 4·09 செக்கண்டுகளில் சுழன்று வருகிறது. பூமியின் மொத்தப்பரப்பு 196,550,000 சதுர மைல்களாகும். அவற்றுள் 55,500,000சதுரமைல்கள் நிலமும், 14,10,50,000 சதுர மைல்கள் நீரும் ஆகும். நிரட்சரேகையைக் சுற்றி வந்தால் 24901·8 மைல்கள் வரலாம். பூமிக்கும் சூரியனுக்குமிடையிலுள்ள தூரம் 9 கோடியே 29 லட்சம் மைல்.

சந்திரன்:- என்ற உபகிரகம் சூரியனைச் சூழ்ந்து வருகிறது. அதன் குறுக்களவு 2162 மைல். சுற்றளவு 6800 மைல். பரப்பு 1,46,57.000 சதுரமைல். பூமியில் ஒருசேர் நிறையுள்ள வஸ்துவைச் சந்திரனிடம் சென்று நிறுத்தால் 6 சேராக இருக்கும். சந்திரன் பூமியைச் சுற்றிவர 27 நா. 7-ம. 43·2 நிமிஷங்கள். பூமிக்கும் சூரியனுக்குமிடையிலுள்ள மத்திய தூரம் 2,38,857 மைல்.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலே சந்திரன் வருவதால் சூரிய கிரகணமும், சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமி வருவதால் சந்திர கிரகணமும் உண்டாகின்றன. கிரகணங்கள் பூமியில் எல்லா இடங்களிலும் தோன்றக்கூடும் என்ற நியதியில்லை.

பூமியின் பிரிவுகள்.

1.	வளப்பமுள்ள பிரதேசங்கள்	...	33000000	ச. மைல்
2.	மேட்டிடங்கள் (புல்தரைகள்)	...	19000000	,,
3.	பாலைவனம்	...	5000000	,,
4.	ஏரிகள், ஆறுகள்	...	1000000	,,
5.	தீவுகள்	...	191000	,,

கண்டங்கள் பரப்பு.

1.	ஆசியா	...	17000000	ச. மைல்
2.	ஆப்ரிக்கா	...	11500000	,,
3.	வட அமெரிக்கா	...	8000000	,,
4.	தென் அமெரிக்க	...	6800000	,,
5.	துருவ பிரதேசங்கள்	...	6205000	,,
6.	ஆஸ்திரேலியா	...	4000000	,,
7.	ஐரோப்பா	...	3750000	,,

உலகத்திற் பெரியவை.

பெரிய நகரங்கள்:—

லண்டன்,	டோக்கியோ,	சிக்காக்கோ,
நியூயார்க்,	பர்லின்,	கல்கத்தா.

பெரிய மலைகள்:—

எவரெஸ்டு	இமாலயம்	...	29141	அடி உயரம்
கஞ்சின்சிங்கா	ஷை	...	28146	,,

பெரிய பாலைவனம்:—

சகாரா	...	2000000	ச. மைல்
பெரிய அமெரிக்கன்	...	1050000	,,
கோபி	...	300000	,,

பெரிய ஏரிகள்:—

காஸ்பியன் கடல்	...	170000	ச. மைல்
சுப்பீரியர் ஏரி (அமெரிக்கா)	...	81200	,,
விக்டோரியா நியான்ஸா	...	26200	,,

பெரிய தீவுகள்:—

ஆஸ்திரேலியா	...	2974581	ச. மைல்
கிரீன்லண்ட்	...	827300	,,

பெரிய ஆறுகள்:—

அமேஜான் (அமெரிக்கா)	...	4000	மைல்
நைல் (ஆப்பிக்கா)	...	3600	,,
யாங்ஸ்டி (சீனு)	...	3400	,,
கங்கை (இந்தியா)	...	1500	,,

II. இந்தியா.

இந்தியா பிரிட்டிஷ் தீவுகளைப்போல் **22** மடங்குள்ளது. ரஷ்யா நீங்கின ஐரோப்பா இந்தியாவுக்குச் சமம்.

இந்தியாவின் நில எல்லை	...	6000	மைல்
,, கடல் எல்லை	...	5000	,,
வடக்கிலிருந்து தெற்குக்கோடி நீளம்	...	2000	,,

கிழக்கிலிருந்து மேற்குக்கோடி நீளம்	...	2500	,,
பம்பாய், பிஷாவர் தூரம்	...	1500	,,
கல்கத்தா, பிஷாவர்	...	1500	,,
சென்னை, டில்லி	...	1500	,,
சென்னை, லாகூர்	...	1866	,,
சென்னை, பிஷாவர்	...	2150	,,
இராமேஸ்வரம், காசி	...	2150	,,

ஜனத்தொகை.

1. இந்தியாவின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் $\frac{1}{4}$ பங்கு
2. இந்தியாவின் ஜனதொகையில் 100-க்கு 90 கிராமங்களிலும் 10 நகரங்களிலும் வசிக்கிறார்கள்.
3. இந்தியாவின் ஜனநெருக்கம் 1 சதுர மைலுக்கு 640 பேர்.
4. இந்தியாவில் 1000 ஆண்களுக்குப் பெண்கள் 940 பேர்.
5. சென்னையில் 1000 ஆண்களுக்குப் பெண்கள் 1025 பேர்.
6. வருடா வருடம் பிறப்பு விகிதம் ... 34·3
7. ,, இறப்பு விகிதம் ... 24·9

இந்திய விவசாயம்.

இந்திய ஜனத்தொகையில் 100-க்கு 70 பேர் விவசாயிகள்.

சாகுபடிக்குட்பட்டவை	...	280566807	ஏக்கர்கள்
,, உட்படாதவை	...	309261997	,,
காடுகள்	...	89173071	,,

இந்தியா:—

1. கிணற்றுப்பாய்ச்சல் 6%
2. ஏரி, ஆற்றுப்பாய்ச்சல் 26%
3. மானவாரி பூமிகள் 68% மழையைஎதிர்பார்ப்பது

கிராமங்கள்:— **5,58,089.**

நகரங்கள் 3018.

ஜனத்தொகை 3569 லட்சம். (1951 கணக்குப்படி)

ஜில்லா தலைநகரம் :— **360.**

கிராமங்களில் வசிப்பவர்:— 2950 லட்சம் ($\frac{5}{6}$ பாகம்)

நகரங்களில் வசிப்பவர்:- 619 லட்சம்.

எருக்கள் இந்தியா.

கிடைக்குமிடம்.	வரவு.	உபயோகம்.
டவுன்களில் கிடைக்கக்கூடிய கழிவுகள் மலங்கள் ...	100 லட்சம் டன்	7 லட்சம் டன்
சாக்கடைத் தண்ணீர் ...	500 மில்லியன் காலன்கள்	50 மில்லியன் காலன்கள்
கிராமங்களில் மலங்கழிவு ...	150 லட்சம் டன்கள்	சிறிது கூட உபயோகிப்பதில்லை
மனித மூத்திரம் ...	500 லட்சம் டன்	உபயோகமில்லை
கால் நடை	500 லட்சம்	50 லட்சம் டன்
வறட்டியாகத் தட்டும் சாணி.	1000 லட்சம்	உபயோகிப்பதே யில்லை

இந்திய ரெயில்வே.

இந்தியாவில் தேசீய உடைமையாக்கப்பட்ட மிகப்பெரிய தொழில் ரயில்வே ஒன்றே.

1. இந்தியாவில் ஓடும் இருப்புப்பாதையின் நீளம் 34123 மைல்கள்.
2. உலகத்திலேயே இதைவிடப் பெரியவை உள்ள இடங்கள்:- 1) அமெரிக்கா 2) சோவியத் யூனின். 3) கனடா
3. இந்தியாவில் உள்நாட்டுச் சறக்குகள் ரயிலில் போகும் அளவு $\frac{1}{10}$ பாகம்.

4. இந்தியாவில் ரயில்பிரயாணம் செய்பவர்கள் $\frac{7}{10}$ பாகம்
5. இந்திய மக்களுள் ரயில் வேலை பார்க்கிறவர்கள் $\frac{1}{356}$ பாகம்.
6. ரயிலினால் பிழைக்கிறவர்கள் $\frac{1}{85}$ பாகம்.
7. இந்தியாவின் பொருளாதார நிலையில் முக்கியமாக இருக்கும் இத்தகைய ரயில்வேயின் அபிவிருத்திக்காக 1949-ல் உலக பாங்கி 3 கோடி 40 லட்சம் டாலர்கள் கடன் கொடுத்தது.

25. பொது விஷயங்கள்.

கல்விப் பொருட்காட்சி:—

அடுத்துவரும் சந்ததிகளின் கல்வித்தேவைகளை வெற்றிகரமாகச் சமாளிக்கும் பொருட்டு ஆசிரியர்கள் குறிப்புகள் பறிமாறிக் கொள்ள பொருட்காட்சிகள் சந்தர்ப்பமளிக்கும். சிறுவர் சிறுமிகளின் மனதிலிருப்பதைச் செய்து காண்பிக்கப் பொருட்காட்சிகள் அவசியம். சிறுவர் சிறுமிகள் வாழ்க்கையில் விரும்பும் லட்சியத்தைப் பின்பற்றும்படி விட்டுவிடவேண்டும். மியூஸியங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டும். பொருள்களை அழகுக்காகச் சேர்த்துவைக்காமல் கல்விக்காகவே சேர்த்து வைக்கவேண்டும். ஒவ்வொரு பொருளையும் பிள்ளைகள் பார்த்து இயற்கையின் விசேஷத்தைப் பிள்ளைகள் நம்பச் செய்யவேண்டும்.

பையனின் திருஷ்டி எப்பொழுதும் அவனைச் சூழ்ந்துள்ளவைகள்மேல் சென்றுகொண்டேயிருக்கும். ஆகையால் பள்ளியின் சுவர், படங்கள் நன்கு இருக்கவேண்டும். உபாத்தியாயரும் பிள்ளைகளும் சுத்தமாயிருத்தலே ஒரு பொருட்காட்சியாகும். சுவர்களில் நல்ல பழமொழிகள் அழகாக எழுதப்பட்டிருக்க வேண்டும். உண்மைக் கல்வி உல்லாசப் பிரயாணத்தாலும் வெளிக்காட்சிகளை நேரில் பார்ப்பதாலும் பிள்ளைகளுக்கு உண்டாகிறது. ஒரு கெட்ட

பாடசாலை இருப்பதைவிட இல்லாமலிருப்பதே மேல். (A bad school is better than no school) பள்ளி மியூசியத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் சேகரித்து வைக்கலாம்.

1. பிராணி வகை
2. வித்து வகை
3. கல் வகை
4. தானியவகை
5. பறவைகள்
6. மரங்கள்
7. கைவேலை சாமான்கள்
8. மீன்வகை
9. ஊர்வன
10. ஆயுதங்கள்
11. பொம்மை வகை
12. களிமண்வேலை
13. இந்திய ராட்டைகள்
14. சிற்பங்கள்
15. சர்வோதயப் படங்கள்
16. ஆதாரக் கல்விச் சார்ட்

குழந்தையின் **கலை** யென்பது கற்பனை ஓவியங்களாகும். குழந்தை எதையாவது செய்ய ஆரம்பிக்கும்போது அந்த நிமிஷமே அதற்கு உபயோகமான கைத்தொழிலைக் கற்பிப்பதே கல்வியின் ஆரம்பமாகும் என்று காந்திஜி கூறியுள்ளார்.

சங்கீதம்:— பால் மணம் மாருப் பச்சிளங் குழந்தைகள் தொட்டிலில் அழும்பொழுது பாட்டிமார்கள் இராக தாள பாவ மிராமலே ஏதாவது ஒரு பாட்டை நீட்டிப் பாடினால் அக்குழந்தைகள் அழுவதை நிறுத்தி ஆனந்தமடைவதையும், மறுபடிபாட்டை நிறுத்தி விட்டால் அழத்தொடங்குவதையும் பார்த்திராதவரிலர். இதனால் குழந்தைகளுக்கு பூமியில் பிறந்த நாட்கள்முதல் பாட்டுக்களைக் கேட்கவேண்டுமென்கிற ஆசை உணர்ச்சி அமைந்திருப்பது தெளிவாய் விளங்குகிறது.

இன்னும் சிறுகுழந்தைகள் தனித்திருக்குங்கால் கவனித்துப் பார்த்தால் ஏதாவது ஒரு பாட்டைத் தாங்களே பாடிக்கொண்டிருப்

பதும் விளங்கும். இதனுல் அவர்களுக்குத்தாம் பாடவேண்டும் என்கிற ஆசையும் அமைந்திருப்பது விளக்கமாகின்றது. இவ்வித மான அவர்களின் ஆசைகளைத்திருப்திபண்ணுமாறு பள்ளிகூடங் களில் பொதுப்பாட சம்பந்தமானப் பாட்டுகளை அமைத்துப் பாடச் செய்து குழந்தைகளைச் சந்தோஷப்படுத்தவும் சாதகமாகின்றது.

இன்னும் நோக்கங்கள் இரண்டு: —

1. உபாத்தியாயர் பாடும் எந்த விதமான இசையையும் பிள்ளைகள் காதால்கேட்டு அதைத் திரும்பிப்பாடத் தக்கக்கேள்விப்பயிற்சியை அவர்களுக்கு அளிக்கவும்.
2. "சீர் பிரமாணம்" என்னும் இந்திரிய ஞானத்தை அவர்களிடத்தில் செய்யவுமே.

சங்கீதமானது துன்பமடைந்த மனத்தைச் சீர்ப்படுத்திப் பொறுமை யாக்குகின்றது. ஜனங்களுக்குள் சந்தோஷத்தையும் சமூகத்தில் சௌஜன்யத்தையும் வளர்க்கிறது. மேலும் பைத்திய மான மனத்தையும் மனவெழுச்சியடையச் செய்து சாந்த மடையச் செய்யும். இன்னிசைக்கு மனிதர் மட்டுமன்றி எல்லா விலங்குகளும், பறவைகளும், ஊர்வனவும் தம்மை மறந்து வசப்படும். மிகச் சிறந்த இன்னிசைக்கு மழைபொழியும். மரங்களும் தளிர்க்கும், கல்லும் வெண்ணெயாய் உருகும், உயிரில்லாத பொருள்கள்யாவும் தன் வயமாக்கும். சிலப்பதிகாரம் என்ற நூலில் "ஆடிக்கறக்கும் மாடு, பாடிக் கறக்கும் பசு" என்று கூறப்பட்டுள்ளது.

வேதங்கள் இசை வடிவாக இருப்பதும், செய்யுள் வடிவமாக யிருப்பதும், சங்கீதத்தின் மகிமையைப் பொருத்தேதான். "இசை யானுன் கண்டாய்" என்று சம்பந்தர் பாடியுள்ளார். எலிகளைத் துரத்துவதற்கு ஒரு வித்துவான் வீணையை உபயோகித்த கதை யையும் அறிந்திருக்கிறேம். "இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று" என்றும் கூறியுள்ளனர். கல் நெஞ்சம் படைத்த கள்வர் களையும் தன் வயப்படுத்தும். இசைக்கு உருவம், நிறம் உண்டு என்று கண்டுள்ளனர் மேல் நாட்டினர். காதை நன்ருகத் தீட்டி இசையைப் பருகவே "காது குத்தல்" என்ற பழக்கம் வைத் துள்ளனர். சங்கீதம் பரம்பரைச் செல்வமாகும் எல்லோருக்கும் சமமான கலை சங்கீதமே. தொண்டையும் காதும், மிக அதிசயமான யந்திரம். தொண்டை யென்னும் அபூர்வ யந்திரத்தைப் பாது

காக்கவேண்டும். பெண்களுக்கு ஏற்ற சொத்தாகும். பெண்கள் சங்கீதம் கற்றுக் குடும்பத்தை நன்றாய் நடத்தவேண்டும். சங்கீதத்தைவிடக் கலாச்சார ஒற்றுமையைப் பேணிக் காக்க சிறந்த மார்க்கம் வேறில்லை. இந்தியர் பண்பாட்டிற்கு முதலிடம் பெற்று விளங்குவது சங்கீதக்கலை. எழுத்தறிவுபோல் சங்கீதத்தையும் ஒவ்வொரு பள்ளியிலும் முக்கிய உறுப்பாக வளர்க்கவேண்டும். மனித உள்ளத்தை வசப்படுத்தி எளிதில் தியானம் செய்ய உதவுவது.

பள்ளி நாடகங்கள்:—

பள்ளி மாணவர்களுக்கு நாடகக்கலையை வளர்க்கவேண்டும். பக்தி, ஒழுக்கம், நற்போதனைகளைவளர்க்கும் நாடகங்களைத்தான் பொறுக்கியெடுக்கவேண்டும். ஒரு திரையில் மாணவன் திரையை இழுக்கும் வேலையைச் செய்வான். இன்னொரு நாடகத்தில் கதாநாயகனை நடிப்பான். இப்படிப் பல துறைகளில் திறமையடைகிறார்கள்.

மாணவர்களுக்கு யோசித்துச் செய்யும் சக்தி, கற்பனைசக்தி வளருகிறது. ஒரு வீரனை நடித்தால் வீரம் பொருந்திய குணமே அப்பையனுக்கு ஏற்படுகிறது. பள்ளியில் நடைபெறும் நாடகங்கள் கல்வி அபிவிருத்தியை ஒட்டியதாகயிருக்கவேண்டும். ஹாஸ்யங்கள் அதிகமிருக்கக் கூடாது.

பெற்றோரை மகிழ்விக்கவும், நல்லறிவு ஊட்டவும் வல்லது நாடகங்கள். கருத்துக்களை எடுத்துக்காட்டக் கண்ணாடிபோல் உதவுகிறது. (Drama is the mirror of the world)

நூல் நிலையம்:—

முதியோர் மேன்மேலும் அறிவை விருத்தி செய்துகொள்ள வாய்ப்பளிக்காமல் ஒருவனுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுப்பதால் பயனில்லை. மனப்பங்கு விரிந்து, புத்திதெளிந்து சகலவிதத்திலும் மேம்பட நூல் நிலையம் வசதி செய்யும். உண்மை நூல்களின் ஆராய்ச்சியால் அறிவு விளக்கம் பண்பட்டு, அவ்வறிவால் அன்பும் அருளும் வாழ்வில் பெறவேண்டிய செல்வங்களாகும்.

அறிவு சக்தி வாய்ந்தது. ஞானம் அதைவிடச் சக்தி வாய்ந்தது. ஞானம் விருத்திபெற புத்தகங்கள் உபயோகப்படும்.

ஞானமுண்டானால் பொதுத் தொண்டுகளில் ஈடுபடவும் ஏதுவாகும். இளந்தம்பதிகளைக் கெடுக்கும் துப்பறியும் நாவல்கள் கூடாது.

பாடசாலைக்குப் புறம்பான வேலைத்திட்டங்கள்:—

(Extra curricular activities)

உடற் பண்பு, உள்ளப்பண்பு, ஆன்மப்பண்பு ஆகிய மூன்றையும் தக்கபடி பயிற்றி அவற்றின் பூரணப் பொலிவும் பிறக்குமாறு செய்வதே கல்வி. மூளை நிரம்பத் திணிப்பது அல்ல. மூளையை அப்பியாசப் படுத்துவதே கல்வி.

பணமிருந்தால் மட்டும் வாழ்க்கையில்லை. கலையும் நாகரீகமும் இருப்பது மாத்திரம் வாழ்க்கை என்று சொல்லவும் கூசுகிறது. மக்களுடைய வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் அன்பும், உழைப்பும் பின்னி வரவேண்டும். எந்த மனிதன் தன் லாபத்தைக் கவனிக்கிறானோ அவன் உலகத்தைத் துண்டாடுகிறான்.

பாடசாலைக்குப் புறம்பான வேலைகள்:—

விளையாட்டாக, பொழுது போக்காக, விநோத முறையில் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்தலாகும். (Education through recreation)

1. தொகுதியாக:— (Collective basis)
   சங்கீதம் (Music)
   வாய்ச்சாலக்கு (Elouction)
   சித்திரவித்தை (Painting)
   உருவம் செய்தல் (Plastic arts)
   மனதிற்கு இனிய தொழில்கள் (Hobbies)
2. Guidence and organisation of individual talents.

சாமர்த்தியங்கள்:—

1. மாணவர் சங்கம்.
2. மாணவர் மன்றம்.
3. பொருட்காட்சி
4. டிராமா.
5. சம்பாஷணை.

6. விளையாட்டு

முதலியவைகள் நடத்தலாம்.

3. **School Theatries:—** நாடகங்கள்.

4. Puppet shows = பாவைக்கூத்து.
 Flok songs = தெருக்கூத்து.
 Folk dances = நடனம்.

5. உல்லாசப் பிரயாணம் = Excursion
 முகாம் = Camps.

6. மாணவர் கூட்டுறவு சங்கம்.
 (Students Co-operative Stores)

7. ஸ்கௌட் (The boy scout and girl guide movements)

8. ஜூனியர் ரெட்கிராஸ் (Junior red cross)
 செஞ்சிலுவைச் சங்கம்.

9. தேனீ வளர்த்தல்.

10. சாந்திசேனு or சமாதானப்படை.

குழைந்தைகள் தினம்:—

குழந்தைகள் தினம் கொண்டாடவேண்டும். குழந்தைகளுக்கேற்பட்டுள்ள கடமையின் தன்மையை உணர்த்துவதற்காக இத்தினம் அவசியமாகிறது.

இயற்கைப்பாடமும் தோட்டவேலையும்:—

இப்பாடம் பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது. தோட்டத்தில் பிள்ளைகள் சேர்ந்து வேலை செய்வதால் பொதுச் சொத்தாக எண்ணுகிறார்கள். இதிலிருந்து சகோதரத்துவம், கூட்டுறவு, ஒருவரையொருவர் அறிந்துகொள்ளுதல், ஜாக்கிரதை, பொறுமை, விடாமுயற்சி போன்றவைகளும் ஏற்படுகின்றன.

இயற்கைப் பாடத்தை அவையிருக்கும் இடங்களிலேயே போய்ப் பார்த்து அறியவேண்டும்.

Nature study is the direct study of nature. The pupil has to acquire his knowledge not through medium

of books, but through observation of natural phenomena, by means of out door occupations and school executions. The pupil should be made therefore to draw his own conclusion from his own observations of the phenomena of nature. But the teacher has to guide the pupil along the right path and has to see that he draws right and sensible conclusions.

சினிமாவும் ஓய்வுநேரப்படிப்பும்:—

கண்மூடித்தனமாக எந்த சினிமாவையும் பிள்ளைகள் பார்க்கக் கூடாது. ஓய்வு நேரங்களில் பெரியவர்கள் படிக்கும் சஞ்சிகைகளையும் படிக்க விடக்கூடாது. சிறுவர் நடத்தை, அறிவை வளர்க்கக் கூடிய சினிமா, இலக்கியங்கள், சஞ்சிகைகள் படிக்கக் கூட்டாக முயற்சி செய்யவேண்டும். சினிமா, ஓய்வு நேரப்படிப்பு முதலியவற்றில் கண்டிப்புக் காட்டா விட்டால் குழந்தை ஒருக்காலும் உருப்படாது. இந்தியாவில் 17-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் ஒருகோடி இருக்கின்றனர். கெடாமல் பார்க்கவேண்டும்.

உல்லாசப் பிரயாணம்:—

பிள்ளைகளுக்கு, விஷய ஞானம், ஆராய்ச்சி உற்று நோக்கும் சக்தி, பொறுமை, அனுபவம், ஒற்றுமை, கூட்டுறவு, விடாமுயற்சி, நம்பிக்கை, மன அமைதி, இயற்கையின் ரம்மியம் அனுபவிப்பு, குண அபிவிருத்தி, சந்தோஷம், முதலியவை உண்டாகின்ற பலசூழ்நிலைகளுடன் கலந்து பழகும் குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

ரேடியோ – சினிமா – கல்வித்திட்டத்தில் இடம்:—

மனிதன் ஒரு ஆயுதம் உபயோகிக்கும் பிராணி (A man is a tool using animal) சங்கீதத்தை மட்டும் அன்னியர்கள் கொண்டு போக முடியவில்லை. நாட்டை ஒன்று சேர்க்கும் வல்லமையுடையது. அரசியல், சமூகம் பொருளாதாரம் இவைகளில் நாட்டில் கட்சிகளிருக்கலாம். சங்கீதத்தில் மட்டும் கட்சிகளில்லை சகலகலைகளையும் சங்கீதம் வளர்க்கும். ராகம், தாளம், ரசம் பாவனை, ரக்தி, பக்திஞானம் இவைகளை யுடையது. சங்கீதம் மாதா, தாளம் பிதா. சங்கீதத்திற்குப் பேர் போனது தமிழ் நாடு.

மின்சாரத்தின் உதவியால் பாட்டின் தட்டுகளை எடுத்தார்கள். பின்பு தூரத்தில் பாடுவதை அலைகளால் இழுக்கக்கண்டு பிடித்தார்கள். சினிமா முதலில் அசையும் படமாக இருந்தது. (Moving Picture) பின்பு பாட்டு பேச்சு இணைக்கப்பட்டது.

ஏன் சினிமாப் பார்க்கிறோம்?

1. தன்னை மறக்க விரும்புதல்.
2. சோம்பல் நீக்குதல்.
3. தன்னிடத்திலும் தன்னைச்சூழ்ந்துள்ள வற்றிலும் ஏதோ குறைவாயிருக்கிறதென்ற ஏக்கம்.
4. தனிமையில் ஏற்படும் வெறுப்பு.
5. பொறுப்பற்ற விளையாட்டுப்புத்தி இவைகளை நீக்கப் பார்க்கிறோம்.

கல்வித்துறை:—

1. சென்ற யுத்தத்தில் சைனியங்கள் பயிற்சி.
2. கல்வித்துறைப் பயிற்சிப் படங்கள்
3. முதியோர் கல்வி அபிவிருத்தி.
4. கிராமப்புறங்களிலிருந்து நகரப் புறங்களுக்கு ஜனங்கள் குடியேறுவதைத் தடுத்தல்.
5. கிராம ஜனங்களும் பார்க்க ஏற்பாடு செய்தல்.
6. கிராம யந்திரங்களைப் பற்றிய சினிமா.
7. ஜனங்களின் அத்தியாவசியத் தேவைகள்.
8. இந்நாட்டின் பாமர மக்களின் மலிவான பொழுது போக்குச்சாதனம் சினிமாதான்.

ரேடியோ:—

கிராம நிகழ்ச்சி, கிராமப்பள்ளி, மத்தியதரப்பள்ளி, கல்வி சம்பந்தமானவை கேட்க வசதியுண்டு.

நாடகம்:—

தார்மீகக் கொள்கை மறுமலர்ச்சியடைய நாடகங்கள் தேவையாகும். பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்று நடிக்கச் செய்ய வேண்டும்.

யார் துன்பத்தை அனுபவிப்பவர்கள் ?

1. வெட்கப்படுபவன்.
2. பொறுமை உள்ளவன்.
3. மகிழ்ச்சி கொள்ளாதவன்.
4 பகைமை உள்ளவன்.
5. தீராத ஐயம் கொள்பவன்.
6. பிறர் பொருளால் பிழைப்பவன்.

ஐவகை மனிதர்:—

அதாவது நேசம் வைக்கத்தகாதவர்கள்:—

1. கானல் நீரைப் போன்று உங்களை வஞ்சிப்பவன்.
2. உங்களுக்கு ஒரு பயனும் தரமுடியாத முட்டாள். (இவன் நன்மையைச் செய்ய முயன்றுல்கூட இதன் மடமை அதைக்கெடுதியாக்கிவிடும்)
3. உதவி மிகத்தேவைப்படும் பொழுது தன் உறவை அறுத்துக் கொள்ளும் உலோபி.
4. ஆபத்து நேரத்திலே உங்களைவிட்டு மறைந்து விடும் கோழை.
5. ஒரு சிறிய தொகை அல்லது பொருளுக்காக உங்களை விற்கத் தயங்காத பாபி.

உலகில் மூன்றுவித மக்கள்-—

1. மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து பல படிப்பினை களைக் கற்றுக்கொண்டவர்கள் முதல்தரமான விவேகிகள்.
2. தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் நன்மை யடைந்தவர்கள் இரண்டாந்தரம்.
3. தங்களுடைய சொந்த அனுபவம் மற்றவர்களுடைய அனுபவம் ஆகிய இரண்டிலிருந்தும் பயனடையாத வர்கள் சரியான முட்டாள்கள்.

தேசத்தின் ஸ்திரத்தன்மைக்கு விரோதிகள்:—

வறுமையும் பட்டினியும் ஆசிரியருக்குக் கூடாது.

3795

இந்தியா பெருமை:—

1. மகாத்மா காந்தி போதித்த சமாதானக் கொள்கைப் படி உலகமக்கள் பாராட்டக்கூடிய முக்கியத்துவம் அடைந்து விட்டது.
2. மனித பலத்திலும் சகாயம் செய்வதிலும் நம் நாடு மிக்க பலம் வாய்ந்ததாகக் திகழ்கிறது.
3. உலக விவகாரங்களில் ஆசியா செய்திருக்கும் சேவை பெரிது. பூகோள ரீதியில் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்காவைப் பிரிக்கமுடியாது.

தொழில்:—

வெறும்படிப்பில் பிரயோசனமில்லை. படியாத விவசாயிடம் சொன்னால் நம்புவதில்லை. "சரிதான் போங்க" என்று சொல்லி விடுகிறான், அவன் அறிவில்லாதவன் அல்ல. படித்தவுடன் ஏர் பிடிக்கமாட்டேனென்கிறான். தொழில் செய்வதில் ஆசைபோய் ஏதாவது வேலை தேடி சம்பாதிக்க ஆரம்பிக்கிறான்.

வீடு:—5, 6, குழந்தைகளைச் சமாளிப்பதே கஷ்டம், 40. 50, பிள்ளைகளை உபாத்தியாயர் மடக்கி வைக்கிறார். இப்படிப்பில் ஒரு ரூபாய்க்குச் சில்லரை மாற்றி வரக் கஷ்டப்படுகிறான். பாதிநேரம் தொழிலில் ஈடுபட நேர்ந்தால் இக்குறைகள் நீங்கிவிடும்.

கிறிஸ்தவ மிஷனரிகள்:—

கல்வித்துறையில் கிறிஸ்தவ மிஷனரிகள் நல்ல சேவை செய்துள்ளன. அவைகள் செய்துள்ள சேவையை மற்ற ஸ்தாபனங்கள் பின்பற்ற வேண்டும்.

காடுகளிலும், பாலைவனங்களிலும், ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி இருளை வெளிச்சமாக்கி, அறிவில்லாத இடத்தில் அறிவை உண்டாக்கி ஆழ்ந்து வேலை செய்கிறார்கள்.

சினிமா:—

சினிமா, டிராமா, ஆபாசமுள்ளவை. இழிவான புத்தகங்கள் மாணவர்களுக்குக் கூடாது. படிப்பைத்தவிர வேறு அரசியல் விவகாரங்களில் மாணவன் பொழுது போக்கக்கூடாது.

முற்காலமும், தற்காலமும்:—

1. குருவுக்கும் சிஷ்யனுக்கும் வித்தியாச மில்லை. குரு குல வாசமே சாட்சியாகும்.
2. தற்காலம் வித்தியாசம் காணப்படுகிறது.
3. தற்காலம் கல்வியை விலைக்கு வாங்குகிறார்கள்.
4. தகப்பனுக்கும் மகனுக்குமுள்ள அன்பு பள்ளிகளில் காணப்படவில்லை.
5. "கௌரவமான தொழில்" என்று அக்காலத்தில் நினைத்தார்கள்.
6. "தேவாராதனை" செய்பவர்கள்மட்டும் இத்தொழிலைச் செய்தார்கள்.
7. ஆலயங்களே பள்ளிகளாயிருந்தன.
8. குருவிடம் ஜனங்களுக்கு அக்காலம் நம்பிக்கை யுண்டு.
9. பிள்ளைகளை அநேக வருடங்கள்வரை குருவினிடம் விட்டு வைப்பார்கள் அக்காலத்தில்.
10. குருவும், பிள்ளையும் ஒரே குடும்பமாக வசித்தனர் அக்காலத்தில்.
11. போதனையில் அன்பு நிறைந்திருந்தது அக்காலத்தில்.
12. மறுபடியும் இம்முறை வளர்ந்தால் நாடு முன்னேற்ற மடையும்.

பிரார்த்தனை:—

1. பிரார்த்தனை ஒன்றே ஆத்ம சுத்தியைத் தரவல்லது.
2. பிரார்த்தனை மனிதன் வாழ்க்கையை மாற்றிவிடும்.
3. பக்தி, பலம் இருக்கும்போது உலகத்தில் அசாத்திய மான தொன்றுமில்லை.
4. பிரார்த்தனை சக்தியால் எதையும் அடையலாம்.

குடியரசு தினத்தன்று மாணவ மாணவிகள் பிரதிக்ஞை எடுத்தல்:—

1. நாம் பெரியவர்களாக வளருகையில் சீக்கியர்களா கவோ, கிறிஸ்துவர்களாகவோ இருந்தாலும்சரி

இந்தியர்கள் என்ற முறையில் இந்நாட்டிற்குப் பணி யாற்றுவோம்.

2. நாட்டினிடம் விசுவாசம், அன்பு, அபிமானம் மிகுந் திருப்பதுடன் ஒழுக்கமிகுந்த பிரஜைகளாகவும் இப்பொழுது முதல் இருக்க நாம் முயற்சிப்போம்.

3. சுயநலமின்றி கோஷ்டி நல மனப்பான்மை, கடமை யுணர்ச்சியுடன் இனம், ஜாதி, மதம் வித்தியாசமின்றி பரஸ்பர உதவியளிக்கவும், நம்பிக்கை நாணயம் மிகுந்தவர்களாக ஆகவும் முயற்சிப்போம்.

பழமையும் புதுமையும்:—

பழமையின்றேல் புதுமையில்லை. இதை யாவரும் ஒப்புக் கொள்வர். காலத்திற்குத் தக்க சீர்திருத்தம் அவசியம். ஆனால் அவை இயற்கைக்கும் சூழ்நிலைக்கும் ஒத்ததாயிருக்கவேண்டும்.

தருமம்:—

உலக தருமங்களில் வித்தியா தருமம் மேலானது. தனிப் பட்டவர்கள், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் பள்ளிகளை நடத்த முன் வரவேண்டும்.

அனாதைப் பிள்ளைகள்:—

அனாதைப் பிள்ளைகளுக்காக தனிப்பட்ட ஆஸ்ரமப் பள்ளி கள் ஏற்பட வேண்டும். அவர்களைத் தக்கபடி சவரட்சணை செய்யா விடில் சமூகத்திற்கே தீங்கு நேரிடும். குற்றம் செய்யும்படி சில தீய சக்திகள் தூண்டுகின்றன. தும்பை விட்டு வாலைப் பிடிக்காமல் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும்.

வந்தேமாதரம்:— இதன் பொருள் (தாயே வணங்குகிறோம்)

1. இந்தியா நமது அன்னை
2. எல்லோரும் சகோதரர்கள்

வர்க்க பேதம்:—

அறியாமை, பிணி, ஏழ்மை முதலியவற்றை விரட்டி நல் வாழ்வு தேசத்தை உருவாக்க வேண்டுமானால் அதற்கு வர்க்க துவேஷம் கூடாது நம் லட்சியத்தையடைய பணக்காரர், ஏழை

கள் யாவர்க்குமுண்டு. நாம் நியாயமான முறையில் நடந்தால் நம் லட்சியம் நிறைவேறும்.

தெய்வ வழிபாடு:—

மனித வர்க்க சேவைதான் தெய்வ வழிபாடு. மனிதவர்க்கம் தான் கடவுள். அதன் சேவையே வழிபாடு. உலக மதங்கள் கூறுவது:—

1. இறைவனுடன் ஒன்றுதல்
2. இந்த ஐக்கிய பாவத்தை மனிதனுக்கும் இதர ஜீவராசிகளுக்கும் அன்பு செலுத்துவதின் மூலம் வெளிப்படுத்துதல்.

நாம் அனைவரும் ஆண்டவனின் குழந்தைகள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பணம் படைத்தவர்கள் ஜீவ காருண்யம், அன்பு, அருள் ஆகியவைகளுடன் கஷ்டப்படும் சகோதர சகோதரிகளுக்குத் தாங்கள் சம்பாதித்த பணத்தைப் பயன்படுத்தும் படியாகச் செய்ய வேண்டும்.

கோயில் ஒரு கலைக்கூடம். ஓவியம், சித்திரம், இசை, ஆகம சாஸ்திரம், நாடகம் முதலியவைகளுக்கிருப்பிடம். கோயில் சுத்த மாக இருக்கவேண்டும். ஒலியில் ஆரம்பித்து மௌனத்தில் முடிவது கோயில் வழிபாடு. எவ்விதத்தில் பிரார்த்தனை செய்தாலும், உருவங் களை வைத்துப் பிரார்த்தனை செய்தாலும், உருவமேயல்லாது பூஜை செய்தாலும் எல்லோரும் ஒரே ஆண்டவனைத்தான் பூஜை செய் கிறோம். ஆகையால் பிரார்த்தனை முறை வேறுபட்டாலும் ஆண்டவன் ஒருவனே. வாழ்க்கைக்கு வழிகாட்டி கடவுள் வழிபாடு தான். அறிவுடன் பக்தியும் வளரவேண்டும்.

நபியின் பொன்மொழிகள்:—

1. ஜாதி மத பேதம் கூடாது.
2. எல்லாமதமும் ஒரே பரம்பொருளை அடையும் மார்க் கத்தைத்தான் போதிக்கிறது.
3. போகும் வழி பரிசுத்தமா யிருக்கவேண்டும்.
4. பெண்களுக்கு ஆண்களைப்போல் சம உரிமை அளிக்கப்பட வேண்டும்

5. மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமைகளை உணரவேண்டும்
6. ஒரே ஆண்டவன்தான் உண்டு
7. மக்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லை
8. எந்த சாஸ்திரம் எப்படியிருந்தாலும் பகுத்தறிவில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்
9. ஒரு மனிதன் பேசினால் சுகமில்லை. நடத்தையில் காட்டவேண்டும்
10. ஒருவனுக்கு நல்லருள் செய்ய ஆண்டவன் நாட்டம் கொண்டால் அவனுக்கு நல்ல ஒரு நண்பனைக் கொடுக்கின்றான்.

இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டுள்ள ராஜ்யங்கள்

A-பாகம்

ராஜ்யங்களின் பெயர்கள்

1. அஸ்ஸாம்
2. பீகார்
3. பம்பாய்
4. மத்திய பிரதேசம்
5. சென்னை
6. ஒரிஸ்ஸா
7. பஞ்சாப்
8. உத்தரப்பிரதேசம்
9. மேற்கு வங்காளம்

(B) பாகம்

ராஜ்யங்களின் பெயர்கள்

1. ஹைதராபாத்
2. ஜம்முவும், காஷ்மீரும்
3. மத்திய பாரத்
4. மைசூர்
5. பாட்டியாலாவும் கிழக்கு பஞ்சாப் ராஜ்யங்களின் யூனியனும்
6. ராஜஸ்தான்
7. சௌராஷ்டிரம்
8. திருவாங்கூர் கொச்சி
9. விந்திய பிரதேசம்

(C) பாகம்

ராஜ்யங்களின் பெயர்

1. ஆஜ்மீர்
2. போபால்
6. டெல்லி
7. ஹிமாசலப் பிரதேசம்

3. பிலாஸ்பூர்
4. கூச் பீகார்
5. குடகு
8. கட்ச்
9. மணிப்பூர்
10. திரிபுரா

(D) பாகம்

1. அந்தமான்
2. நிக்கோபார் தீவுகள்

சென்னை ராஜ்யத்தில் பிற்பட்டிராத வகுப்பார்களின் ஜாபிதா

1 ஆதி வெலமா
2 பலிஜா
3 பிராமணர்
4 பந்த்
5 கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஹரிஜனங்களும் வர்க்கத்தார்களும் அல்லாத இதர கிறிஸ்தவர்கள்
6 கவுண்டர்
7 கிராமணி
8 கம்மவர்
9 காப்பு
10 கார்காத்தார்கள்
11 கவரை
12 லிங்காயத்து
13 முதலியார்
14 தூதை குலர், லப்பைகள் மாப்பிள்ளைகள் அல்லாத இதர முஸ்லீம்கள்
15 நாடார்
16 நாட்டுக்கோட்டைச் செட்டியார்
17 நாயர்
18 ராஜூ (ராஜா)
19 ரெட்டி
20 தெலிகா
21 தியா
22 உடையார்
23 வைசியர் (செட்டி, கோமடி)
24 வேளாளர்கள்
25 பத்ம வெலமா

வனமகோற்சவம்:—

நாட்டின் வருங்காலப் பாதுகாப்பு, மரம், செடி, கொடிகளின் அபிவிருத்தியிலுள்ளது. நாட்டின் பொருளாதாரம் சரியாக இருக்கக் காடுகள் வளர்க்கப்பட-வேண்டும். காட்டின் விளங்குகள் வளரவேண்டும்.

கங்கையின் தண்ணீர் கெடாமலிருக்கக் காட்டின் மூலிகைகள் கலந்துவருகின்றன. பாலைவனம், நதிக்கரைகள், பள்ளங்கள், மண் அறிப்புகள் சீர்பட வேண்டும். ராஜபுதனப் பாலைவனம் கங்கை சமவெளியில் வருடத்திற்கு அரைமைல் தூரம் வளர்ந்து வருகிறது. கணவாய்கள் மூலம் காற்று, மணல் சேர்ந்து ஐம்பது மைல் பாழடைகிறது. 11 கோடி 20 லட்சம் ஏக்கர்கள் மண் அறிப்பில் போய்விடுகிறது. மரம், செடி, கொடி உற்பத்தியைப் பெருக்கினால் மேற்கண்டவை ஏற்படாவண்ணம் தடுக்கலாம். கிராமங்களிலும், ரோடுகளிலும், காடுகளிலும் மரங்களை வெட்டாமலிருக்கும்படி பிரசாரம் செய்யவேண்டும்.

உண்மைச் சன்மார்க்கம்:—

காற்றினால் கலக்கப்படுகிற மேகத்தைப்போல மனத்தைச் சிதறவிடாமல் தமக்குச் சரியென்று தோன்றும் காரியங்களில் உறுதி கொண்டு மனத்திண்மையோடு செய்து முடிப்பவர்களைத்தான் மக்கள் என்று சொல்லலாம், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப நாம் காரியம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படலாம்.

உதாரணமாக நமக்கு விருப்ப மில்லாவிட்டாலுங்கூட இமயமலை போன்ற குளிர்ப்பிரதேசங்களில் கம்பளி உடை தரித்தே ஆகவேண்டும். இத்தகைய பல சங்கடமான சந்தர்ப்பங்கள் வரலாம். நாம் இப்போது அறியப்புகுந்த விஷயமெல்லாம் கால தேச நிலைமைகளை அனுசரித்து நாம் காரியம் செய்யும்போதுங்கூட சன்மார்க்க நியமத்தைக் கவனிப்பதா? வேண்டாமா? என்பதே.

விலங்குகளோடு மனிதனை ஒப்பிட்டால் மனிதனைவிட சரீர பலத்தில் அவைகள் மிஞ்சியிருக்கின்றன. மனிதன் தன்புத்தியின் பலத்தால் அவைகளை அடக்குகிறான். எந்தக்கட்சியில் அறிவாளிகள் அதிகமோ, அக்கட்சி ஆள் பலத்தில் குறைந்ததாயினும் அதுவே வெற்றியடைகிறது. ஆனால் இந்த இரண்டு பலங்களைவிட நீதிபலம்

அல்லது தர்மபலம் பெரிதாகும். சன்மார்க்க நியதிகளிலே முதலாவ தாக நிற்பது சாந்தம் அல்லது தாழ்மைக்குணமாகும். மனிதன் விஷய சுகங்களில் ஈடுபடக்கூடாது. மதுபானம் செய்வோர் அதிக காலம் உயிர் வாழ்வதில்லை. விபசாரம் செய்வோர் அற்ப ஆயுளில் மாண்டுபோவார்கள். பரநல உணர்ச்சியில்லையானல் உலகில் முட் செடிகளும், விஷப்பூண்டுகளும் தவிர வேறெதுவும் உயிர்வாழ முடியாது. டார்வினுடைய உயிர்க்கொள்கைப்படி நீதிபலம் எல்லா வற்றிலும் சிறந்தது. கிரேக்கர்கள் ஐரோப்பியர்களைவிட அறிவிற் சிறந்திருந்துங்கூட சன்மார்க்கத்தைக் கைவிட்ட காரணத்தால் அழிந்தார்கள். சன்மார்க்கச் சட்டத்தின் இருப்பிடம் நமது இதயமே. சன்மார்க்கச் சட்டம் பழக்க வழக்கங்களையும் பொதுஜன அபிப்பிராயத்தையும் பொருட்படுத்துவதில்லை. சன்மார்க்க நியாயமே இவ்வுலகில் என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடியது என் பதில் சந்தேகமே இருக்க முடியாது.

ஜீவகாருண்யம்:—

1. எல்லாக் குணங்களிலும் மேன்மையானது ஜீவ காருண்யம்.
2. காருண்யத்திற்காகவே காருண்யம் காட்டவேண்டும்.
3. எல்லாம் தன்னுயிர் என்று எண்ணுகிறவர்கள் சுக ஜீவிகள்.
4. உண்மையான சுகத்தைத் தேடுகிறவர்கள் ஜீவ காருண்யத்தில் பழகவேண்டும்.
5. பசி, பிணி, எளிமை, தாகம், இச்சை, பயம், கொலை இவைகளால் துன்பம் உண்டாக்கும். கண்டபோதா வது, நடக்கும் என்று தெரிந்தாலும் ஆத்மா உருக வேண்டும். இவை இயல்பாய் அமையாது. திரு வருள் அவர்கள் அகக்கண்ணைத்திறந்து உண்மை யைக் காட்டி உபகாரச் செயலில் வரவேண்டும்.
6. வேலைசெய்ய இயலாதவர்கள், வியாதியஸ்தர்கள், வயோதி கர்களுக்குப் பிச்சையிடவேண்டும்.

பார்த்துண்ணல்:—

என்பதின் அடிப்படை அன்பு. அன்பு பரவவேண்டும். (அரசன் முதல் அடிமைவரை).

அன்பெனும் பண்பு நண்பெனும்
நாடாச் சிறப்பினை நல்கும்.

அன்பில்லாமல் இல்லறம் நடத்தினால் பாலைவனத்தில் பட்ட மரம் தளிர்த்தது போலாகும். பண்டைய தமிழன் "தன்னையடைந்தவர்களை உடன் தோன்றலர்" எனக்கருதினான். தேடியபொருளில் ஒருசிறுபகுதியைக்கொடுத்துத் தானும் உண்டுமகிழ்ந்தான். மக்களுக்குள் மனவேறுபாடின்றி ஒற்றுமை ஏற்பட்டது. இதனால் பிறனைக் கெடுத்துத்தான் வாழவேண்டும் என்ற எண்ணம் அறவே ஒழிந்தது.

பகிர்ந்துண்ணும் வாழ்க்கை இன்பமானது, ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுயிராது. ரஷ்யநாடு இம்முறையிலிருக்கிறது.

தற்சமயம் அன்பை மறந்து, அந்நிய நாகரீகத்தின் பயனாய் பிறர்கெடத் தான் வாழும் மனோபாவம் மக்களைப்பிடித்தது.

வருமைப் பேயின் கொடுமையால் உடல் உரங்குன்றி, உற்சாகமிழந்து, நடைப்பிணங்களாய் ஒடுங்கி நிற்கும் இவர்களுக்கு இந்த உலகமானது ஆசைபேய்களும் வஞ்சனை நாய்களும் பொருமைக் கழுகுகளும் கூடிக்கொண்டு உயிரோடு கொத்திப்பிடுங்கித் தின்னும் பயங்கரமான போர்க்களமாகத் தோன்றும் பணப்பேய் தலைவிரித்தாடும். இவ்வுலகம் அவர்களுக்குக் கொடிய சுடுகாடெனத் தோன்றும்.

"பாத்துண்ணல்" என்ற அன்பு மீண்டும் ஏற்பட்டால் நாடு பண்டைச் சிறப்படையும். பாரதி பாட்டுக்கு இலக்காகும்.

புத்தம் புதிய கலைகள்
மெத்த வளருது மேற்கே
அவை யாவும் கொணர்ந்
திங்கு சேர்ப்பீர்.

பொது அறிவு.

சேவை செய்யத் தகுந்தவர்கள்:—

1. வாழ்க்கை வசதியும், ஓய்வும் உள்ளவர்கள்.
2. பெரிய காரியங்கள் செய்கிறோம் என்ற இறுமாப்பு இல்லாதவர்கள்.
3. தன்னடக்கமும், எளிமையும் உள்ளவர்கள்.
4. கடமையைச் செய்யும் உணர்ச்சி உள்ளவர்கள்.
5. மிகத் தாழ்ந்தவர்களிடமும் கலந்து பழகும் இயல்புள்ளவர்கள்.

கர்ப்பத்தடை:—

கர்ப்பத்தடை பாபமில்லை. குடும்பத்தை அதிகமாகப் பெருக விடாமல் கட்டுப்படுத்துவது என்பது உலகமெங்கும் பின்பற்றப்பட வேண்டும்.

முன்பெல்லாம் வியாதி காரணமாக மரணம் ஏற்பட்டு ஜனத் தொகை குறைந்தே வந்தது. ஆனால் இப்போது வைத்தியத் துறையில் முன்னேற்றம் காரணமாக ஜனத்தொகை மிகவும் பெருகி விட்டது. இப்பொழுதுள்ள நிலைமையில் ஒரு குடும்பத்திற்கு 4 குழந்தைகள் இருப்பதே போதுமானது.

வாழ்க்கையின் சிக்கல்கள்:—

1. வாழ்க்கையில் எவ்வித இன்னல்கள் எதிர்நோக்கிய போதிலும் மனதைத் தளரவிடக்கூடாது.
2, திடசித்தம் வேண்டும்
3, இன்னல்களை எதிர்த்துப்போராட மன உறுதியையும் வலிமையையும் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இதுதான் நமது மதம், வேதாந்தம். இவைகளே காட்டும் வழி.
4. எல்லாம் வல்ல இறைவனை நாம் மறத்தல் கூடாது.
5. “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்பதை அடிக்கடி மனதில் கொள்ளவேண்டும்.

6. கஷ்டம்வந்த காலத்தும் அவனை நினைந்து, அவனது திருவருள் கிடைக்க மனதைக்கொள்ள வேண்டும். இதனால் பிரார்த்தனையும் அவசியம் என்பது தெளிவாகிறது.

7. ஒவ்வொரு தினமும் சற்றுநேரமாவது கடவுளை மனதார நினைத்து, துதித்து வழிபட்டால், மனதிற்குச் சாந்தியும், நிம்மதியும் உண்டாகும். குறுகிய நோக்கங்கள் மறையும். மனது பரிசுத்தம் அடையும். நமக்கும் அறிவு தெளிவாகும்.

8. பயத்தை ஒழித்துக்கட்ட வேண்டும்.

9. வாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்துவோம் என்ற திட வைராக்கியம் வேண்டும்.

10. இதற்கெல்லாம் முதலில் நமக்கு நமது மதக்கோட்பாடுகளிலும் எல்லாம் வல்ல இறைவனிடத்திலும் ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும்.



பொன் மொழிகள்.

1. இரக்கம், உண்மைகள் உன்னைவிட்டு விலகாதிருக்க; அவற்றைக் கழுத்தில் தரித்துக்கொள்வாய், இதயப்பலகையில் அவற்றை எழுதிக்கொள்க.

2. புத்தியுள்ளவர்களுக்கு மேன்மை கிடைக்கும், மதிகேடரின் கதியோ அவமானம்.

3. பர ஸ்திரீ உதடு தேன் ஒழுகு கூடு, அவள் வாய் எண்ணெயிலும் மிருது. முடிவிலே அது எட்டிபோல் கசக்கும். இருபுறமும் சுருக்குள்ள பட்டயம்போல் அது கூர்மையாம். அவள் கால் மரணத்திற்கு இரங்கும். அவள் காலடிகள் பாதாளம் பிடித்தேகும்.

4. சோம்பேறி. எறும்பினிடம் போ. அதன் வழியைப் பார்த்து ஞானம் பெறுவாய். அதற்கு அதிபதியில்லை. தலைவனுமில்லை. ஆண்டு நடத்துவோனுமில்லை. வெய்யில் காலம் உணவைச் சம்பாதிக்கும், அறுப்பிலே தானியம் சேர்த்துவைக்கும்.

5. உன் தந்தையின் கட்டளையைக் காத்துக்கொள், தாயின் போதனையைத் தள்ளாதே. அவற்றை என்றும் உன் இதயத்தின் மேல் அணிந்துகொள். உன் கழுத்திலே அவற்றைக் கட்டிக்கொள். நடக்கும்போது உனக்கு அது வழிகாட்டும். படுக்கும்போது உனக்கு அது காவலாகும். விழிக்கும்போது உன்னோடு அது உரையாடும்.

6. தரித்திரம் வழி பறிப்பவன் போல் வளரும். வறுமை ஆயுத மணிந்தவன்போல் வரும்.

7. புத்தியுள்ள மகன் தந்தையை மகிழ்விப்பான். மதியீன மகனோ தாய்க்குத் துயரமாவான்.

8. தெய்வபயமில்லார் செல்வம் ஒன்றுக்கும் உதவாது. நீதியோ மரணத்தினின்றும் விடுவிக்கும்.

9. சோம்பல் கையால் வேலை செய்பவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளோன் கை செல்வம் தரும்.

10. விவேகமில்லா அழகுள்ளவன் பன்றியின் மூக்கிலே பொன் மூக்குத்தி போலிருப்பான்.

11. தானியம் கட்டிவைத்துக்கொள்பவனை ஜனங்கள் சபிக்கும். அதை விற்பவன் தலைமேல் ஆசீர்வாதம் தங்கும்.

12. திறமையுள்ள மனையாள் கணவனின் கிரீடம். இலச்சை வருவிப்பவள் அவன் எலும்புருக்கி.

13. மனக்கவலை மனிதன் இதயத்தை ஒடுக்கும். நல்வார்த்தையோ அதை மகிழச்செய்யும்.

14. விவேகமுள்ள ஸ்திரீ தன் வீட்டைக்கட்டுவாள். புத்தியில்லாதவளோ அதைத்தன்கையால் இடிப்பாள்.

15. நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு. மகிழ்ச்சியின் துயரமாகும்.

16. குடிகள் பெருகுவது நாட்டுக்குச் சிறப்பு. ஜனத்தொகை குறைவு முடிவு தலைவனுக்கு அழிவாம்.

17. சாந்தமுள்ள நாவு ஜீவ விருட்சம். நாவின் மாறுபாடோ உள்ளம் நொறுக்கும்.

18. சோம்பேறியின் வழி முள்வேலியாம். நேர்மையாளர் வழியோ ராஜபாதையாம்.

19. மாறுபாடுள்ளவன் சண்டைக்கு விதை போடுவான், கோள் உரைப்போன் உயிர்த்தோழரையும் பிரிப்பான்.

20. சண்டையோடு கொழுத்தத் தின்பண்டங்கள் நிறைந்த வீட்டிலும், அடக்கத்தோடு பெறும் காய்ந்த உணவு ஒரு வாய் மேலாம்.

21. தெய்வ பயமற்றவன் இரகசியமாக லஞ்சம் வாங்கி நியாய வழி புரட்டுவான்.

22. மதியீனமகன் தன் தந்தைக்குக் கேடாவான். மனைவியின் சண்டை ஓயா ஒழுக்கு.

23. நம்பிக்கையுள்ளமட்டும் மகனைச் சிட்சி. சிட்சியாவிடில் அவன் மாள நீ காரணமாவாய்.

24. மனிதனிடத்தில் மதிக்கப்படுவது அவன் தயாளமே. பொய்யுரைப்பதிலும் ஏழையாயிருப்பது நன்று.

25. சுறுசுறுப்புள்ளவன் யோசனை செல்வம் தரும். பதறிச் செய்பவனே தரித்திரனாவான்.

26. சிற்றின்பப்பிரியன் தரித்திரனாவான்.

27. சோம்பேறி தன் ஆசையால் மடிவான்.

28. செல்வனாகிவிட வேண்டுமென்று உழைக்காதே. உன் விவேகத்தை அதற்கென்றே செலவிடாதே.

29. குடியன், பெருந்தீனிக்காரன் தரித்திரனாவான். நித்திரை பிரியன் கந்தைகளை உடுத்துவிக்கும்.

30. வேசி ஆழமான படுகுழி, பரஸ்திரீ இடுக்கமான கிணறு.

31. அடிக்கடி அயலான் வீட்டில் கால்வையாதே. வைத்தால் அவன் சலித்து உன்னை வெறுப்பான்.

32. கல்கனம், மணல்பாரம், மூடனின் கோபம் இரண்டிலும் பாரம்.

33. இரும்பை இரும்பு கூர்மையாக்கும். அப்படியே மனிதனை அவன் சிநேகிதன் கூர்மையாக்குவான்.

34. வட்டிவாங்கியும், கூட்டிவாங்கியும் பொருள் பெருக்குவோன், நீண்டநாள் வாழமாட்டான்.

35. பாலைக்கடைய வெண்ணெய் பிறக்கும். மூக்கைப்பிசைய ரத்தம் பிறக்கும். கோபத்தைக்கிண்டச் சண்டை பிறக்கும்.

சிந்தனைச் சொற்கள்.

1. வசதிகளுக்கு அடிமையாகும் மனிதன் சுயநலத்திற்குப் அடிமையாகி விடுகிறான்.

2. நிலையற்ற கொள்கையுடைய மனிதனிடம் பதட்டமும் இயற்கையாகவே இருக்கும்.

3. நேர்மையுள்ள மனதில் பயம் குடியிருக்காது.

4. பேச்சைவிட மனிதனின் நடத்தையின் மூலமே தராதரத்தை நிர்ணயிக்கமுடியும்.

5. பரந்த அறிவில்லாத மனதில் உயர்ந்த லட்சியங்கள் இருக்கமுடியாது.

6. இரும்பில் துருப்பிடிப்பதுபோல லட்சியங்களில்லாத மனித உள்ளத்தில் நயவஞ்சகம் பிடித்துக்கொள்கிறது.

7. தெரியாமல் செய்யும் தவறுக்கு மன்னிப்பு உண்டு. தெரிந்து செய்யும் தவறுக்கு மன்னிப்பு இல்லை.

8. பெரும் கௌரவத்தை எதிர்பார்க்கிறவர்கள் பெரும் அபாயத்தையும் சமாளிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

9. பூரண அன்பு இல்லாத இடத்தில் அழகு இருக்காது. அழகில்லாத இடத்தில் ஒளியும் இருக்காது.

10. அரசியல் என்பது சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பித்தலாட்டம்.

11. தவறைச் செய்வதைவிட அதை மறைக்க முயலுவது தான் மன்னிப்பு இல்லாத குற்றமாகும்.

12. எவ்வளவு முயன்றும் இயற்கையை மனிதனால் வெல்ல முடியாது.

13. நீதி இல்லாத சட்டம் குதிரை ரூபத்திலிருந்தாலும் அது கழுதையைப் போன்று உதைக்கும்.

14. நாக்கின் நீளம் மூன்று அங்குலம்தான். ஆனால் அது ஆறடி மனிதனைக்கூடக் கொன்றுவிடும்.

15. சுயநலம் உள்ள இடத்தில் மனிதகுணம் இருக்காது.

16. அழகுள்ள இடத்தில் அன்பு இயற்கையாக மலருகிறது.

17. ஜாதிப்பற்றும் வகுப்பு வெறியும் உள்ளவனிடம் திறமையும் அறிவும் இருக்காது.

18. சகிப்புத்தன்மை உள்ள இடத்தில் சச்சரவுக்கு இடமிருக்காது.

19. நல்ல குணம் உள்ள இடத்தில் கௌரவம் தானாகவரும்.

20. நன்மையும் தீமையும் பாகுபடுத்தத் தெரியாத மனிதன் எந்த வேலைக்கும் லாயக்கற்றவன்.

21. சுயமரியாதை என்ற அஸ்திவாரத்தின் பேரில் மனித கௌரவம் உருவாகிறது.

22. படிப்பும் சிந்தனையும் உள்ள மனிதரிடம் அறிவு வளர்ச்சி பெறுகிறது.

23. எந்த விஷயத்திலும் கவலை ஆரம்பமானால் அது தோல்வியின் சின்னமாகும்.

24. மனச்சாட்சி என்ற ஊற்றிலிருந்து பிறப்பதுதான் நம்பிக்கை.

25. அறிவிலிகளின் மத்தியில் அறிவாளி இருப்பது கண்ணில்லாக் கபோதிகளின் மத்தியில் அழகான பெண் இருப்பது போலாகும்.

26. பகுத்தறிவில்லாத வாதத்திற்கும் பைத்தியத்தின் பேச்சுக்கும் வித்தியாசமில்லை.

27. தோல்வியைக் கண்டு மனம் தளராமல் இருப்பதுதான் ஒரு மனிதனின் தைரியத்திற்கும் உண்மையான சோதனை.

28. பெரிய மனிதர்களிடம் லட்சியம் உண்டு. சிறிய மனிதர்களிடம் பேராசை இருக்கும்.

29. சந்தோஷமில்லை யென்று கவலைப்படும் மனிதனுக்குச் சந்தோஷம் என்றுமே கிடைக்காது.

30. தவறுதல் ஏற்பட்டால் ஜாக்கிரதையாக இருப்பவன் முதல்தர மனிதன். தவறு ஏற்பட்டபின்பு திருத்திக்கொள்பவன் இரண்டாந்தர மனிதன்.

31. மடையன் புகழ்ந்து பேசுவதைவிட அறிவாளிதிட்டுவதே மேலானது.

32. தன்னிடம் சுயநலம் இல்லை யென்று சொல்லுதலே பெரிய சுயநலமாகும்.

33. எதிலும் நல்லதையே கவனிப்பவர்களுக்கு உண்மையான தவறு தெரியாது.

34. தன் முதுகில் கோணல் இருந்தாலும் மற்றவன் முதுகில் உள்ள சொரியைப்பற்றி மனிதன் பேசுவது பிறவிக்குணம்.

35. நன்கு நடப்பவன் தூசியைக் கிளப்புவதில்லை. நன்கு பேசுபவன் வாதப்பிரதிவாதம் செய்வதில்லை. நன்கு வாழ்பவன் குழப்பத்தை உண்டு பண்ணுவதில்லை.

இயேசுநாதரின் பொன்மொழிகள்.

எந்த ஆசிரமியாக இருப்பின் என்ன, எவ்விடத்தில் இருப்பின் என்ன, சோதனைகளும் துன்பங்களும் அணுகாமல் இரா. மனிதன் உள்ளவரை அவைகளை விட்டு விலகமுடியாது. ஏனெனில் சோதனைக்கு மூலம் தன்னுள்ளே, காமத்தில் பிறந்தோம் ஒரு சோதனை ஒரு துன்பம் வந்து தனியே மற்றொன்று அதன் ஸ்தானத்திற்கு வருகிறது. ஆக ஏதாவது ஒரு துன்பம் அல்லது மற்றது மனிதனுக்கு இருந்துகொண்டே இருக்கும்.

அநேகர் சோதனைகளை விட்டு விலகிக்கொள்ள முயலுகிறார்கள். அவ்வளவுக்குத்தக்க பாதாளத்தில் விழுகிறார்கள். அவைகளை

விட்டு ஓடினால் அவைகள் விடா. அவைகள் வரட்டுமென்று பொறுத்துத் தணிந்து கொடுத்தால் நமக்குத் தைரியம் உண்டாகும். முரட்டுத்தனத்திலும், மனச்சஞ்சலத்தினாலும் பரபரப்பான நடத்தை யாலும் அவைகளை வெல்லமுடியாது. சோதனையால் மெய்யுணர்வு பெறுவாய். அதனால் துன்பத்துக்குள்ளாயினாரைச் சாந்தமாய் நடத்துக. அவர்கள்மேல் அன்புடையவனாய் ஒழுகுக. அவருக்கு ஆறுதல் சொல்லுக. "நினைக்கக்கேடு தனக்கு" என்ற பழமொழியை உணருக. சஞ்சல சிந்தையும், ஈசனிடம் பற்றுவையா மனமும் இவ்விரண்டும் துன்பத்திற்கு வித்தாம். வேறுவித்து இடல்வேண்டுமோ. சுக்கான் இல்லா மரக்கலம் அலையால் அங்கு மிங்கும் தத்தளிக்குமாறு வாழ்நாளை நேர்மைப் படுத்தாமலிருக்கின்ற புத்தியீனன் தவிப்பான்.

நெருப்பினால் இரும்பு சுத்தமாகும். துன்பத்தினால் நல்லார் விளங்குவாராவர். பெரும்பாலும் நம்முடைய சக்தி நமக்கே தெரியாமலிருக்கும். துன்பமும் துயரமும் நம்முடைய சக்தியை வெளிப்படுத்தும். துன்பம் அணுகுகையில் எச்சரிக்கையாயிரு. அப்போது அதை இலகுவாய் ஜெயிக்கலாம்.

சோதனையாகத் துன்பம் நேரில், மனம் சோர்வடையாது இருங்கள். அகலாது இறைவனைப் போற்றுங்கள். நம் துன்பத்தில் அவர் இரங்கி அருள்புரிவார். ஒவ்வொரு துன்பத்துடனும் அதைவிட்டு விலகிக்கொள்ளும் உபாயத்தையும், அதைப் பொறுத்துக் கொள்ளும் முறையையும் இறைவன் அமைத்திடுவார்.

ஒருவனுக்காவது அல்லது சொந்த லாபத்தை நோக்கியாவது நியகருமம் செய்யாது ஒழிக.

அன்பின்றேல் வெளிக்கருமம் பயனில்லையாம். அன்புண்டேல் கர்மம் எவ்வளவு அற்பமேனும் அது பலனுள்ளதாம். செய்பவன் மனோபாவம் எத்தன்மையதோ அதுபற்றியே ஈசன் அருள் ஏற்படுவதாகும். செய்யும் கருமத்தின் அளவுபற்றி அன்றாம், அன்புடன் செய்யும் காரியம் சிறியதேனும் பெரியதாம். உண்மையுடன் செய்யும் கருமம் உயர்வாம். சுயநலம் பாராட்டாது பொது நலம் பாராட்டுவோன் கர்மம் நன்றாம்.

ஒருவன் ஒருமுறை, இருமுறை, பலமுறை புத்தி சொல்லி கேளாவிடில் அவனோடு போராடாதே. கடவுளிடம் அவனை ஒப்பு வித்து விடு. அவர் ஆக்ஞைப்படி நடக்கட்டும் என்று நினை. தீமையை நன்மையாக மாற்றும் சக்தி அவருக்குண்டு.

உன் குற்றங்களையும், குறைகளையும் பிறர்சகிக்கவேண்டு மென்று விரும்புகிறாயல்லவா? நீ விரும்பியபடி உன்னை ஆக்கிக் கொள்ள உனக்கு முடியாமற்போனால், பிறரை உன் மனப்படி ஆக்க முயலுவதில் என்னபயன்? நம்மைத் தவிர பிறர் எல்லா குற்றமும் குறையும் அற்ற ஞானிகளாக இருக்க விரும்புவோம்! நம் குற்றங் களைக் களையமாட்டோம்...! பிறர் குற்றங்களைக் கண்டிப்போம். நம்மைக்கண்டிக்க இணங்கோம்! பிறர் சுதந்திரம் பாராட்ட நாம் சகியோம்! நம்முடைய விருப்பத்தில் தடை நேரிட்டால் அதைப் பொறுக்கமாட்டோம். பிறருக்கு விதிப்போம்! நம்மையும் பிறரையும், ஒரே தராசில் நிறுக்கச்சகியோம். எல்லாருமே ஞானிகளேயாகில் பிறர் குற்றம் சகிக்கச்சமயம் எங்கே? ஈசனுக்குத் திருப்தியாய் வழிபடும் முறை எங்கே? அதனால் பிறர் சுமையை நாம்தாங்குகிறதே ஈசுவர சங்கல்பமென உணருவாயாக.

குற்றமிலார் ஒருவருமிலர். தன் கவலையைத்தானே தாங்கும் சக்தியுள்ளார் ஒருவருமில்லை. பிறருடன் நேர்மையாக இருக்க விரும்பினால் தன்னைத்தானே அடக்கவேண்டும்.

பிறருக்குக் கைங்கரியம் செய்யவே உலகத்தில் ஜனித்தாய். அரசுஆள அன்றும். உழைக்கவும், வருந்தவும், உனக்குச் சரீரம் அமைந்ததேயன்றி, சோம்பித்திரியவும், பயனில்லாத சொல் சொல்ல வும் அன்றும். தங்கம் உலையில் போல மனிதர் உலகில் தபிக்கப் பெறுகிறார். இறைவனிடம் பூர்ண அன்பு செலுத்துங்கள்.

கடவுள் ஒருவரே! அவரே உன்கடவுள். கடவுளிடம் மனப் பூர்வமான. மனதார. அன்பு பூண்டு, முழு ஆற்றலோடும் தொண்டு செய்.

உப்பு நல்லது, கரிப்போடு இருக்கும் வரையிலும்; அந்தக் கரிப்பு ஒழியுமேல், அதற்குக் கரிப்பூட்டுவது எப்படி? உங்களில் உப்பு இருக்கக்கடவது.

புத்தியிலே பாம்புபோல் இருங்கள்; கபடின்மையிலே புறாப் போல் இருங்கள்.

உலக வாழ்நாளை, வழிப்போக்கனைப்போல நடத்துவாயாக. உலகப்பற்றை விடு. மனதை ஈசனைநோக்கிச் செலுத்து. உலகத்தில் சாசுவதமானது ஒன்றுமில்லை.விண்ணுலகைநோக்கித் தினந்தோறும் உன் பிரார்த்தனைகள் செல்லட்டும். மனது உருகட்டும். கண்ணீர் ததும்பட்டும். அதனால் நீ மகிழ்ச்சியாக இறைவன்தாள் சேருவாய்.

மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளும் தத்துவங்களும்.

1. மனிதனிடம் இருக்கவேண்டியது அன்பும் அநுதாபமும்

2. பொய்பேசிப் பணம் சேர்ப்பவர்கள் கர்விகள். அவர்கள் இறந்தவர்களுக்கே சமம்.

3. அநியாயம்செய்து சேர்த்த பணத்தில் பயனேதுமில்லை. சாவு வராமல் காப்பது சத்தியமே.

4. தன் பொருளைப் பெருக்குவதற்காக ஏழைகளைத் துன் புறுத்துவோன் இறுதியில் வீடுவீடாகச்சென்று பிச்சை எடுப்பான்.

5. ஏழையும், பணக்காரனும் சமமானவர்கள். அவர்களைப் படைத்தவர் கடவுள்.

6. பாமரர் சுபிட்சம் தேச முன்னேற்றம். அவன் திருப்தி நாட்டின் அமைதியாகும். அவன் சந்தோஷம் தேச மேம்பாட்டுக்கு அறிகுறியாகும். (யாருக்கும் 2 வேளை முழுச்சாப்பாடாவது வேண்டும்.)

7. ஒரு சிலர் செல்வச் சீருடன் வாழ்வது தேசீய சுபிட் சத்தைக் காட்டுவதாகாது. பலகோடி பாமர மக்களின் சுபிட்சமும், சுகமும் மனோதிருப்தியுமே தேசீய சுபிட்சத்தின் அஸ்திவாரமாகும். (பாமர மக்களின் ஜீவாதாரத்தேவைகள்யாவும் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்து அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்து. இதுவே மகாத்மாவின் இலட்சியமாகும்)

8. அழுக்கற்ற எண்ணம் வேண்டுமாயின் தீய எண்ணங் களை மனத்தே புகவிடலாகாது. மனம் சும்மா இராது. ராம

கிருஷ்ணர், இயேசு, முகமது இவர்கள் சத்தியத்தின் அவதாரங்கள். அவர்கள் நாமத்தை ஜெபிக்கவேண்டும்.

9. உடலால் உழைக்காதவனுக்கு அதனுல் வரும்பயனுகிய உணவை உண்ண உரிமை ஏது?

10. வகுப்பு ஒற்றுமை, ஜாதி ஒற்றுமை, கிராமப்புனரமைப்பு, ஹரிஜன முன்னேற்றம் நம் நாட்டுக்குத் தேவை.

11. தன்னம்பிக்கை, பரஸ்பர நம்பிக்கையும் கொள்ள வேண்டும். (மக்களிடையே இவையில்லாததை நன்குணர்ந்திருந்தார் காந்திஜீ) அவருடைய மேசையின்மேல் 3 பொம்மைகள் வைக்கப் பட்டிருந்தன.

1. காது இரண்டையும் பொத்திக்கொண்டிருந்தது.
"தீமை ஏதும் கேளாதே"

2. வாயைக் கையால் மூடிக்கொடிருந்தது.
"தீமை ஏதும் பேசாதே"

3. கைகளிரண்டையும் கட்டிக்கொண்டிருந்தது.
"தீமை ஏதும் செய்யாதே"

ஒவ்வொருவரும் இதையறிந்து திரும்பத்திரும்பச் சொல்லிப் பழகவேண்டும் என்ருர்.

12. சத்தியம் அகிம்சை, பிரம்மச்சரியம் அவசியம்.

1. பாரதம் இந்தியக்கலை நிலையம்.
"Maha Bharata is the store house of India"

2. கீதை சக்தி நிலையம்.
Gita, a power house of National energy.

13. உடலுக்கு ஆகாரம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது, ஆத்மாவுக்கும் பிரார்த்தனையும்.

14. பலருக்கும் கிடைக்காத ஒரு பொருளை நாம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுவது ஒரு பொன்னன விதி.

15. மாணவர்கள் கட்சி, அரசியலில் தலையிடுவது சரியல்ல. எல்லாவிதமான புத்தகங்களையும் அவர்கள் படிப்பதுபோல் எல்லா கட்சிகளின் தத்துவங்களையும் அறிந்துகொள்ளலாம் ஆனால் அவற்றி லுள்ள உண்மையைமட்டும் கிரகித்துக்கொண்டு எஞ்சியதை விட்டு விடவேண்டும்.

16. கதர் புகட்டும் உணர்ச்சிக்கு அர்த்தம் பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் சகோதர வாஞ்சை யுள்ளவர்களாக இருப்பதே.

17. உழைப்பு தனக்குரிய மதிப்பைப் பெறும்போது பணத் திற்கும் அதற்குரித்தான மதிப்பு தானாகவே ஏற்படும்.

18. ஆத்மா அழிவில்லாதது. ஆனால் சேவைகள் நல்ல காரியங்கள் செய்யும் பொருட்டு மேலும் மேலும் புதுப்புது உரு வங்களை பெறுகிறது.

19. சிறுசிறு தேவைகளை யெல்லாம் அத்தியாவசியமான தேவை என்று சொல்லிப் பெருமைப் படுத்திவிடக்கூடாது. மனித னுடைய தொழிற்பயிற்சி பெறுவதுதான். அவன் பயிற்சிபெறும் போது நன்மை தீமை வந்து தாக்கும். ஆசை வந்து மயக்கும். ஆசையை எதிர்த்துப் போராடி தனக்குள்ள மனிதத்தன்மையை மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

20. கடவுள் படைப்பில் யாவரும் சமம். உயர்வு தாழ்வு கூடாது. தீண்டாமையை ஒழிக்கவேண்டும்.

21. மதுவிலக்கு அமுலிலிருக்கவேண்டும். நமது மதத்தால், நமது கலாச்சாரத்தால், நமது நாகரீகத்தால், நமது தலைவர்களால் தொன்று தொட்டே மதுவிலக்குப் பிரசாரம் நடந்து வந்திருக் கிறது.

22. கோபமும் ஒரு பைத்தியமே. கோபத்தால் எதையும் சாதித்துவிட முடியாது.

23. கட்டாய இலவச அடிப்படைக்கல்வி நம் நாட்டுக்குத் தேவை. அதன்படியே ஆதாரப்பள்ளிகள் அமைந்து வருகின்றன.

24. பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். துன்பத்தைப் பொறுப்பதே துன்பத்தை வெல்வதாகும்.

25. மனிதனுக்குப் பயப்படுவதை நிறுத்தவேண்டும்.

26. தேசத்தின் பொக்கிஷங்கள் வாலிபர்கள். நம்பிக்கை வைக்கவேண்டும்.

27. பெண்ணானவள் தியாகம், அகிம்சை இவைகளின் சொரூபமாயிருக்கிறாள்.

28. கோபத்தை அடக்கு. மிருகங்களிலும் கேவலமாய்ப் பேசாதே.

29. பால்ய விவாகங்கூடாது.

30. "பிரம்மச்சரியம்" என்றால் ஒரு காகிதத்தைத் தொடும் போது ஒருவித உணர்ச்சியும் மனதில் ஏற்படவில்லையா? அதேமாதிரி ஒரு பெண்ணைத்தொடும்போது மிருக்கவேண்டும்.

31. கெட்ட உணர்ச்சி ஏற்படக்கூடிய நாடகம், சினிமாக் களைப் பார்க்காதே.

32. மனைவி ஒரு சிறந்த நண்பன் என்று நினை. போகத்திற் காக அல்ல.

33. உண்மையைக் கடைப்பிடித்தால் முகத்தில் அழகு தோன்றும்.

34. அல்லா, கிறிஸ்து, ஈசுவரன் ஒன்றே.

35. நம் கௌரவம், சுயமரியாதை இவைகளை நாம்தான் காப்பாற்ற முடியும்.

36. உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது. சேவைதான் வெளிப்படுத்தும். அன்பு கருங்கல்லையும் பிளக்கும்.

37. ஐரோப்பிய நாகரீகம் பூராவும் காப்பியடித்தால் நாசமே.

38. வக்கீல்கள் கடமை, குற்றவாளிகளை நிரபராதிகளென்று நீதிபதிகளிடம் முறையிடக்கூடாது.

39. இஸ்லாம் என்றால் "அமைதி" அதாவது அஹிம்சை யென்பது பொருள்.

40. விதவையாக இல்லாத பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டேன் என்ற பிரதிக்ஞை எடுத்துக்கொள்.

41. நேர்மை தவறினால் ஆத்மா வலிமை குன்றும்.

42. யோக்கியமான வீடே ஒரு நல்ல பள்ளி. யோக்கியமான பெற்றோரே நல்ல ஆசிரியர்கள்.

43. "கொழைத்தனம்" என்ற சொல்லிருக்கக்கூடாது.

44. மாணவர்கள் ஒழுக்கமில்லா விட்டால் பணச்செலவு செய்வது வீண்.

45. பெண்கள் தக்கமுறையில் கல்வி பயிலவேண்டும். ஆனால் ஆண்களைப்போல் நடந்தால் மேன்மையடைய முடியாது.

46. கடவுளும் உண்மையும் ஒன்றுதான்.

47. கடவுள் தெய்வலோகத்திலுமில்லை. பாதாளலோகத்திலு மில்லை. ஒவ்வொரு மனிதனிடமுமிருக்கிறான். சேவைமூலம் கடவுளைக் காணலாம்.

48. பலகல்லூரிகளில் படித்தாலும் மனத்தை அடக்கி ஆளும் சக்தியில்லா விட்டால் ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ் வொர்த் புத்த கங்கள் படித்து வீணே.

49. லட்சியமாவது உலகத்துடன் நட்புக் கொள்வதே.

50. சேவைதான் இன்பம், மற்ற இன்பம் தேவையில்லை.

51. வரதட்சனை கொடுத்துக் கல்யாணம் செய்து கொடுக் காமல் கன்னியாக நிறுத்திச் சேவை செய்தல் மேலாம்.

52. மனைவியை இழந்தவன் எப்படி மறுவிவாகம் செய்து கொள்ள உரிமை இருக்கிறதோ அதேபோல், பெண்ணும் செய்து கொள்ளலாம்.

53. அபிப்பிராய பேதங்களினால் வித்தியாசம் ஏற்படலாம் அது பகைமையல்ல.

54. மனிதன் எப்படி நினைக்கிறானோ அப்படியேதான் கோயில்களும், மசூதிகளும், மாதா கோயில்களும்.

55. தைரியம் வேண்டும்.

56. பசுவைக்காப்பது சகோதரதத்துவத்தை வளர்ப்பதாகும்

51. சரீரத்துடன் மனமும் ஒத்துழைக்கவேண்டும்.

58. கடவுள் பக்தர்களைச் சோதிக்கிறார். பலமும் கொடுக்கிறார்.

59. ஏழைகளுக்குச் சாப்பாடு கொடுத்தால் உங்களைத் தெய்வமாகக் கருதுவார்கள்.

60. பலாத்காரத்தைவிட கொல்லாமை சிறந்தது. தண்டிப்பதைவிட கருணை காட்டுவது மனிதத்தன்மைக்குகந்தது. துவேஷம், கோபம், ஆத்திரம் இவைகளைவிட கண்யம், பெருமை பெரிது.

(ஆசையாகிற ஜலம், மன்மதன் என்ற காற்றினால் தூண்டப்பட்டு மோகமாகிற அலைகள், பெண்டாட்டியாகிற சுழல் திமிங்கிலம், முதலைபோன்ற பந்துக்கள், இவை நிரம்பிய சம்சார சாகரத்தில் விழும் மனிதன் தப்புவது கஷ்டம். தப்புவதற்குத் துணைபுரியக் கூடிய படகு பக்திதான். அது கடவுளின் திருவடிகளாகிய கரையில் கொண்டு சேர்க்கும்.) — குலசேகராழ்வார்

வாழ்க்கையின் எந்தத் துறையிலும் முன்னேறி வெற்றி காண விரும்பும் எவருக்கும் கீழே குறிப்பிடப்படும் நாலு படிகளும் மிக மிக முக்கியமானவை:

1. ஒரு குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமென்ற நீங்கா ஆசை.

2. இடைவிடாது நடத்தி முடிப்பதற்கான ஒரு நல்ல திட்டம்.

3. நினைத்த காரியத்தைக் கைவிடாமல் இருக்கும் திடமான புத்தி.

4. திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கேற்ற அனுபவம் மிகுந்தவர்களின் ஆலோசனை.

சுதந்திரப் பாதையில் இந்தியா.

தேதி.	வருஷம்	விபரம்.
	1765	கிளைவ் மாஜி பிரிட்டிஷ் ஆட்சிக்கு அஸ்திவாரம் போட்டவர்.
	1773	வாரென்ஹேஸ்டிங்ஸ் - ஏகாதிபத்தியக் கட்டிடத்தை எழுப்பியர்.
	1830	ராஜாராம் மோகன்ராய் - சமூகசீர்திருத்தவாதி.
	1857	வீரரமணி ஜான்ஸிராணி—முதல் சுதந்திரப்போர் இந்திய சிப்பாய்க்கலகம்.
	1858	விக்டோரியா மகாராணிபிரகடனம்-பார்லிமெண்டு ஆட்சி.
	1864	மசூலிப்பட்டணம் கடல் கொந்தளிப்பு.
	1876	சுரேந்திரநாத் பானர்ஜி-சுதந்திர வேட்கையை உண்டாக்கியவர். பெரும்பஞ்சம் (தாது கருப்பு)
	1885	பம்பாயில் தேசீயக் காங்கிரஸ் கூட்டம்.
	1887	விக்டோரியா ஆட்சி ஜூபிலி விழா.
	1891	இந்திய ஜனத்தணிக்கை.
	1901	இந்திய ஜனத்தணிக்கை. விக்டோரியா மரணம்.
	1902	ஏழாவது எட்வர்ட் முடிசூட்டு விழா.
	1903	வாணியம்பாடி வெள்ளம். (வடாற்காடு)
	1905	கர்ஸன் காலம் - சுதேசி இயக்கம் - அன்னியர் பகிஷ்காரம்
	1907	காங்கிரஸில் பிளவு-தீவிரவாதி திலக்-மிண்டோ மார்லி சீர்திருத்தம்.

1910 வால் நட்சத்திரம். 7-ம் எட்வர்ட் மரணம்.

1911 5-ம்ஜார்ஜ் டில்லிதர்பார். இந்திய ஜனத்தணிக்கை

—8—1914 முதல் உலக யுத்தம்.

22—8—1914 சென்னைமீது ஜெர்மன் சண்டைக்கப்பல் "எம்டனின்" பீரங்கித் தாக்குதல்.

1916 சேதம் மிகுந்த புயல் வீச்சு.

1918 "இன்புளுயன்ஸா" தொத்து வியாதி "மின்னல்" என்னுமிடத்தில் பெங்களூர் மெயில் விபத்து.

11—11—1918 முதல் உலக யுத்த சமாதானம்.

13—4—1919 ஜாலியன் வாலாபாக் படுகொலை.

1920 ஒத்துழையாமை இயக்கம்.

1921 வரிகொடா இயக்கம், இந்திய ஜனத்தணிக்கை. மோப்லா புரட்சி.

5—2—1923 சௌரி - சாரா - கோரச் சம்பவம்.

1924 தென்னிந்திய நதிகளில் பெருவெள்ளம்.

1928 சைமன் கமிஷன் விஜயம் - மறியல்.

1930 காந்திஜி தண்டி உப்புச்சத்தியாக்கிரக யாத்திரை.

1931 இந்திய ஜனத்தணிக்கை.

4—3—1931 காந்தி - இர்வின் ஒப்பந்தம்.

1932 காந்தி உண்ணாவிரதம் - பூனா ஒப்பந்தம்.

15—1—1934 ஒத்துழையாமை இயக்கம்.

31—1—1935 பீகார் பூகம்பம்.

6135 குவெட்டா பூகம்பம்.

1936 5-ம் ஜார்ஜ் மன்னர் வெள்ளி விழா.

1937 5-ம் ஜார்ஜ் மன்னர் மரணம் - பொதுத்தேர்தல்

1—4—1937 ஸ்ரீ K. V. ரெட்டி நாயுடுகாரின் தலைமையில் இடைக்கால மந்திரி சபை.

14—7—1937 ஸ்ரீ ராஜாஜி கீழ் காங்கிரஸ் மந்திரிசபை,

3—10—1939 இரண்டாவது உலக யுத்தம்.

1941 இந்திய ஜனத்தணிக்கை.

6—4—1942 விசாகப்பட்டினம் ஜப்பான் குண்டுவீச்சு.

—8—1942 அன்னிய ஆட்சி வெளியேற இயக்கம்.

—10—1943 சென்னைமீது ஜப்பான் குண்டு வீச்சு.

1945 இரண்டாவது உலகயுத்தம் நிறுத்தம்.

1946 பொதுத்தேர்தல் - காங்கிரஸ் மந்திரிசபை.

15—8—1947 இந்திய சுதந்திர தினம்.

—12—1947 கெஜட் பதிவில்லாத ஊழியர் வேலை நிறுத்தம்.

15—1—1948 ஸ்ரீ ராஜாஜி கவர்னர் ஜெனரல்.

21—1—1948 மவுண்ட்பேட்டன் இங்கிலாந்து சென்றார்.

22—1—1948 இங்கிலாந்து மன்னர் இந்தியா சக்கரவர்த்திப் பட்டத்தைத் துறந்தார்.

30—1—1948 காந்திஜி மரணம்.

31—1—1948 மகாத்மா தகனம்.

22—1—1948 புதுக்கோட்டை சென்னையுடன் சேர்க்கப்பட்டது

—9—1948 ஹைதராபாத் கலகம். இரும்பு நெஞ்சம். சர்தார்படேல் கலகத்தை அடக்கினார்.

1953 புதுக்கல்வி முறை அமுல்.

1—6—1954 புதுக்கல்வி முறை வாபஸ்.

1—11—1954 பிரஞ்சிந்தியா சுதந்திர தினம்.

2—2—1955 ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் கமிட்டி டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் தலைமையில் திருவண்ணாமலை விஜயம். இந்நூலாசிரியர் 2—2—55 மாலை 3 முதல் 4 மணிவரை ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம் விஷயமாக சாட்சியம் அளித்தார்.

3795